
கல்கி
KALKI
20-8-72 45 காச



பினெல்லா ஸ்டார்டஸ்ட் டால்க்கின் சுகந்தக்
கிளுகிளுப்பு நாளமுழுக்க நிலைத்து நிற்கிறது நீங்கள்
விலையுயர்ந்த செனட் பூசியுள்ளீர்களோ
எனப் பிறரை மயங்க வைக்கிறது ஆம்.
பினெல்லா மேனியிலிருந்தால், அத்தரோ
சென்டோ பூச அவசியமேயில்லை' அந்த
அளவு சொகுசான, சோபித சுகந்தம்
அளிக்கும் ஒரே டால்க—பினெல்லா

பினெல்லா
ஸ்டார்டஸ்ட் டால்க்

CBIT-1 TAM

கல்கி




பொருளடக்கம்

பரிதாபி ஆவணி, 4 — ஆகஸ்டு 20, 1972

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 23-00	ரூ. 11-50
இதர நாடுகள்	ரூ. 50-00	ரூ. 25-00
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 27-00	ரூ. 13-50


You are safe with API
BRAKES
* dependable
CLUTCHES
* smooth
TIE ROD ENDS,
STEERING LINKAGES
AND KING PINS
* precision-made
AUTOMOBILE PRODUCTS OF INDIA LIMITED
API-116 R

கல்கி மலர் 32 இதழ் 3

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
— பாரதியார்

நம்பிக்கையை வளர்க்கவும்

தமிழ்நாடு சட்டசபையில் இப்போது உள்ள அமைப்பில் அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தால் அது நிச்சயமாகத் தோல்வியே அடையும் என்று எல்லோருக்கும் தெரியும். எதிர்க்கட்சிக்காரர்களுக்கு மிக மிகத் தெளிவாகவே தெரியும். எனினும் டாக்டர் ஹாண்டே, மற்ற இருபத்தாறு உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து அதன் மீது நான்கு நாட்கள் விவாதம் நடைபெறச் செய்தார் என்றால், அவருடைய தைரியத்தை மட்டும் பாராட்டினால் போதாது. தமிழ் நாட்டில் மக்களிடையே அரசாங்கத்தினிடம் அதிருப்தி எவ்வளவு தூரம் படர்ந்திருக்கிறது என்பதைக் கடமை உணர்ச்சியுடன் எடுத்துக் காட்டி, அரசுக்கு எச்சரிக்கை விடுத்ததற்கு அவருக்கும், மற்றவர்களுக்கும் நாடு கடமைப்பட்டிருக்கிறது.


நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் கருத்தே, குறைகளையும் மக்கள் அடைந்துள்ள இன்னல்களையும் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வர வேண்டும் என்பதுதான்.


குறைபாடுகள் என்னென்ன? போலீஸ் துப்பாக்கிப் பிரயோகமும், அடக்குமுறையும் அதிகரித்துவிட்டன. விவசாயிகள் போராட்டத்தில் உயிர்ச் சேதம் ஏற்பட்டிருந்தும் நீதி விசாரணை இல்லாதது ஜனநாயக முறைக்கு முரணானது. கட்சி மகாநாடுகள் மூலம் ஆவேசமான பேச்சுக்கள் பேசி, உணர்ச்சிகளைத் தூண்டி அரசாங்கம் தனது கட்சிக்காகவே செயல்படுகிறது என்ற எண்ணத்தைப் பரப்புவது மாநிலத்தின் அமைதிக்குச் சாதகமாகாது. ஆளும் கட்சிச் சார்புடைய தனியார் படைகளையும் அணிகளையும் பலப்படுத்தி, அவர்களுடைய வெறியாட்டங்களை ஊக்குவிப்பது மக்களிடையே பீதியையே உண்டாக்கியிருக்கிறது. நிர்வாகத்தில் நேர்மை இல்லை என்பது பரவலாக மக்களிடையே நிலவும் கருத்து. இது ருசுப்பிக்கக்கூடிய விஷயமல்ல. அரசாங்கத்திடமிருந்து எந்தக் காரியம் நடக்க வேண்டுமானாலும் கட்சிக்காரருடைய உதவி மூலம்தான் பெற வேண்டும் என்பது நடைமுறையாகிவிட்டது. நேர்மையானது என்று கருதப்பட்ட நிர்வாக நடைமுறைகளைக்கூடச் சமயத்துக்குத் தக்கபடி மாற்றிக் கொள்ளுவது நிர்வாகத்தைப்பற்றி நம்பிக்கையை வளர்ப்பது அல்ல. தொழில் வளம் பெருக ஊக்கமும் உற்சாகமும் வளர வேண்டியதற்குப் பதிலாகப் பயமும், அமைதியின்மையும் காணப்படுகின்றன. எந்தப் பிரச்னையும் அரசியலுடன் சம்பந்தப்படுத்தியே பேசப்படுவதும், அந்த அடிப்படையிலேயே நடவடிக்கைகள் எடுக்கப்படுவதும், மக்களின் நன்மை கவனிக்கப்படுவதில்லை என்ற எண்ணத்தை உருவாக்குகின்றன. பிரிவினைப் பேச்சும், மாநில சுயாட்சியும் இப்போதெல்லாம் ஒவ்வொரு மாவட்ட மகாநாட்டிலும் காரசாரமாக விவாதிக்கப்படுகின்றன. இவை பற்றிக் கட்சிப் பிரமுகர்களிடத்தில் தெளிவான கருத்துக்கள் இல்லையென்றாலும், பொது மக்களிடையே இவையெல்லாம் வேண்டாம் என்ற ஒருமுகமான கருத்துத்தான் நிலவுகிறது. மாநில கவர்னர் மீது கூறப்படும் குற்றச்சாட்டுகளும், பண்பற்ற பேச்சுக்களும், தமிழ்நாட்டு அரசுக்குப் பெருமை அளிப்பனவாக இல்லை.


சட்டமன்றத்தில் மெஜாரிட்டி பலம் இருக்கிறது என்பதால், அரசாங்கம் மக்கள் நலனுக்காக, மக்களின் மன அமைதிக்கும், வளர்ச்சிக்கும் பாடுபடத் தேவையில்லை; கட்சியை வளர்த்துக் கொண்டால் போதும் என்று நினைப்பதும் செயல்படுவதும் முறையல்ல.

இவ்வம்சங்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது அலசப்படலாம் அல்லது சில விட்டுப் போகலாம். ஆனால் ஓர் உண்மையை இது விளக்கி வைக்கிறது. ஆட்சியாளர்களின் நடவடிக்கைகள் மக்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை என்பதே அது. ஜனநாயக அரசாங்கம் இதற்குச் செவி சாய்க்க வேண்டும்.

இதற்கு மதிப்புக் கொடுத்து நிலைமையைச் சீராக்கிக் கொள்ள முற்பட்டால், மாநிலமே மேம்பாடு அடையும். ஆட்சியாளர்களின் கௌரவமும் உயரும்.


ஹே...ஹே...ஹே! ஆட்டைப் பார்த்துப் புலி என்கிறீங்களே
நல்லா இருக்கு!
மக்கள்
மாநில சுயாட்சி கோரிக்கை
பிரிவினை கோரிக்கை


யானையா..?.
அட்டகாசமா..?.
எங்கே...?
இல்லையே.....
இல்லவே இல்லையே!...
தமிழர் படை


உங்களுக்குத்தான் தமிழ் பிடிக்குமே.... பாருங்க, நம்ம பையன் அழகாகக் கவிதை எழுதி இருக்கிறான்.... பாருங்க வாத்தியாரே!
கவர்னர்
மனுக்கள்
வாத்தியார்
போகாத
வழித்


என் மாதிரி வாலை வெட்டிக்கொண்டால் எவ்வளவு அழகாக இருக்கும்... வாரீர் நண்பர்களே!
தமிழகம்
மாநில சுயாட்சி கோஷம்
இதர மாநிலங்கள்

ராஜாஜியின் கருத்துக்கள்

மின்சாரம் பாய்வதுபோல் சுருக்கென்று உலகக் கருத்தை நமக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்வதற்கு ஒரு மகத்தான வாய்ப்பு வந்திருக்கிறது. இந்த வாய்ப்பை நழுவவிடாது இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் நிலைப்படுத்திக் கொள்ள இந்தியா மேலும் நன்முயற்சி மேற்கொண்டு, உலக நாடுகளின் பேராதரவைப் பெற வேண்டும் என்று தாழ்மையுடன் வலியுறுத்துகிறேன். சிம்லாவில் வித்திட்ட செடி நன்கு வளர்ந்து வருகிறது. இப்போது இந்தியா தனது ராணுவச் செலவைக் கணிசமாகக் குறைத்துக் கொண்டு, அதனைப் பிரகடனம் செய்தால், சிம்லா ஒப்பந்தம் பூரண உருவம் பெறுவதற்கு அது உறுதியாக வகை செய்யும். இதனால் அமெரிக்காவின் கொள்கை மாற்றி அமைக்கப்படும் என்பது சர்வ நிச்சயம்.

சிம்லா உடன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ராணுவச் செலவைக் குறைப்பதாக ஸ்ரீமதி இந்திரா காந்தி அறிவிப்பார் என நம்பி, எதிர்பார்க்கிறேன். ராணுவச் செலவைக் குறைப்பதற்கில்லை என்று ஸ்ரீ ஜகஜீவன் ராம் அவர்கள் துரதிருஷ்டவசமாகக் கூறியிருப்பதை முன்னிட்டே, ஸ்ரீமதி இந்திரா காந்தி மேற்சொன்னவிதம் அறிவிக்க வேண்டியது அவசியமாகிறது. இந்த விஷயத்துக்கு உள்ள முக்கியத்துவத்தை உணர்ந்து, என் யோசனை கவனிக்கப்படும் என நம்புகிறேன்.

★

ஸுப்ரீம் கோர்ட்டிலும் ஹைகோர்ட்களிலும் ஜட்ஜுகளின் எண்ணிக்கையை உயர்த்தவிருக்கிறார்கள். நீதிமன்றங்களில் விசாரிக்கப்படாமல் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை பெருகி வருவதால் இவ்விதம் செய்வதாகக் கூறுவது தகுந்த காரணமாகவே தோன்றும். புதிதாக நியமிக்கப்படும் ஜட்ஜுகளின் தரம் இதில் கவனத்துக்குரிய முக்கியமான அம்சம். நீதிமன்றங்களின் கௌரவத்தையும் சுதந்திரத்தையும் பேணிக் காக்கும் விதத்தில் புது நியமனங்கள் அமைய வேண்டும். குறிப்பாக, அரசாங்க நிர்ப்பந்தத்துக்கு எதிராக மக்களின் உரிமைகளைப் பாதுகாத்துத் தருகிற மகாசாஸனமாகிய அரசியல் நிர்ணய மூல சாஸனத்துக்குக் குழி பறிப்பவர்களை ஜட்ஜுகளாகத் தேர்வு செய்யக்கூடாது. கோலக்நாத் வழக்கில் அடிப்படை உரிமைகளை அரசாங்கம் பறிக்கக் கூடாது என்று முன்பு தீர்ப்பு செய்யப்பட்டதை மாற்றி, அரசாங்கக் கொடுங்கோன்மையை வலுப்படுத்தி, மக்கள் பெற்றுள்ள சாஸன சுதந்திரங்களை அழிப்பதற்குச் சாதகமாகவே நமது நிர்வாகத் தலைமைப் பீடம் புது ஜட்ஜுகளை எளிதாகத் தேர்ந்தெடுத்துவிட முடியும்.

அறநெறிப் பண்புகள் வளர வேண்டும்



ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் காந்தியடிகள் விடுதலைப் போராட்டத்தைத் துவக்கியபோது மக்களுக்கு இருந்த தியாக உணர்வு இப்போது என் நினைவுக்கு வருகிறது. ஏதாவது ஒரு வகையில் — அவசியமானால் அறநெறிகளுக்குப் புறம்பான வழிகளிலும் — அதிகாரத்தை அடைவதற்குச் சமுதாயத்தின் உயர் மட்டத்திலிருப்பவர்களுக்கு இப்பொழுது இருந்துவரும் ஆவலை அன்றைய நிலைமைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மன வருத்தம் அடைகிறேன். இந்தியாவைப் போல் உலகெங்கிலும் அறநெறிக் கொள்கைகள் இப்போது புறக்கணிக்கப்பட்டிருப்பது ஒரு வகையில் ஆறுதல் அளிப்பதாய் இருக்கிறது. ஆனால் இதை ஆறுதல் என்று சொல்வதே அர்த்தமற்றதாகும்.

கடவுள் கருணையுள்ளவர். எனவே, ஏதாவது ஒரு வகை ஆன்மீகப் புரட்சி வருமென்று நான் நம்புகிறேன். இத்தகையதொரு புரட்சி அழிவின் வாயிலாகவோ அல்லது மகிழ்ச்சிக்குரிய வகையிலோ ஏற்படக்கூடும்.

— சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

தமிழ் நாட்டிலே

— தீரன் —

கவர்னரும் மக்கள் குறைகளும்

சமீபத்தில் மதுரையில் நடந்து முடிந்த தி. மு. க. மகாநாட்டுக்குத் தலைமை வகித்த முரசொலி மாறன் சம்பந்தம் இல்லாமல் மாநில கவர்னரைப் பற்றிய சில கருத்துக்களை வலிந்து கூறியிருக்கிறார். கவர்னரைப் பற்றிய மாறனின் பேச்சுக்கள் ஏதோ ஓர் ஆத்திரத்தில் பொதுவான நாகரிக எல்லைகளையும் மீறிப் போயிருப்பது வருந்தத் தக்கது. 'தி. மு. க. வுக்கு எதிராக யாரோ விலாசம் இல்லாதவர்கள் தேடி வந்து கொடுக்கும் மகஜர்களை எல்லாம் கவர்னர் பெற்றுக் கொள்ளலாமா?' என்றும் 'கவர்னர் பதவியால் ஆண்டு ஒன்றுக்குப் பதின்மூன்று லட்ச ரூபாய் செலவாகிறதே' என்றும், 'கவர்னர் பதவி மத்திய அரசின் ஒற்றர் பதவி' என்றும், 'அரசியல் சட்டம் 356வது பிரிவின்படி இங்கே ஆட்சி நடக்கவில்லை என்று தமிழ் நாட்டு கவர்னர் எழுதினால் போதும். மறு விநாடியே அல்லது மறுநாளே குடியரசுத் தலைவர் இரி சட்ட சபையைக் கலைத்து விடலாமே' என்றும் பேசியிருக்கிறார் மாறன். இதற்கெல்லாம் ஒரு படி மேலே போய், 'கலைஞரின் அனுமதியில்லாமல் கவர்னர் எப்படிப் பொதுமக்களின் மனுக்களை வாங்கலாம்?' என்று உரத்த குரலில் கூவிக் கேட்டிருக்கிறார் வேறொரு தி. மு. க. பிரமுகர்.

'மதுரை மகாநாட்டுக்காகத் தங்களிடம் கட்டாய வசூலுக்கு வந்தவர்கள்' பற்றி கவர்னரிடம் குறை சொல்லி மகஜர் கொடுத்தார்களே, அவர்களை எண்ணித்தான் மாறன் குமுறியிருக்க வேண்டும். நமக்கு வேண்டாதவர்களை யெல்லாம் விலாசம் தெரியாதவர்கள் என்று சொல்லி நீட்டி முழக்கிப் பேசிவிடுவது நமக்கு வேண்டிய சிலர் கைதட்டி ஆரவாரம் செய்யத்தான் பயன்படுமே யன்றி வாதத்துக்குப் பயன்படாது என்பது மாறனுக்கும் தெரிந்திருக்கத்தான் வேண்டும்.

மரியாதைக்குரிய ராணுவம்

ஒரு தேசத்தின் ராணுவம் என்பது அந்நாட்டு மக்களின் மரியாதைக்கும், போற்றுதலுக்கும், பெருமிதத்துக்கும் உரியது. தேசபக்தியுள்ள யாரும் விளையாட்டுக்காகக்கூடத் தங்கள் தேசத்து ராணுவத்தைக் குறைத்துப் பேச மாட்டார்கள். ஆனால் சமீபத்தில் நடந்து முடிந்த தி. மு. க. வின் மதுரை மாநாட்டில் அநாவசியமாக இந்திய ராணுவம் வம்புக்கு இழுக்கப்பட்டிருக்கிறது.

'வங்க தேசம் இந்திரா காந்தியின் திறமையாலோ, இந்திய ராணுவத்தின் திறமையாலோ வெற்றி பெறவில்லை. மக்கள் எழுச்சியால்தான் வெற்றி பெற்றது. இந்திராவின் திறமையாலோ இந்திய ராணுவத்தின் திறமையாலோ வங்க தேசம் விடுதலை பெற்றது என்றால் பாகிஸ்தான் காஷ்மீரை ஆக்கிரமித்த போது நமது ராணுவம் ஏன் வெற்றி பெறவில்லை? சீன ஆக்கிரமிப்பின் போது ஏன் வெற்றி பெறவில்லை?' என்ற பொருள்பட ஒரு தி. மு. க. பிரமுகர் பேசியிருக்கிறார்.

'இந்த ஆட்சி கவிழ்க்கப்பட்டுத் தமிழ் நாட்டுக்கு ராணுவம் அனுப்பப்படுமானால் அந்த ராணுவத்தைக் களத்தில் சந்திக்கவும் நாங்கள் தயார். தைரியமிருந்தால் இராணுவத்தை அனுப்பிப் பார்க்கட்டும். பிறகு



என்ன நடக்கிறது என்று தெரியும்'—என்று ஒரு முழக்கம் வேறு!

இப்படியெல்லாம் கொதி கொதித்துக் குதி குதித்துப் பேசும்படி இப்போது தமிழ் நாட்டுக்கு என்னதான் ஆபத்து வந்துவிட்டதென்று யாருக்கும் புரிய மாட்டேன் என்கிறது. இராணுவத்தைப் பற்றி இப்படி எல்லாம் சிறுபிள்ளைத்தனமாக இரண்டாந்தரமான அரசியல் கட்சி மகாநாடுகளில் மூன்றாந்தரப் பேச்சாளர்கள் நான்காந்தரமாக ஏன் பேசுகிறார்கள் என்பதும் புரியவில்லை. இதே கட்சி அரசுதான் சென்ற மாதம் விவசாயிகள் போராட்டத்தின் உச்ச நிலையில் கோவை நகரைக் கட்டுப்படுத்த இராணுவத்தின் உதவியை நாடியது என்பதைத் தமிழ் மக்கள் இன்னும் மறந்து விடவில்லை.

'கலைஞரின் மகா நாடகம்'

மதுரையில் நடந்த தி. மு. க. மகாநாட்டின் மூலம் தமிழ் நாட்டின் தற்போதைய முதல்வர் தாம் ஒரு 'தலைசிறந்த கலைஞர்' என்பதை நிரூபித்து விட்டார். மகாநாட்டின் போது அபாரமான நடிப்புக் கலைத் திறனைக் காட்டித் தமிழகத்தையே திணற அடித்திருக்கிறார் அவர். மாநாட்டு ஊர்வலத்தைப் பற்றி மற்றவர்கள் அபிப்பிராயம் சொல்லு முன் கலைஞரே முந்திக் கொண்டு,

'எழுச்சி, உணர்ச்சி, மகிழ்ச்சி மூன்றும் கலந்த ஊர்வலம் இது. இதுவரை இந்தியாவிலே நடைபெற்ற கட்சி ஊர்வலங்களிலேயே இதுதான் பெரிய ஊர்வலம்' — என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லிவிட்டார். எத்தனை அருமையான சாகஸம் இது. 'தமிழர் படை என்ற ஒன்று கிடையாது' என்று அவர் கூறிய வாய் மூடுவதற்குள்ளேயே, 'தமிழர் படை போதுமா? இன்னும் கொஞ்சம் வேண்டுமா?' — என்று ஊர்வலத்தில் கோஷம் முழக்கப்பட்டிருக்கிறது.

'இந்திரா என்ற பசு சாந்தமாயிருக்கும் போது (பசு - கன்று: இந்திரா சின்னம்)

மோகன் குமாரமங்கலம், சி. சுப்பிரமணியம் போன்ற கன்றுகள் துள்ளுகின்றன' என்று உவமை கூறிய கலைஞர் மதுரைமாநாட்டில் தாம் அமைதியா விருந்து தம் கன்றுகள் சிலவற்றைத் தாராளமாகத் துள்ள விட்டிருக்கிறார். மாநாட்டில் நகைச்சுவைகளும், தாக்குதல் காட்சிகளும், ஸ்டண்ட் சீன்களும் கலைத் திறமையோடு கையாளப்பட்டிருக்கின்றன.



கவர்னர்மீது கண்டனப் படலம், இராஜுவக் கிண்டல் படலம், தனித் தமிழ்நாடு படலம், 'நாடு உள்ளவரை இனி இங்கே தி.மு.க. ஆட்சிதான் உண்டு' என்ற மதுரை முத்துவின் பயமுறுத்தல் படலம் — எல்லாம் முடிந்த பின் நாடகத்தின் உச்ச நிலையாக முதல்வர் கலைஞர் எதிலுமே பட்டுக் கொள்ளாமல் சுருக்கமாகப் பேச்சை முடித்துக்கொண்டது 'கிளைமாக்ஸ்'. மகாநாடு முடிந்து சென்னையில் பத்திரிகை நிருபர்களைச் சந்தித்து அவர்கள் கேள்விகளுக்குப் பதில் கூறியபோது, 'மதுரையில் நடக்கக் கூடாதது எதுவுமே நடக்கவில்லை. பேசக் கூடாதது எதுவுமே பேசப்படவில்லை' என்பது போல் சாந்தஸ்வரூபியாக முதல்வர் நடித்த நடிப்போ அவரைச் சாதாரணக் கலைஞர் நிலையிலிருந்து 'உலக மகா கலைஞர்' நிலைக்கே உயர்த்திவிட்டது போங்கள்.

முதல்வரின் வருத்தம்

விவசாயிகள் போராட்டத்தின்போது தமிழ் நாடு அரசு நடந்துகொண்ட முறையைக் கண்டித்துப் பழையகாங்கிரஸ், இந்திரா



காங்கிரஸ், சுதந்திரா, வலது கம்யூனிஸ்டு ஆகிய கட்சிகள் நடப்பு சட்டசபைக் கூட்டத் தொடரில் தனித் தனியாக நோட்டீஸ் கொடுத்து அரசின் மீது நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொண்டு வந்தது குறிப்பிடத் தக்கது. இந்தச் சபையில் கடந்த காலங்களில் ஏற்கெனவே ஐந்து முறைகள் இதுபோல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப் பட்டாலும் இப்போது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. தி. மு. க. தவிர உள்ள எல்லா மிக முக்கிய கட்சிகளும் இதில் ஒன்றுபட்டிருப்பது கவனிக்கத் தக்கது. இந்த ஒற்றுமையை ஏற்படுத்தித் தந்த பெருமை விவசாயிகளுக்கு உரியது. இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசுகையில் டாக்டர் ஹாண்டே கூறிய குற்றச் சாட்டுக்களின்போது முதல்வர் குறுக்கிட்டு,

''பழைய ஆட்சிக் காலத்தில் நடந்ததை எல்லாம் நினைத்துக் கொண்டு இப்போது நீங்கள் இப்படிக் கூறுகிறீர்கள்'' என்றவுடன் சிறிதும் தயங்காமல், ''உங்களுடன்தான் நான் அரசியலையே ஆரம்பித்தேன். அதனால் தான் உங்களைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும்'' என்று ஹாண்டே பதில் கூறியிருக்கிறார். உடனே முதல்வர், ''எங்களுடன் அரசியலை ஆரம்பித்த நீங்கள் இப்போது இப்படி மாறிவிட்டீர்களே என்றுதான் நாங்கள் வருந்துகிறோம்'' என்று வருந்தியிருக்கிறார். இப்போது மாறிப்போனது யார் என்பதைச் சிந்திக்க வேண்டாமோ ?

சிம்சன் எப்போது திறக்கும் ?

ஒன்றரை மாத காலத்துக்கு மேலாகச் சிம்ஸன் தொழிற்சாலைகள் மூடப்பட்டுச் சுமார் பத்தாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் வேலையின்றி வருவாய் இன்றித் தவிக்கின்றனர். வேலையின்றிச் சிரமப்படுவது போதாதென்று அங்கங்கே தாக்குதலுக்கும் வன்முறைக்கும் ஆளாகாமல் வீடு திரும்ப வேண்டுமே என்ற தவிப்பும் பயமும் வேறு இவர்களிடையே நிலவுகிறது. இந்த உள்ளூர்ப் பிரச்னை பற்றி, உடனடிப் பிரச்னை பற்றி ஒரு சுமுகமான முடிவுக்கு வர முடியாத அரசின் முதல்வரோ 'உத்தரப்பிரதேசக் கலவரத்தைக் காணத் தூதுக் குழு அனுப்புவது'— 'மாநில சுயாட்சியைப் பறைசாற்றிட வரிப்புலிகளை வாவென்றழைக்கும் வளமதுரை மாநாடு' போடுவது போன்ற காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார். உள்ளூரில் ஒரு தொழிற்சாலை மூடப்பட்டுப் பல நாட்களாகியும் அதைத் திறக்கவோ, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவோ வக்கில்லாமல் வேறு எந்தெந்த மாநிலங்களையோ பற்றி வீண் பேச்சுக்களை அள்ளி வீசிக் கொண்டிருப்பது வேடிக்கையாகத்தான் இருக்கிறது.

வடுவூர் குடமுழுக்கு

தக்ஷிண அயோத்தி என்றும் வகுளாரண்யம் என்றும் பெயர் பெற்றது தஞ்சை மாவட்டத்தின் கண் உள்ள வடுவூர். இங்கு கோவில் கொண்டுள்ள ஸ்ரீ கோதண்டராமனின் ஜகன்மோகன லாவண்யம் சொல்லில் அடங்காது. வரப்பிரசாதியான இப்பெருமானுக்குப் பலர் வேண்டுதல் செய்து கொள்வதால் வடுவூர் ஒரு பிரார்த்தனை ஸ்தலமாகவும் விளங்குகிறது. பெருமை பெற்ற வடுவூர் ஸ்ரீ கோதண்டராமர் ஆலயத்தில் திருப்பணிகள் செவ்வனே பூர்த்தி செய்யப்பெற்று இம்மாதம் 27-ந்தேதி காலை 7-30 மணிக்கு மேல் 8-30 மணிக்குள் மகா சம்ப்ரோக்ஷணம் நடக்கிறது. பக்தகோடிகள் கலந்து கொண்டு பரமன் அருளுக்குப் பாத்திரராக வேணும்.



ஆலயமும் தெய்விகக் கலைகளும்

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் இந்தியாவுக்கு வந்த மெகஸ்தனிஸ் அப்போது நம் ஜனங்கள் எவ்வளவு உத்தமர்களாக வாழ்ந்தார்கள் என்பதைக் கூறியிருக்கிறான். 'இந்திய மக்களுக்குப் பொய்யே சொல்லத் தெரியாது; தெருவில் கிடக்கிற செல்வத்தைக்கூட எடுத்துச் செல்ல மாட்டார்கள்' என்றெல்லாம் மெகஸ்தனிஸ் சொல்லியிருக்கிறான். அந்தக் காலத்து ஜனங்களின் மனசு மாதிரியே இப்போதும் இருக்கக் கூடாதா என்று ஆசையாக இருக்கிறது.

அன்றைக்கு அவர்கள் அவ்வளவு உயர்வாக இருந்ததற்குக் காரணம் என்ன? இன்று நாம் இவ்வளவு தாழ்ந்து போய்விட்டதற்குக் காரணம் என்ன? அந்தந்தக் காலத்தின் சூழ்நிலையே அந்தந்த மனப்பான்மைக்கும் காரணமாக இருக்கிறது. பழங்காலத்தில் பொது ஜனங்கள் எல்லாரும் கோவிலுக்குப் போனார்கள். அங்கே அவர்களுக்கு நல்வழி கூறுவதற்காக மகாபாரதம் முதலிய சத்கதைகள் நடைபெற்றன. இதற்காகவே ராஜாங்கத்தில் மானியம் தரப்பட்டு வந்தது. நாடகம் கூத்து எல்லாம் கூடத் தெய்வ சம்பந்தமாகவே இருந்தன. தங்கள் தொழிலைச் செய்வது, ஆலய தரிசனம், சத்கதை சிரவணம், இவற்றுக்கே மக்களின் பொழுது சரியாக இருந்தது. இதனால் யோக்கியர்களாகவே இருந்தார்கள். இப்போது ஜனங்களைக் கவர்ந்திழுப்பதற்கு என்ன என்னவோ ஆபத்துக்கள் எல்லாம் வந்துவிட்டன. தர்மத்துக்கு விரோதமான படக் காட்சிகள், கதைப் புத்தகங்கள் எல்லாம் அதிகமாகி விட்டன. ஜனங்கள் இதற்கிடையில் தத்தளித்துக் கொண்டிருக்கும்போது பலவிதமான அரசியல் கட்சிகள் வேறு அவர்கள் புத்தியைக் கலக்கிக் கொண்டிருக்கின்றன. எங்கேயும் சஞ்சலம், அதிருப்தி, யோக்கியதைக் குறைவு இவை அதிகரித்துவிட்டன.

பழைய காலத்தில் ராஜாவின் மானியத்துடன் சத்கதை நடந்தபோது தலைமுறை தத்துவமாக அது செழித்து வந்தது. இப்போது ஹரிகதை, உபந்நியாசம் செய்கிறவர்கள் தங்கள் தலைமுறையோடு அது போகட்டும் என்று நினைக்கிறார்கள். அதேபோல் அர்ச்சகர்கள் தங்கள் தலைமுறையோடு அர்ச்சனைத் தொழில் போகட்டும் என்று எண்ணுகிறார்கள். முன்பு அரசர்கள் தெய்வ பக்தியை வளர்த்து எங்கு பார்த்தாலும் சாஸ்திரோக்தமாக ஆலயங்கள் கட்டியதால் ஆகம சாஸ்திர வித்வான்கள், சிற்பிகள், ஸ்தபதிகள் ஆகியோர் வம்சாவளியாகச் சுபிட்சமாக வாழ்ந்தனர். இன்றைய சூழ்நிலையிலோ இவர்கள் யாவரும் தங்களோடு இந்தத் தொழில் தொலையட்டும் என்று நினைக்கும்படியாகிவிட்டது. ஈச்வர சம்பந்தத்துடனேயே ஆயிரம் காலப் பயிராக வளர்ந்த நாட்டுக் கலைகளும் இப்போது மங்குகின்றன. துரௌபதி அம்மன் கோயிலில் உடுக்கடித்துப் பாரதம் சொல்கிறவன், கரகம் ஆடுகிறவன், அரிச்சந்திரன் கூத்துப் போடுபவன் எல்லாரும் அடுத்த தலைமுறையை இந்தத் தொழிலில் பழக்கவில்லை. நாட்டுக் கலைஞர்களுக்கு முன்பு ராஜாங்க மானியம் கிடைத்து வந்தது. இப்போது 'பழைய கிராமப் பண்பாடு' என்று பெரிதாகப் பேசினாலும் இந்தக் கலைகளுக்கு ஆதரவின்றி அவை நசிக்கின்றன.

இந்தக் கலைகள் ஓங்கி வளர்ந்த நாளில் தேசம் எப்படி இருந்தது என்று மெகஸ்தனிஸ் 'சர்டிபிகேட்' கொடுத்திருக்கிறான். இவை எல்லாம் மங்கிப் போயிருக்கிற இன்றைக்குத் தேசம் எப்படி இருக்கிறது? எங்கே பார்த்தாலும் பொய்யும், வஞ்சமும், கலப்படமும், அதர்மமும் மிகுந்துவிட்டன. இது நிவிருத்தியாக வழி பழைய காலத்தைப் போலக் கோயில்களைச் சமூக வாழ்வின் மத்திய ஸ்தானமாக்கி, அன்று போல் இப்போதும் அங்கே தெய்வ சம்பந்தமான பழம் கலைகளை வளர்ப்பதுதான். க்ஷேத்திரங்களில் மகா புருஷர்கள் உண்டாக்கிய சாந்நித்யத்தை வேத மந்திரங்களாலும் ஆகம சாஸ்திர விதிகளாலும் ரட்சித்து வரவேண்டும். ஆலயங்களின் சாந்நித்தியம், அங்கு ஆகம சாஸ்திர மறிந்த ஸ்தபதிகள் மூலம் திருப்பணி, கோயிலில் எப்போதும் சத்கதா சிரவணம், கிராம தேவதைக் கோயில்களில் பூசாரியின் பாரதக் கதை இவற்றை ஏற்படுத்தி விட்டால் அர்ச்சகர்களுக்கும் சிற்பிகளுக்கும் மற்றக் கலைஞர்களுக்கும் வாழ்வு தருவதோடு, தேசத்துக்கே நல்ல வாழ்வு தந்ததாகும்.

உங்கள் கணவர் வேண்டும் பண்டமெல்லாம் உண்டு மகிழட்டுமே!

ஸான்ஸைம் மல்ட்டி-யென்ஸைம் காம்பௌண்ட்

எல்லா வகை உணவுப் பண்டங்களையும் விரைவில் ஜீரணிக்கச் செய்கிறது.

மைக்ரோன் செய்யப்பட்ட 'ஸான்ஸைம் காம்பௌண்ட்' ஒரே ஒரு பொட்டலம் பவுடர் அல்லது 3 மாத்திரைகள் அஜீரணத் தொல்லைகளிலிருந்து பூரண விடுதலை அளிக்கிறது. உலகெங்கும் பாராட்டு பெற்ற ஜீரணத் தூண்டு கோலான மல்ட்டியென்ஸைம் 'ஸான்ஸைம் காம்பௌண்ட்' இன்சுவையும் நன்மணமும் கொண்டது.

'ஸான்ஸைம் காம்பௌண்ட்' 4 சிறந்த வழிகளில் செயல்புரிகிறது.

- 'ஸான்ஸைம் காம்பௌண்ட்' எல்லாவித உணவுப் பொருட்களையும் ஜீரணித்து, சத்துக்களை உட்கிரகிப்பதோடு பசியையும் தூண்டுகிறது.
- 'ஸான்ஸைம் காம்பௌண்ட்டில்' உள்ள 'லிபிக்கன்' என்னும் விசேஷ நுரை எதிர்ப்புப் பொருள் வாயுவை விரைவில் கலைத்து, வலியைப் போக்குகிறது.
- 'ஸான்ஸைம் காம்பௌண்ட்' கொஞ்ச பொழுதில் அமிலங்களைச் சமனப்படுத்துகிறது.
- 'ஸான்ஸைம் காம்பௌண்ட்' இன்சுவையும் நன்மணமும் கொண்டிருப்பதால் சாப்பிட அருவருப்பு தோன்றுவதில்லை. மேலும் மலச் சிக்கல் ஏற்படாமல் தடுக்கிறது.


ஜீரண பலமே பூரண நலமாகும்.

உடனடி நிவாரணத்துக்கு மைக்ரோன் செய்யப்பட்ட பவுடர் உட்கொள்ளவும். மாத்திரையாகவும் ஸான்ஸைம் கிடைக்கிறது.

சாப்பிடும் அளவு: உணவுக்குப்பின் தண்ணீருடன் அல்லது தாம்பூலத்துடன் சாப்பிடவும் ஒரு பொட்டலம் அல்லது 2 முதல் 4 மாத்திரைகள்.

இலவச விற்பனை வெளியீட்டுக்கு எழுதவும்.

'ஸான்ஸைம் காம்பௌண்ட்' எல்லா பிரபல மருந்து கடைகளிலும் கிடைக்கிறது.





யூனி ஸாங்க்யோ லிட்.

22, க. தேசாய் ரோடு, மம்பலம்-33.

PRATIBHA 1711-29 Tam R

தமிழ்நாட்டிற்கு விநியோகஸ்தர்கள்:

M/s கணபதி & கோ, 108/104, லிங்கி செட்டித் தெரு, த.பெ. நெ. 1080, சென்னை-1



அலை ஓசை

அமரர் கல்கி

22. கதவு திறந்தது!

நள்ளிரவு பன்னிரண்டு மணி அடித்தது. சீதா 'ஒன்று, இரண்டு, மூன்று' என்று எண்ணி வந்தாள். பன்னிரண்டு அடித்ததும், ''சரி, இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறது; அதுவரையில் தூங்காமலிருக்க வேண்டும்!'' என்று எண்ணிக்கொண்டாள். ஆனால் அப்படி ஒன்றும் தூங்கிப் போய்விடுவோம் என்கிற பயம் கிடையாது. அன்றிரவு நிகழ்ந்த சம்பவங்களுக்குப் பிறகு அவ்வளவு சுலபமாகத் தூக்கம் வந்து விடுமா என்ன? வராதுதான். அன்றியும் தூங்கினால் பயங்கரமான சொப்பனங்கள் காணுவோமோ, என்னவோ? இராத்திரி முழுதும் தூங்காமல் இருந்து விட்டாலும் நல்லதுதான். ஆனால் அது மாதிரியே மற்றவர்களும் தூங்காமலிருந்தால் என்னத்தைச் செய்வது? அவர்களுக்கும் தூக்கம் வருவது கஷ்டமாகத்தான் இருக்கும். அடுத்த அறையில் படுத்திருக்கும் இவரும் அம்மாஞ்சியும் இன்னும் ஏதோ பேசுகிறார்கள். பன்னிரண்டு மணிக்கு மேலே என்ன பேச்சு வந்தது? பேசாமல் தூங்கக் கூடாதோ? — இதோ பக்கத்தில் படுத்திருக்கும் தாரிணியும் தூக்கம் வராமல் படுக்கையில் புரளுகிறாள்.

நினைக்க நினைக்க ஆச்சரியமாக இருக்கிறது. இப்படியெல்லாம் கதைகளில் நடக்கும் என்று படித்திருக்கிறோம். உண்மையிலேயே நடக்குமென்று யார் நினைத்தார்கள்? மகள் இங்கே படுத்திருப்பது தெரியாமல் தாயார் கொல்லைப்புறத்து அறையில் படுத்திருக்கிறாள். தாயார் இதே வீட்டில் இருப்பது தெரியாமல் மகள் தூங்குகிறாள். ஒரு வேளை தெரிந்து விட்டால்?... அதுவும் தாயார் கையில் இரத்தக் கறையுள்ள கத்தியுடன் வந்து ஒளிந்து கொண்டிருக்கிறாள் என்று மகளுக்குத் தெரிந்தால்?

இதெல்லாம் தனக்குத் தெரிந்திருக்கும்போது சொல்லாமல் வைத்திருப்பது சரியா? ஆனால் எப்படிச் சொல்ல முடியும்? தன்னுடைய புரு

ஷன் மட்டும் தனியாக இருந்தாலும் சொல்லலாம். மற்ற இருவர் இருக்கும் போது எப்படிச் சொல்வது? அவள் தான் கொலைகாரி என்பது என்ன நிச்சயம்? காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது போல் இருக்கலாமல்லவா? பைத்தியம் பிடித்த நாயைக் கொன்றதாக அவள் சொன்னது ஏன் உண்மையாயிருக்கக் கூடாது?... ஆனால் எதற்காக இப்படி இரகசியமாக அவள் வந்திருக்க வேண்டும்? தன்னை எப்படிப் பயப்படுத்தி விட்டாள்?... அடாடா! லலிதாவுக்கு எழுதிய கடிதத்தை ஆபீஸ் அறை மேஜை மேலேயே வைத்திருக்கிறோமே? எடுத்து வைக்க மறந்துவிட்டோமே? அதை யாரும் பார்த்திருக்க மாட்டார்கள். பார்த்தால் இவர்தான் பார்க்க வேண்டும். ஆனால் என்னுடைய கடிதங்களையோ, எனக்கு வரும் கடிதங்களையோ இவர் பார்ப்பதேயில்லை. எவ்வளவு உயர்ந்த குணம்! தவறிக் கண்ணிலே பட்டிருந்தாலும், 'லலிதா' என்ற பெயரைப் பார்த்ததும் மேலே படிக்க மாட்டார். அதை நினைத்தால் வேடிக்கையாகத்தான் இருக்கிறது. இவரை லலிதா கல்யாணம் செய்து கொண்டு இந்த வீட்டில் இப்போது குடித்தனம் பண்ண வேண்டியது. அவள் இருக்க வேண்டிய இடத்தில் நாம் இருக்கிறோம். அதற்கு என்ன செய்யலாம்? அவரவர்களுக்குக் கடவுள் விதித்திருக்கிறபடிதானே நடக்கும்?... இதென்ன? கண்ணை இப்படிச் சுற்றிக் கொண்டு வருகிறதே? தூங்கக் கூடாது: இன்றைக்குத் தூங்கக் கூடாது...

'டிணிங்', 'டிணிங்' என்று இரண்டு மணி அடித்ததைக் கேட்டுச் சீதா விழித்துக்கொண்டாள். கடவுளே! தூங்கிப் போய் விட்டோம் போலிருக்கிறதே? இரண்டு மணிதான் ஆயிற்றா? சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தைச் சீதா பார்த்தாள். இரவு நேரத்துக்கென்று போட்டிருந்த மிக மங்கலான சிவப்பு பல்பின் வெளிச்சத்தில் கடிகாரம் இரண்டு மணி காட்டுவது தெரிந்தது. இவ்வளவுதானே? இப்போது கூட அந்த அறைக்குப் போகலாம். ஆனால் தடபுடல் செய்யக்கூடாது. சத்தமில்லாமல் எழுந்திருக்க வேண்டும். அடுத்த அறையில் புருஷர்களும் இந்த அறையில் தாரிணியும் நன்றாகத் தூங்குகிறார்களா என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

அது என்ன சத்தம்? கதவு திறக்கிற சத்தம் போலிருக்கிறதே! அந்த நேரத்தில் எந்தக் கதவு திறக்கிறது? ஒரு வேளை.... இல்லை, இல்லை. அடுத்த வீட்டுக் கதவாயிருக்கும்; அல்லது சத்தம் கேட்டதே வெறும் பிரமையாயிருக்கும். இருந்தாலும் சற்றுப் பொறுத்து எழுந்திருக்கலாம். மறுபடியும் தூங்கி விடக் கூடாது. இதோ தாரிணி படுக்கையில் ஒருக்களித்துப் படுத்துக் கொண்டு நன்றாகத் தூங்குகிறாள். தூங்கட்டும்; அதுதான் நமக்கு வேண்டியது.



ஐயோ! இது என்ன!... அதோ அந்த நிலைக்கண்ணாடியில் மங்கலாகத் தெரியும் உருவம்! பயங்கரமாயிருக்கிறதே! முகத்திலே தாடி! தலையிலே துருக்கிக் குல்லா! கண்களில் நெருப்புத் தணல்!... சீதாவின் உடம்பில் ஒரு நிமிஷம் இரத்த ஓட்டம் அடியோடு நின்று போயிற்று. கைகால்கள் வெலவெலத்து அசைவற்றுப் போயின. ஆகா! அந்த உருவத்தை இப்போது காணவில்லை! ஏதோ ஒரு கைமட்டும் இருட்டிலிருந்து தனியாக வெளிப்பட்டு அந்த உருவத்தைத் தொட்டு அழைத்துக் கொண்டு போன மாதிரி தோன்றியது. எப்படியோ, அந்த உருவம் போய் விட்டது. ச்சீ! எல்லாம் வெறும் பிரமை!

சீதா படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள். கண்களைத் துடைத்துக்கொண்டு எதிர்ச் சுவரில் பதித்திருந்த நிலைக்

கண்ணாடியிலே பார்த்தாள். திரும்பி, திறந்த ஜன்னலையும் பார்த்தாள். ஒன்றுமேயில்லை. வெறும் பிரமைதான்!

அடுத்த அறையில் சத்தமே இல்லை. நன்றாகத் தூங்குகிறார்கள். தாரிணியும் தூங்குகிறாள். இதுதான் சமயம், ரஸியா பேகத்தைப் பார்ப்பதற்கு. அவளுக்கு எச்சரிக்கை செய்துவிட வேண்டியது அவசியம். பொழுது விடிந்தபிறகு அவள் இங்கே இருக்கக் கூடாது.

தலையணையின் அடியில் சீதா கையை விட்டுத் துழாவி அங்கே இருந்த சாவியை எடுத்துக் கொண்டாள். சிறிது கூடச் சத்தம் செய்யாமல் படுக்கையிலிருந்து எழுந்தாள். எதிர்ப் பக்கச் சுவரில் ஒரு கதவு இருந்தது. அந்த வழியாகச் சென்றால் இவரும் சூரியாவும் படுத்திருக்கும் அறை இருக்கிறது. வலது பக்கம் இருந்த வாசற்படி வழியாகப் போனால் சாப்பாட்டு அறைக்குள் போய் அங்கிருந்து கொல்லைப் பக்கம் போகலாம். யாருக்கும் தெரியாது...



வலது பக்கத்துச் சுவரண்டை சென்று அங்கிருந்த கதவைச் சத்தமில்லாமல் திறந்தாள். ஜாக்கிரதைக்கு ஒரு தடவை திரும்பிப் பார்த்தாள். தாரிணி தூங்கிக் கொண்டுதானிருக்கிறாள். ரொம்ப நல்லதாய்ப் போயிற்று.

தன்னுடைய காலடிச் சத்தம் தன் காதுக்குக் கூடக் கேளாதபடி சீதா மெள்ள மெள்ள அடி எடுத்து வைத்து நடந்து போனாள். கடைசியாக, அந்தத் தட்டு முட்டுச் சாமான் அறை வந்தது. இருட்டில் கையினால் தடவிப் பூட்டு இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்தாள். சாவியைப் பூட்டுக்குள் செலுத்தப் பார்த்தாள். எவ்வளவு முயன்றும் முடியவில்லை. இது என்ன சங்கடம்? விளக்குப் போட்டுத்தான் ஆகவேண்டும் போலிருக்கிறது. போட்டால் என்ன? இங்கே யார் வரப். போகிறார்கள்? வெளிச்சம் கொஞ்சம் இருந்தால்தான் நல்லது. இருட்டில் திடீரென்று கதவு திறந்ததும், அந்த ஸ்திரீ... ரஜனிப்பூர் பைத்தியக்காரி... அலறிக் கொண்டு எழுந்தால்? அவள் கையில் கத்தி வேறு இருக்கிறது!

கையினால் தேடி மின்சார விளக்கு இருக்குமிடத்தைக் கண்டுபிடித்து,

விளக்கைப் போட்டாள்... அது என்ன சத்தம்? யாரோ நடக்கும் காலடிச் சத்தம் மாதிரிக் கேட்டதே!... ஒருவேளை அந்த ஸ்திரீ அறையின் உள்ளே எழுந்து நடமாடுகிறாள்போலிருக்கிறது. அதுவும் நல்லதுதான். அவளைத் தொட்டு எழுப்ப வேண்டிய அவசியம் இல்லை.

இருட்டில் பூட்டைத் திறக்கச் செய்த முயற்சியில் தான் செய்த தவறு சீதாவுக்குத் தெரிந்தது. பூட்டின் முன் பக்கத்தில் சாவியைப் போடுவதற்குப் பதிலாகப் பின்புறத்தில் போட முயன்றிருக்கிறாள். அது எப்படித் திறக்கும்? அதை நினைத்தபோது சீதாவுக்குச் சிரிப்புக்கூட வந்தது.

இதோ பூட்டுத் திறந்தது! கதவும் திறந்தது! சீதா மெதுவாக உள்ளே ஒரு காலை வைத்து எட்டிப் பார்த்தாள். இது என்ன! அறைக்குள்ளே யாரும் இல்லையே! ஒருவரும் நடமாடவில்லையே! ஒரு சத்தமும் கேட்கவில்லையே!

இன்னொரு காலையும் உள்ளே வைத்து நாலு புறமும் நன்றாகப் பார்த்தாள். அறை காலியாக இருந்தது!

இது என்ன விந்தை! முன்னிரவில் நடந்ததெல்லாம் உண்மையில் கனவில் நடந்ததோ? அந்த ஸ்திரீ ஸ்நான அறைக்குள் இருந்தது, அப்புறம் இந்த அறைக்குள் சென்றது, வெளிப் பக்கம் கதவைப் பூட்டச் சொன்னது எல்லாம் தன்னுடைய மனப் பிராந்தியா? இல்லவே இல்லை. எல்லாம் உண்மையாக நடந்தவைதான். பின்னே அந்த ஸ்திரீ எப்படி அங்கிருந்து மாயமாய் மறைந்து போனாள்?

அப்போது அந்த அறையிலிருந்து பின்பக்கம் திறந்த கதவு சீதாவின் கண்ணில் பட்டது. அந்தக் கதவின் தாழ்ப்பாள் அகற்றப்பட்டிருந்தது. சீதாவுக்கு உண்மை புலனாயிற்று. அந்தக் கதவைத் திறந்து கொண்டு அவள் வெளியே போயிருக்கிறாள். போலீஸ்காரர்கள் வந்து தடபுடல் செய்தது ரஸியா பேகத்தின் காதில் பட்டிருக்க வேண்டும். சந்தடி அடங்கியதும் புறப்பட்டிருக்கிறாள். தான் தெரிந்து கொள்ள விரும்பியதை அவளிடம் தெரிந்து கொள்ள முடியாமற் போய்விட்டது! ஆயினும் பாதகமில்லை. எப்படியாவது அவள் இந்த வீட்டிலிருந்து பத்திரமாய்ப் போய்ச் சேர்ந்தாளே, அதுவே போதும். இனிமேல் இங்கு எப்போதுமே அவள் வராமலிருந்தால், தன் கண்ணில் எப்போதுமே படாமலிருந்தால் ரொம்ப நல்லது. எந்த இரகசியம் எப்படிப் போனாலும் சரிதான். அதையெல்லாம் தெரிந்து கொண்டு நமக்கு என்ன ஆகவேண்டும்? இவரும் குழந்தை வஸந்தியும் நன்றாக இருந்து வாழ்க்கை நிம்மதியாக நடந்தால் அதுவே போதும். இன்றைக்கு அநுபவித்தது போன்ற பயங்கரங்கள் இனிமேல் வேண்டவே வேண்டாம்!

இப்படி எண்ணிக் கொண்டே சீதா அறைக்கு வெளியில் வந்து முன்போலக் கதவைப் பூட்டத் தொடங்கினாள். திடீரென்று ஓர் உணர்ச்சி... தான் செய்யும் காரியத்தை இரண்டு கண்கள் உற்றுப் பார்ப்பது போன்ற பிரமை ஏற்பட்டது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். சாப்பாட்டு அறையின் வாசற்படியண்டை தாரிணி நின்று கொண்டிருந்தாள்.

காரணமில்லாத பீதியுடன் சீதா சிறிது நேரம் தாரிணியை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள். கையிலே இருந்த சாவியினால் பூட்டைப் பூட்டுவதற்குக் கூடச் சக்தி இல்லாமல் நின்றாள். இதைப் பார்த்த தாரிணி புன்னகை பூத்த முகத்துடன் அவள் அருகில் நெருங்கி வந்து, ''சீதா! எதற்காகப் பயப்படுகிறாய்? நீ யாரைப் பார்ப்பதற்காக வந்தாயோ, அவளைப் பார்க்கத்தான் நானும் வந்தேன். அவள் விஷயத்தில் உன்னைக் காட்டிலும் எனக்கு அதிகமான சிரத்தை இருக்கக் கூடியது இயற்கையல்லவா?'' என்றாள்.

வியப்பினால் விரிந்த கண்களால் சீதா தாரிணி தேவியைப் பார்த்து, ''உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டாள்.

''ஊகித்துத்தான் தெரிந்துகொண்டேன். சீதா! உன்னுடைய நடை உடை பாவனைகள், பேச்சுக்கள் — எல்லாம் என் மனத்தில் ஒருவாறு சந்தேகத்தை உண்டாக்கின. ஸ்நான அறையில் என்னுடைய கைக்குட்டை இருந்ததாகச் சூரியா சொன்னதும் சந்தேகம் உறுதிப்பட்டது. அப்புறம்...'' என்று தாரிணி தயங்கினாள்.

''அப்புறம் என்ன, அக்கா?''

''செய்யக் கூடாத ஒரு காரியம் செய்தேன் சீதா! அதற்காக நீ என்னை மன்னிக்க வேண்டும். உன்னுடைய குழந்தையைப் பார்ப்பதற்காக உன் கணவருடைய ஆபீஸ் அறைக்குள் போயிருந்தேன் அல்லவா? அப்போது மேஜையில் நீ பாதி எழுதி வைத்திருந்த கடிதம் என் கண்ணில் பட்டது. என்னை அறியாத ஓர் ஆவலினால் அதைப் படித்தேன். அந்தக் கடிதத்தின் கடைசியில்....''

''அக்கா! இதுதானா உங்களுக்குத் தெரிந்த இலட்சணம்? பிறத்தியார் கடிதத்தைப் படிக்கலாமா? இவர்கூட என் கடிதங்களைப் படிக்கிறதில்லையே?''

10 இந்தியர்களில் 8 பேர் கிராமங்களில் வசிக்கிறார்கள் என்றால்



அவர்களை நாம் அதிகமாகக் கவனிக்க வேண்டிய நேரம் இது!

எனவே யூகோபாங்க் நம் நாட்டிற்கென்று தனது சேவையை மிக விரிவாகப் பரப்புகின்றது. எங்கள் அலுவலே நாட்டிற்குச் சேவை செய்வதாகும். விவசாயத்திற்கும் கிராம முன்னேற்றத்திற்கும் விசேஷ முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில், கிராமங்களின் அடித்தளம் பலமாயிருந்தால் இந்தியாவும் பலமிருந்திருக்கும்.

அவ்விடங்களில் தான் யூகோபாங்க் நாட்டின் செல்வத்தை நல்ல வகையில் உபயோகிக்கின்றது. அங்குதான் 80 சதத்திற்கு மேலான இந்தியர்கள் வசிக்கின்றனர்.

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுகிறது.

UCO-8/72



''அதற்காகத்தான் முதலிலேயே மன்னிப்புக் கேட்டுக் கொண்டேனே சீதா!'' என்று இரக்கமான குரலில் கூறினாள் தாரிணி.

''போனால் போகட்டும். நான் எழுந்து வந்தது உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் தூங்கவில்லையா?''

''எனக்கு எப்படித் தூக்கம் வரும் சீதா? இவ்வளவு பயங்கரமான சம்பவங்கள் நடந்திருக்கும்போது? நீ என்னைத் தூங்கப் பண்ணுவதில் அதிகச் சிரத்தை காட்டினாய். நான் தூங்கிய பிறகு ஏதோ நீ செய்யப் போகிறாய் என்று எதிர்பார்த்தேன். ஆகையால் தூங்குகிறது போல் பாசாங்கு செய்தேன். நீயே தூங்கிப் போய்விட்டதாகத் தெரிந்ததும் ஏமாற்றம் அடைந்தேன். ஆனால் கடிகாரம் இரண்டு அடித்து உன்னை எழுப்பி விட்டது. நீ எழுந்து சாவியை எடுத்துக் கொண்டு மெள்ள நடந்து வந்தாய். நானும் பின்னால் உனக்குத் தெரியாதபடி வந்தேன். சட்டென்று நீ விளக்குப் போட்டதும் ஒருவேளை என்னைப் பார்த்துவிடுவாயோ என்று பயந்து போனேன். ஆனால் நீ பார்க்கவில்லை. கதவைத் திறந்து கொண்டு இந்த அறைக்குள் போனாய். யாரையோ தேடி ஏமாற்றமடைந்தாய். ஆனால் நான் ஏமாற்றம் அடையவில்லை.''

''நீங்கள் ஏன் ஏமாற்றமடையவில்லை? இங்கே ஒருவரும் இல்லை என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''மணி இரண்டு அடித்து உன்னை எழுப்புவதற்குச் சற்று முன்னால் தோட்டத்தின் வழியாக யாரோ போனதைப் பார்த்தேன். சீதா! இந்த அறையில் இருந்தது ஒருவரா, இருவரா?''

''ஒருவர்தான்! நீங்கள் ரஸியா பேகம் என்று சொன்னீர்களே, அந்த அம்மாள்தான் இங்கே இருந்தாள். ஒருவரா, இரண்டு பேரா என்று எதற்காகக் கேட்டீர்கள்?''

''இரண்டு பேர் போனதை நான் பார்த்தேன், சீதா! வேறு ஒருவர் வந்து ரஸியா பேகத்தை அழைத்துப் போயிருக்க வேண்டும்.''

'சீதாவுக்குத் தான் நிலைக் கண்ணாடியில் கண்ட காட்சி நினைவுக்கு வந்தது. பரபரப்புடன், ''அக்கா! அந்த இன்னொருவர் யார்?'' என்று கேட்டாள்.

''எனக்குத் தெரியாது. தாடியும் துருக்கிக் குல்லாவும் செக்கச் சிவந்த கண்களும் உள்ள முகம் ஒன்றைப் பார்த்தேன். யோசித்துப் பார்க்கும்போது எங்கேயோ, எப்போதோ பார்த்த முகமாகத் தோன்றுகிறது'' என்றாள் தாரிணி.



''எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது'' என்று சீதா கூறினள்.

''உனக்கும் தோன்றுகிறதா? நீ பார்த்தாயா, என்ன?''

''மணி இரண்டு அடித்துக் கண்ணை விழித்ததும் எதிரில் நிலைக் கண்ணாடியில் ஒரு முகம் தோன்றியது. உடனே அது மறைந்து விட்டது. ஒரு வேளை மனப் பிராந்தியா யிருக்கலாம் என்று நினைத்தேன். நீங்கள் சொல்வதிலிருந்து அது நிஜ முகம் என்று ஏற்படுகிறது.''

''அம்மா மட்டும் போவதைப் பார்த்திருந்தால், என்னல் பொறுக்க முடிந்திராது. 'அம்மா' என்று கத்தியிருப்பேன். பின்னெரு இன்னொருவரும் இருந்தபடியால் பேசாதிருந்தேன்.''

''அந்த ஸ்திரீ உண்மையில் உங்கள் தாயார்தாளு? என்னல் நம்பவே முடியவில்லையே!... நாம் எதற்காக இங்கேயே நின்று கொண்டு பேச வேண்டும்? குழந்தை விழித்துக் கொண்டு அழுதாலும் அழுவாள். புருஷர்கள் விழித்துக் கொண்டால் நமக்கு என்னவோ நேர்ந்து விட்டது என்று காபரா அடைவார்கள். உள்ளே போய்ப் படுத்துக் கொண்டே பேசலாம். எனக்கு இனிமேல் தூக்கமே வராது. உங்களைப் பற்றிய எல்லா விவரமும் சொல்லிவிட வேண்டும்!'' என்றுள் சீதா. (தொடரும்)

பகைவனுக்கருள்வாய்

சென்ற வாரம் கல்கி சுதந்திர தினச் சிறப்பிதழில் திரு கேசவ மேனன் அவர்கள் எழுதிய கட்டுரை ஒன்று இடம் பெற்றுள்ளது. திரு கேசவ மேனன் பற்றி 'சுயராஜ்யா'வில் ராஜாஜி எழுதியுள்ள சுவையான செய்தி :

கேரளாவில் மாத்ருபூமியின் ஆசிரியரும் நிர்வாகியுமான திரு கே. பி. கேசவ மேனன் அண்மையில் என் இல்லத்துக்கு வந்தார். இவர் இரு கண்களும் பார்வை இழந்தவர். தமது வாழ்க்கையில் நடந்த ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி பற்றி அவர் எனக்குச் சொன்னர்.

மலேயாவில் அவர் வழக்கறிஞராகப் பணியாற்றி வந்த சமயம் அப்பகுதியை இரண்டாம் உலக யுத்தத்தின்போது ஜப்பானியர் கைப்பற்றினர். ஜப்பானிய அதிகாரிகள் அவரைச் சிறையில் வைத்தனர். ஜப்பானியர் தோல்வியுற்று மலேயாவிலிருந்து வெளியேறும்வரை இருபத்திரண்டு மாதங்கள் சிறைவாசம் அனுபவித்தார்.

ஜப்பானிய ஆட்சியின்போது அக்கிரமமாக நடந்து கொண்ட ஜப்பானிய அதிகாரிகள் பலர் யுத்த காலக் குற்றவாளிகளாகக் கருதப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் கேசவ மேனனை மிகப் பயங்கர முறையில் சித்திரவதை செய்தவர். இந்த அதிகாரி விசாரிக்கப்பட்டபோது திரு கேசவ மேனனே அவருக்கு வக்கீலாக நியமிக்கப்பட்டார்! நீதிபதி அந்த அதிகாரியைக் குற்றவாளிதான் எனக் கருதிப் பத்து வருஷக் கடுங்காவல் தண்டனை அளித்தார். கேசவ மேனன் இந்த அதிகாரியின் வக்கீல் என்ற முறையில், அந்த அதிகாரி தமது மேலதிகாரியின் உத்தரவுக்குட்பட்டுத்தான் நடந்து கொண்டார் என்றும் ஆகவே இத்தகைய கடுமையான தண்டனை அவருக்கு விதிக்கக் கூடாது என்றும் வாதாடினர். நீதிபதி, இந்த வாதத்தை ஏற்றுத் தண்டனையைப் பதினெட்டு மாதச் சிறைவாசமாகக் குறைத்தார்!





திரு கேசவ மேனன் இரு கண்களும் பார்வை இழந்த பிறகு கோழிக்கோடு வந்து மாத்ருபூமி நாளிதழை நடத்துவதுடன் மலையாளத்தில் பல நூல்களும் எழுதியுள்ளார். ஏசுவின் வாழ்க்கை என்ற இவரது நூல் பிரசுரமாகி இரண்டே மாதங்களில் ஒரு பிரதி பாக்கி யில்லாமல் விற்றுப் போய்விட்டது!

மெல்ல மெல்ல மெதுவா எழுந்து, நில்லு, கண்ணு!



அமுல்ஸ்ப்ரேயின் ஆதாரத்தின் பேரில் எழுந்து நிற்கும் இந்தச் செல்வன், பத்து மாதம் நிறைந்த நிகில். அவனை சற்றுக் கவனித்துப் பாருங்கள்—வலிமையான கை கால்கள், அழகான சருமம், மற்றும் பிரகாசமான கண்கள்! அமுல்ஸ்ப்ரேயின் சிறப்புக்குக் கண்ணெதிரே காணும் உயிரோவியம் நிகில்.

சாப்பிடும் நேரம் ஆச்சு. என் அமுல்ஸ்ப்ரே கொண்டுவா.



துவக்கமே படுஜோக்கம்.

உங்கள் குழந்தைக்கு, பிறந்த முதல் வாரத்திலிருந்தே அமுல்ஸ்ப்ரே தரலாம். அமுல்ஸ்ப்ரே எளிதில் சீரணிக்கக் கூடியது. சரிவிகித ஊட்டச் சத்துக்கள் நிறைந்தது. அவசியமான வைட்டமின்கள், தாதுப் பொருள்கள் மற்றும் சீரான வளர்ச்சிக்காக அதிக அளவிலே தரமுயர்ந்த புரதச் சத்துக்கள் கொண்டது.



அமுல்ஸ்ப்ரே

தாய்ப்பாலுக்குப் பதிலாகப் புகட்டச் சிறந்தது



உங்கள் உடலுக்குத் தேவை
23 ஊட்டச் சத்துக்கள்
பாலிலே உள்ளவை 9
காம்ப்ளான்
23 சத்துக்களும்
கொண்டது
Complan
காம்ப்ளான்
முழுமையான உணவு
சத்துப் பற்றுக்குறைகளிலிருந்து
உங்களைப் பாதுகாக்கிறது
Glaxo
Complan
ECONOMY PACK
க்ளாக்ஸோ
ஆராய்ச்சியின்
உலகறிந்த
தயாரிப்பு

அவள் எழுதின அரைகுறைக் கதை. 4

முதல் மந்திரி தேவராஜ் அர்ஸ் அவர்களும் நிதி மந்திரி கோர்படே அவர்களும் ஏன் குதிரையில் காரியாலயத்துக்கு வரக்கூடாது என்று இடைக் கால பட்ஜெட் விவாதத்தின்போது மைசூர் மாநில மேல்சபை உறுப்பினர் ஸ்ரீகாட்டி மணி கேட்டார். - செய்தி

ஸ்ரீமதி விஜயா பாலகிருஷ்ணன் எழுதியது

ராமரத்தினத்தின் கடிதம் காரியாலயத்தையே ஒரு கலக்குக் கலக்கிவிட்டது.

'' குதிரையா ?'' என்று அனைவரும் மூக்கின் மேல் விரலை வைத்தார்கள்.

''ஆபீசர் நிச்சயம் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பார். சீட்டுக் கிழிந்தாலும் கிழிந்து விடும்'' என்றார் தலைமைக் குமாஸ்தா மாரி சாமி. எந்தக் காலத்திலோ ஏதோ சிறு குற்றம் செய்யப் போய் ஒரு வாரம் 'சஸ்பென்ஷனி'ல் இருந்தவர் அவர். அப் பொழுதிலிருந்து காரியாலய வேலையில் இருமி னாலோ தும்மினாலோகூட வேலை போய்விடும் என்று நடுங்கிச் சாகும் அப்பாவி.

'' யாருக்கய்யா சீட்டுக் கிழியும்? இது சர்க்கார் காரியாலயம் தெரியுமா? எந்த அப்பனாலேயும் எவனையும் ஒன்னும் பண்ண முடியாது'' என்றார் முப்பது வருஷ சர்வீசுக் குப் பின் ரிடையராக இருந்த நரசிம்ம சாயபு.

''நம்ம ஆபீசர் சுப்பாராவ் 'டிராஸ்டிக்' காக எதுவும் செய்யமாட்டார். ராமரத்தினத் தின் கடிதத்தைப் பார்த்து மனத்துக்குள் சிரித்துக் கொள்வதுடன் விட்டு விடுவார்'' என்றான் டைப்பிஸ்ட் ஜாய்ஸ்.

'' இது சிரிச்சு மழுப்பற விஷயமில்லையே! கடிதத்தின் மீது ஏதாவது 'ஆக்ஷன்' எடுத் தாகணுமே?'' என்றான் மேனன்.

'' அப்படி எங்கே சொல்லியிருக்கு ? 'டைசல்' பண்ணாமலே எத்தனையோ கடிதங் களை 'பைல்' பண்ணியிருக்கிறார் சுப்பாராவ்.''

''ஆமாம், இந்த ராமரத்தினம் பயலுக்கு இப்படி ஒரு கிறுக்குத்தனமா 'ஐடியா' எங் கிருந்து கிடைத்தது?''

''சரித்திரக் கதை ஒன்னு விடாமே அவன் படிக்கிறானே !''

'' நல்ல வேளை ! குதிரையோடே விட் டானே, நானைக்குக் காரியாலயத்துக்குத் தேர் ஓட்டிக்கொண்டு வருவேன்னு சொல்லலியே.''

குமாஸ்தாக்கள் இப்படிக் காரசாரமாக ராமரத்தினத்தின் கடிதத்தை விவாதித்துக் கொண்டிருக்கையில் சுப்பாராவ் வந்துவிட் டார். 'ஏமிட்டி ஈ கோலா?' என்று கேட் டுக் கொண்டே தம் அறைக்குச் சென்றார்.

உத்தரவு வந்தது!



டைப்பிஸ்ட் ஜாய்ஸ் கையெழுத்து வாங்க வேண்டிய கடிதங்களுடன் தொடர்ந்தாள்.

ராமரத்தினத்தின் கடிதத்தைச் சுப்பாராவ் கையில் எடுத்ததும் ஜாய்ஸால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

''நல்வு எந்துக்கு நவுத்துன்னாவு?'' என்று கடுமையாக முகத்தை வைத்துக் கொண்டு கேட்டார் சுப்பாராவ். பிறகு கடிதத்தைக் கவனமாகப் படிக்கத் தொடங்கினார்.

சிறு கடிதம்தான் !

''நாளை முதல் நான் காரியாலயத்துக்குக் குதிரை மீது வரலாம் என்றிருக்கிறேன். சைக்கிள், ஸ்கூட்டர் முதலியன நம் கலாசாரத்துக்கு முற்றிலும் பொருந்தாதவை என்பது என் கருத்து. நம் முன்னோர்கள் ஓரிடம் விட்டு இன்னோர் இடத்துக்குக் குதிரை மீதுதானே சென்றார்கள்? நமது காரியாலயத்தில் சைக்கிள், ஸ்கூட்டர், கார் முதலியவற்றை நிறுத்தத் தனி இடமிருக்கிறது. அதுபோல் என் குதிரையை நிறுத்த இடம் தருமாறு தாழ்மையுடன்கேட்டுக்கொள்கிறேன்.''

ஒரு கணம் யோசித்தபின் சுப்பாராவ் கடிதத்தைக் குறிப்பு ஏதுமின்றித் தம் மேலதிகாரிக்கு அனுப்பி வைத்தார். இரண்டு மாதங்களுக்குப்பின் கடிதம் மேலதிகாரியிடமிருந்து சுப்பாராவுக்கே திரும்பி வந்தது. 'இதற்குமுன் இதுபோன்ற கோரிக்கை ஏதாவது வந்திருக்கிறதா? வந்திருந்தால் என்ன 'ஆக்ஷன்' எடுத்தோம்?' என்ற கேள்வியும் கேட்கப்பட்டிருந்தது. நான்கைந்து மாதங்கள் குமாஸ்தாக்கள் இருக்கிற 'பைல்'களை எல்லாம் குடைந்தார்கள். முடிவில் கீழ்க் காணும் குறிப்புத் தயாரித்தார்கள். 'சென்ற பதினைந்து ஆண்டுகளில் இதுபோன்ற கோரிக்கை எதுவும் இந்தக் காரியாலயத்துக்கு வந்ததில்லை. அதற்கு முந்தைய 'பைல்'களெல்லாம் தலைமைக் காரியாலயத்தில் இருப்பதால், தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.'

சுப்பாராவ் கடிதத்தைத் தம் மேலதிகாரிக்கு மீண்டும் சமர்ப்பிக்க, அவர் அதைத் தம் மேலதிகாரிக்குக் குறிப்போ, சிபாரிசோ சேர்க்காமல் அனுப்பிவைத்தார். தொடர்ந்து 'குதிரை பைல்' என்று ஒரு தனி 'பைல்' தொடங்கும்படி உத்தரவிட்டார். அது நாளடைவில் வளர்ந்து 'யானை பைலா'கும் என்று அந்த அதிகாரிக்குத் தெரியாதா என்ன?

கிட்டத்தட்ட ஏழு மாதங்களுக்குப்பின் 'குதிரையின் நிறம், உயரம், வயது, பருமன், எடை, அது ஆணா பெண்ணா விவரம்' முதலியவற்றை விளக்கி மீண்டும் மனுவைச் சமர்ப்பிக்கும்படி கோரி சுப்பாராவுக்கே கடிதம் திரும்பி வந்தது. 'இது ஏதடா பெரிய பரமபத விளையாட்டாக இருக்கிறது!' என்று சலித்துக் கொண்ட சுப்பாராவ், ராமரத்தினத்திடமிருந்து தேவையான விவரங்களைச் சேர்த்துக் கடிதத்தை மீண்டும் மேலே அனுப்பி வைத்தார். ஆறு மாதங்களுக்குப்பின் கடிதம் மீண்டும் தம்மைத் தேடி வரும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. குதிரையின் வயது ஆறு என்பதற்கு ஒரு கெஜட் ஆபீசரின் அத்தாட்சி வேண்டுமாம் !

'நாசமாய்ப் போச்சு ! குதிரைக்கு இப்போது வயது எட்டு' என்று அலுத்துக் கொண்ட ராமரத்தினம் மிகச் சிரமப்பட்டு ஒரு கெஜட் ஆபீசரிடமிருந்து சர்டிபிகேட்' வாங்கி அனுப்பினார்.

ஆக, மனு ஒருவிதமாக மீண்டும் தலைமைக் காரியாலயத்துக்குப் போய்ச் சேர்ந்தது. அத்துடன் இணைக்கப்பட்டிருந்த அத்தாட்சிகளின் எண்ணிக்கை நூறை எட்டிப் பிடித்திருந்தது. அடுத்த சில மாதங்களில் மேலும் சில விளக்கங்கள் கேட்கப்பட்டன. குதிரை சொந்தப் பணத்தில் வாங்கினதா, பரம்பரைச் சொத்தா ? பரம்பரைச் சொத்து என்றால் யார் யார் பாகஸ்தர்கள்? வேறு யாருக்கும் குதிரை மீது உரிமை இல்லையென்றால் அதை நிரூபிக்கக் குறைந்த பட்சம் ஒரு தாசில்தாரின் அத்தாட்சியும் அதன் ஒன்பது பிரதிகளும் தேவை. குதிரையைக் காரியாலயத்தில் கட்டவிருக்கும் இடத்தில் எவ்வளவு புல் இருக்கிறது? அந்தப் புல்லை விற்றதில் — ஏலம் விட்டதில் சென்ற ஐந்து ஆண்டுகளில் சராசரி என்ன வருமானம் வந்தது ? சர்க்கார் காரியாலய நேரத்தில் குதிரை புல்லைத் தின்றது [illegible] ராமரத்தினம் [illegible] இணைத்திருக்கிறாரா? விடுமுறை நாட்களில் அவர் வேலைக்கு அழைக்கப்பட்டால், குதிரையை உள்ளே கொண்டு வர அவர் அவ்வப்போது தனிச் சம்மதம் பெறுவாரா? அந்தத் தனிச் சம்மதம் வழங்கும் ஆபீசரின் பெயரையும் இதர விவரங்களையும் தலைமைக் காரியாலயத்துக்கு அவசரமாக அனுப்பவும். குறிப்பிட்ட குதிரை சென்ற பத்து வருஷங்களில் யாரையும் கடித்ததில்லை — அதற்குப் பைத்தியம் பிடித்ததில்லை என்பனவற்றுக்குக் கெஜட் பதவி பெற்ற கால்நடை மருத்துவரின் 'சர்டிபிகேட்' இணைக்கப்பட்டிருக்கிறதா?

இந்த இடத்தில் ஸ்ரீமதி விஜயா பாலகிருஷ்ணன் கதையை நிறுத்திவிட்டுத் தூங்கப் போய் விட்டார். ஸ்ரீ ஜி. எஸ். பாலகிருஷ்ணனுக்கு விழிப்புக் கொடுத்த போது கதையைப் படித்துவிட்டுப் பின்வருமாறு முடித்தார்.


பல ஆண்டுகளுக்குப் பின் பழுப்பேறின மஞ்சள் காகிதம் ராமரத்தினம் ஒரு காலத்தில் பணியாற்றின காரியாலயத்துக்கு வந்தது !

X X X 13/41/2349 தேதி: .....

விஷயம்: அலுவலகத்தில் குதிரை கட்டுதல்


நீண்ட பரிசீலனைக்குப் பின்...... இலாகாவைச் சேர்ந்த தாலிப்பள்ளிக்கூடம் சத்திய நாராயண ராஜு ராமரத்னம் காரியாலயத்துக்குக் குதிரையில் வரவும் — குதிரையைக் காரியாலயத்துக்குள் கட்டவும் கீழ்க் கண்ட நிபந்தனைகளின் கீழ் அனுமதிக்கப்படுகிறார். குதிரையினால் ஏற்படும் எந்தவிதமான சேதத்துக்கும் சர்க்கார் பொறுப்பு ஏற்காது. குதிரையில் ஏறுகையில் இறங்குகையில்—ஓட்டுகையில் ராமரத்தினம் கைகால்கள் உடம்பு தலையைச் சிராய்த்துக் கொண்டால் அவருக்கு மெடிகல் லீவோ, காம்பன்சேஷனோ கண்டிப்பாகத் தரப்பட மாட்டாது. — **ஒப்பம்**

இந்தப் பதில் வரும்போது முப்பது வருஷங்களுக்குமுன் ரிடையரான ராமரத்தினம் தம் கொள்ளுப் பேரன் பேத்திகளுடன் பெயர் தெரியாத கிராமத்தில் வசித்து வந்தார் !


இழுதிறன்
கொண்ட உறுதி!
எப் பொருளையும் கட்டி வைக்க
என்றும் பயன்படுத்துங்கள்..
ஆந்திரப் பிரதேஷ்
பேப்பர் மில்ஸ் காகிதம்....
அதன் உறுதியான கட்டமைப்பு,
உங்கள் பொருளைப்
பத்திரமாகப் பாதுகாக்கிறது.
ஆந்திரப் பிரதேஷ் பேப்பர்
(வெஸ்ட் கோஸ்ட் பேப்பர் கம்பெனியுடன்
தொழில்நுட்ப கூட்டுறவு கொண்டது).
ரிஜிஸ்டர்ட் அலுவலகம் & மில்ஸ்: ராஜமுந்திரி (ஆ.பி.)
பம்பாய் அலுவலகம்: ஸ்ரீனிவாஸ் ஹவுஸ், ஹஸாரிமால் ஸோமானி மார்க்.
ஹைதராபாத அலுவலகம்: 1-2-33/2, மதுபன், ககன் மஹல் ரோடு.

அன்பே அகிலா!

கதை: குமரன் 19 சித்திரம்:







ஜெய் அகிலா! ஆயுதங்கள் வந்து விட்டன!
தொடரும்...

டயமண்ட்


செயின்களை



அசல்



உறுப்புகளாகக்



கொண்டவை


பெர்கின்ஸ், அம்பாஸிடர், லாம்ப்ரெட்டா, வெஸ்பா, புல்லெட், ஜாவா, ராஜ்தூத்...

செயின் மாற்றும்போதும் உபயோகிக்க முற்றிலும் சிறந்தவை!

FDSTID-1771TM

இந்நாட்டில் தயாராகும் செயின்களில் டயமண்ட் செயின்கள் மட்டுமே ஃபோர்ம்ட் ரோலர்கள் கொண்டவை. இத்துறையில் 80 வருட கால அனுபவம் கொண்ட அமெரிக்க தொழில்நுட்பக் கூட்டுறவுடன் இவை தயாரிக்கப்படுகின்றன. மறவாதீர் இதனை!

டயமண்ட் செயின்தான் வேண்டுமென்று உங்கள் மெக்கானிக்கிடம் வற்புறுத்திக் கேளுங்கள்.



செயின் இணைப்புகளில் ◇ அடையாளம் இருக்கிறதா என்று பாருங்கள்

◇

டயமண்ட் என்ற பெயரும் சின்னமும் அமெரிக்காவைச் சேர்ந்த டயமண்ட் செயின் கம்பெனியின் பதிவுபெற்ற டிரேட்மார்க்குகளாகும்.

உரிமை பெற்று இந்தியாவில் உபயோகித்து உற்பத்தி செய்வோர்: டிஐ டயமண்ட் செயின் லிமிடெட், சென்னை-1

தயாரிப்பவர்கள்:

டிஐ டயமண்ட் செயின் லிமிடெட், சென்னை-1

தொழிற்சாலை: அம்பத்தூர், சென்னை-53

இது ஒரு Ⓜ துணை நிறுவனம்

விநியோகஸ்தர்கள்:

டி.ஐ. & எம். ஸேல்ஸ் லிமிடெட்

சென்னை	பம்பாய்	கல்கத்தா	புதுடெல்லி
த.பெ.எண்	த.பெ.எண்	த.பெ.எண்	த.பெ.எண்
1960	1308	9151	453



தஞ்சாவூர் ரோட்டராக்ட் க்ளப்பின் தலைவர் ஜி. கோபாலகிருஷ்ணனும், அங்கத்தினர்களும்.

இளைஞர் சமுதாயம்

18. தொழுகைக்குரிய சேவை

"பேரன்புடையீர், தஞ்சை நகரில் வாழும் தொழு நோயாளிகளின் நிலை மிகவும் அவலமாக உள்ளது. அவர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் நாங்கள் 'துணி தானம்' செய்ய நிச்சயித்துள்ளோம். ஆகவே, இதைக் கன்றுறும் அன்பர்கள் தங்கள் இல்லத்தில் இருக்கும் பழைய துணிகளை (சேலை, சட்டை, வேட்டி)ச் சேகரித்து வைத்து, எங்களது அங்கத்தினர்கள் தங்கள் இல்லத்துக்கு வரும்பொழுது அவர்களிடம் அளிக்குமாறு மிகத் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறோம்."

இந்தத் துண்டுப் பிரசுர அறிக்கை தஞ்சாவூர் இளைஞர் சங்கம் (Rotaract Club of Thanjavur) விடுத்திருக்கும் அறிக்கையாகும்.

இந்த அறிக்கையில் புதுமையும் இருக்கிறது; துணிச்சலும் இருக்கிறது. தற்கால மாணவர்கள் என்றாலே நாகுக்குப் பார்ப்பவர்கள், நகத்தில் அழுக்குப் படாமல் நாட்டுக்குச் சேவை செய்ய நினைப்பவர்கள் என்ற அபிப்பிராயம் எப்படியோ நம் நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. அதற்குச் சில மாணவர்களின் நடை, உடை, பாவனைகள் எல்லாம் சான்று கூறும் நிலையில் இருக்கின்றன. ஆனால் தஞ்சாவூர் ரோட்டராக்ட் க்ளப் அங்கத்தினர்களான இளைஞர் சமுதாயத்துடன் கொஞ்ச நேரம் பேசிப் பார்த்தால், அவர்களுக்குச் சேவை செய்வதில் உள்ள ஆர்வம் தெளிவாய்ப் புலனாகும்.

தஞ்சாவூரில் இவர்களைச் சந்திக்கப் போனபோது அவர்களுடைய சிரத்தையைக் கண்டு நான் அயர்ந்து போனேன்.

என்னுடைய பிரயாணத் திட்டத்தின்படி 12–7–72 அன்று மாலையில் அவர்களைச் சந்தித்திருக்க வேண்டும். ஆனால் எதிர்பாராத சில காரணங்களால் 13–7–72 காலை ஒன்பது மணிக்குத்தான் என்னால் அங்கு போக முடிந்தது. முதல் நாள் வரவேண்டிய என்னை எப்படியும் காலையிலாவது சந்திக்கக்கூடும் என்று எதிர்பார்த்து எனக்காகச் சில அங்கத்தினர்கள் காத்திருந்தனர். என்னைக் கண்டதும் மிகவும் அன்போடு வரவேற்று உபசரித்து, "நேற்றே வருவதாக நீங்கள் எழுதியிருந்த படியினால், ஒரு வேளை தாமதமாக வந்து ஏதாவது ஒரு லாட்ஜில் தங்கியிருப்பீர்களோ என எதிர்பார்த்து நகரில் உள்ள லாட்ஜுகளிலெல்லாம் போய்த் தேடினோம்....." என்று செயலாளர் கூறினார். நான் என் பிரயாணத்தில் ஏற்பட்ட சில இடையூறுகளைக் கூறி மன்னிப்புக் கோரினேன்.

"இனி, இளைஞர்களாகிய எங்களுக்கெல்லாம் நல்ல காலந்தான்!" என்றார் அந்த இளைஞர்.

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டேன்.

"இளைஞர்களைப் பற்றி எழுத வேண்டும்; அவர்களுடைய பணிகளின் சிறப்பை எடுத்துச் சொல்லி, அதைப் பலரும் அறியும்வண்ணம் பத்திரிகையில் வெளியிட வேண்டும் என்று உங்களுக்குத் தோன்றியதே, அது எங்களுடைய நல்ல காலந்தானே! எங்களைப் போன்ற, ஊர், பேர் தெரியாத வாலிபர்களின் பொதுப் பணிகள் பற்றிப் பத்திரிகைகளில் வரவேண்டும் என்று நான் அடிக்கடி நினைப்பேன். அது எங்களுக்கு 'பப்ளிஸிடி' கிடைக்கும் என்கிற ஆசையினால் அல்ல; இன்னும் பல ஊர்களில் உள்ள பல வாலிபர்கள் எங்களைப் போலவே பொதுத் தொண்டுகளில் ஈடுபட வாய்ப்பு உண்டாகுமே என்றுதான்....." என்று கூறிய அந்த வாலிபரின் முகத்தைப் பார்த்தேன். களங்கமற்ற அவர் முகம் என்னை வசீகரப்படுத்தி

யது. அவரது பெருந்தன்மையான நோக்கம் என்னைக் கவர்ந்துவிட்டது.

"இந்தச் சங்கம் எப்பொழுது தொடங்கப்பட்டது?" என்று கேட்டேன்.

"தஞ்சை ரோட்டராக்ட் சங்கம் 29-5-68ம் ஆண்டு தஞ்சை ரோட்டரி சங்கத்தினரால் அதன் இளைஞர் பிரிவாகத் தொடங்கப்பட்டது. எங்களது ரோட்டராக்ட் சங்கத்தின் கிளைகள் உலகம் முழுவதும் உள்ளன. அங்கத்தினர்களுக்கு, பதினேழு வயதிலிருந்து இருபத்தெட்டு வயதுக்குள் இருக்க வேண்டும். அங்கத்தினர்கள் மாதம் மூன்று ரூபாய் மட்டும் சந்தாத் தொகையாகச் செலுத்த வேண்டும். அந்தத் தொகையில் மாதம் இரண்டு ரூபாய் சங்கத்துக்கும், ஒரு ரூபாய் மாலை உணவுக்கும் எடுத்துக் கொள்ளப்படுகிறது."

"தொழுநோய்க்காரர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் எப்படித் தோன்றியது?"

"இவ்வூரில் ஏராளமான தொழுநோய்க்காரர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு உருப்படியான சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் வீடு வீடாகச் சென்று பழைய துணிகளைச் சேகரித்து அவர்களுக்கு விநியோகித்தோம். தொழு நோயாளிகளைக் கண்டால் விலகிச் செல்வது தவறு; அது அந்தப் பிரச்னையை விட்டே விலகிச் செல்வதாகும். காந்தி மகானுக்கு மிகவும் உகந்த தொண்டு என்பதால் எங்களுக்கு இந்தத் தொண்டில் மிகவும் சிரத்தை உண்டாயிற்று. நாங்கள் ஆரம்பித்த வேலை இந்தத் தொண்டுக்கு இவ்வூரில்நல்ல வரவேற்பு இருக்கிறது. பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பும் நிறையக் கிடைக்கிறது. அத்துடன் மனத்தில் துளியும் அருவருப்பு இல்லாமல் தொழுநோய்க்காரர்களுடன் பழக ஒரு வாய்ப்பும் கிடைக்கிறது."

அந்த இளைஞர் சொன்னது என் உள்ளத்தைத் தொட்டு விட்டது. யாரும் இந்தத் தொண்டைப் பற்றிப் பேசுவார்கள். ஆனால் நேரடியாக எதுவும் செய்ய முன்வர மாட்டார்கள்.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

என்னும் திருக்குறளே இவர்கள் தொண்டுக்குச் சிறப்புரையாகக் கூறலாம்.

"இன்னும் ஏதாவது குறிப்பிடும்படியான சேவை செய்கிறீர்களா?" என்று கேட்டேன்.

"எங்களது சங்க நடவடிக்கைகளையும் அங்கத்தினர்களின் கட்டுரைகளையும், இதர விஷயங்களையும் தாங்கிய ஓர் ஆங்கில மாதப் பத்திரிகையை வெளியிட்டு வருகிறோம். அதன் பெயர் Rotaractor" என்றார்.

தஞ்சை, திருச்சி ஜில்லா அனைத்துக் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கும் தமிழ், ஆங்கிலப் பேச்சுப் போட்டிகள் ஒவ்வோர் ஆண்டும் வைத்து, அவற்றில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கி வருகிறார்கள். சங்கீதப் போட்டியும் நடத்தி வருகிறார்கள்.

தஞ்சை நகரில், ஊமை, செவிடர்கள் படிக்கும் பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கான மருத்துவ வசதிகளைச் செய்து தருகிறார்கள்; ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஒரு மருத்துவ அதிகாரியோடு அங்கத்தினர்களில் சிலரும் போய் அவர்களைப் பரிசோதித்து மருந்துகள் வழங்கி வருகிறார்கள். இப்படி இவர்களுடைய சமூக, இலக்கியப் பணிகள் விரிந்து கொண்டே போகின்றன. எனினும் தொழுநோய் கண்டவர்களுக்கு இவர்கள் ஆற்றும் நற்பணி தொழுது போற்றுதற்குரிய அரிய சேவையாகும்.

—ஸோமாஸ்



◀ குமாரி சாருமதி

பரதக் கலைத் திறனை ரசிகர்களுக்கும் நிட்டத்தின் கீழ் கலாமந்திரத்தின் ஆதரவில் சமீபத்தில் மயிலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் கிளப் அரங்கத்தில் நிகழ்ந்த குமாரி சாருமதியின் நடனங்கள் போற்றத்தக்கவையாக அமைந்திருந்தன. நடன ஆசிரியை கௌசல்யாவிடம் பயிற்சி பெற்று வரும் குமாரி சாருமதிக்குப் பரத நாட்டியத்துக்கு அவசியமான நிருத்திய சுத்தமும் லய ஞானமும், அடவுகளிலும் அபிநயங்களிலும் அழகு உணர்ச்சியும் நிரம்ப இருக்கின்றன. சம்பிரதாயமான ஸ்வரஜதி, வர்ணங்களுக்கு நடனங்கள் விறுவிறுப்புடன் இருப்பது ரசிக்கக் கூடியது. ஆனால் அபிநயங்களுக்கு முயற்சி தேவை. சிறுகச் சிறுக வளர்த்துக்கொள்ள வேண்டியது. ஏற்கெனவே இரண்டு மூன்று நிகழ்ச்சிகள் நடத்தியிருப்பதால் குமாரி சாருமதிக்குத் தன்னம்பிக்கையும் வளர்ந்து கொண்டு வருகிறது.

குமாரி பூர்ணிமா ▶

பல மாணவிகளுக்கும் பரதம் பயிலுவித்து அரங்கம் ஏற்றியுள்ள அநுபவ ஆசிரியை ஸ்ரீமதி கே. ஜே. சரஸாவின் சிஷ்யை குமாரி பூர்ணிமாவின் நடன அரங்கேற்றம் சமீபத்தில் மயிலை ரசிகரஞ்சனி அரங்கில் வெகு கோலாகலமாக நடந்தது. உயர் குடும்பத்தைச் சேர்ந்தவள் குமாரி பூர்ணிமா. அரங்கேற்றமானாலும் வெகுவாக ரசிக்கும்படி இருந்தது.

- எம். எஸ். சிவஸ்வாமி



1952ம் வருஷம். ஹெல்சிங்கி ஒலிம்பிக்குச் செல்லவிருந்த ஹாக்கி கோஷ்டியினர் ஹாக்கி மன்னர் 'பாபு' தலைமையில் தமிழ்நாட்டுக்கு வந்து ஆடினர். தற்போழுதைய இன்ஸ்பெக்டர் – ஜெனரல் எப். வி. அருள் காப்டனாக இருந்து ஆடிய தமிழகக் கோஷ்டி ஒலிம்பிக் கோஷ்டியைத் தோற்கடித்துப் பெருமை கொண்டது. ஆனால் ஹெல்சிங்கி சென்ற இந்திய ஹாக்கி கோஷ்டி வெற்றி பெற்றுத் தங்கப்பதக்கத்துடன் திரும்பியது.

1948, 1952 ஒலிம்பிக்குகளில் 'தங்கம்' கண்ட பாபு 'கோச்' சாகவும் மற்றோர் ஆட்டக்காரர் கேசவ் தத் மானேஜராகவும் இருந்து இளம் இந்திய ஹாக்கிக் கோஷ்டிக்கு வழிகாட்டி 1972 'மியூனிக்'குக்கு அழைத்துச் செல்கிறார்கள்.

வழக்கம்போல் ஒலிம்பிக்குக்குப் பயணப்படுவதற்கு முன்னர் பல இடங்களில் ஒலிம்பிக் ஹாக்கி ஆட்டக்காரர்கள் விளையாடிவிட்டுச் செல்வது போல் நேரு ஸ்டேடியத்தில் தமிழ் நாட்டுக் கோஷ்டியோடு ஆட ஜூலை 30ந் தேதி 'பறந்து' வந்தார்கள்.

"இது கிரிக்கெட் மாட்சா? ஹாக்கி மாட்சா? தவறிப் போய்க் கிரிக்கெட் மாட்ச் மைதானத்துக்கு வந்து விட்டேனு?" என்று அலமந்தார் ஒருவர்.

"ஐயா, உமக்கு எதனுல் இந்தச் சந்தேகம்? ஒலிம்பிக் ஹாக்கி வீரர்கள் ஆடப் போகும் மாட்சுக்குத்தான் வந்திருக்கிறீர்கள். இதோ நாதசுரம் முழங்கத் தமிழ் நாட்டுப் பாணியில் ஒலிம்பிக் ஆட்டக்காரர்களை வரவேற்கிறார்கள் பாருங்கள்!"

"ஸார்! ஹாக்கி சரித்திரத்தில் இத்தனை திருவிழாக் கூட்டத்தைப் பார்த்ததில்லை..."

"ஹாக்கின்னு பஞ்சாப் புன்னு சொல்லும்படியா எத்தனை 'சிங்'குகள் ஆடவர்ரு பார்த்தேளா?"

"ஹாக்கியில் தமிழ் நாட்டுக்கும் பெரும் பங்கு உண்டு ஐயா! சென்னை நகரப் போலீஸ் படையைச் சேர்ந்த பிரான்ஸிஸ் 1948, 1952, 1956 ஆண்டுகளில் வெற்றி பெற்ற மூன்று ஒலிம்பிக் ஆட்டங்களிலும் 'கோலி'யாகக் கலந்து கொண்டவர். 1956 ஒலிம்பிக் பந்தயத்தில் ஒரு கோல் கூட விடாத பெருமை அவருக்கு உண்டு. ஹாக்கி, கிரிக்கெட் 'டபிள்' இண்டர்நேஷனல் கோபாலன் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்தானே? மூன்று ஒலிம்பிக்குகளில் கலந்து கொண்ட பீட்டரையும் மெக்ஸிகோ ஒலிம்பிக் சென்ற முனீர் சேட்டையும் மறந்துட்டேளே! இந்த 1972 மியூனிக் ஒலிம்பிக்குக்குத் தமிழ் நாட்டிலிருந்து இந்தியன் ஏர்லைன்ஸ் கிருஷ்ணமூர்த்தி, கோவிந்தா, பீட்டரின் சகோதரர் பிலிப்ஸ் ஆகியோர் போவது தெரியுமல்லவா?"

"அப்படியா? மகிழ்ச்சி! இன்றைக்குத் தமிழ் நாட்டுக் கோஷ்டி ஜயிக்குமா தோற்குமா, ஜோஸ்யம் சொல்லும் பார்க்கலாம்!"

"நான் சொல்றது இருக்கட்டும். தமிழ் நாட்டு கவர்னர் ஷா சொல்கிறதைக் காது கொடுத்துக் கேளுங்கோ!"

கவர்னர் ஷா மைக்கில் பேசுகிறார்: "மியூனிக்கில் நம் இந்திய ஒலிம்பிக் கோஷ்டி வெற்றி பெறட்டும். இந்த நேரு ஸ்டேடியத்தில் தமிழ் நாட்டுக் கோஷ்டி வெற்றி பெறவேணும்!"

ஆட்டம் தொடங்குகிறது. ஒலிம்பிக் கோஷ்டியில் ஹர்பீந்தர் சிங் இரண்டு 'கோல்' போட்டு 'சிங்கம்டா' என்ற பாராட்டைப் பெறுகிறார். தமிழ் நாட்டுக் கோஷ்டி ஒரு பெனல்டி சான்ஸை இழந்தபோது 'அசிங்கம்டா' என்று சொல்லத் தோன்றுகிறது. ஆனால் அடுத்த பெனல்டி சான்ஸை மோனப்பா கோலாக்கியதும் நம்மையறியாமல் 'சபாஷ்' எழுகிறது. இதன் பிறகு தமிழ் நாட்டுக் கோஷ்டியில் 'சூடு' பிடிக்கிறது. இந்தப் பாழும் விசில், நேரத்தை அறிவிக்கும் காவலனை எழுந்து ஆட்டத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கிறது. ஒலிம்பிக் கோஷ்டி வெற்றிப் பெருமிதத்தில் வீரநடை போடுகிறது.

ஒலிம்பிக் 'புல்பாக்' மைக்கேல் கிண்டு சொல்கிறார்: "தமிழ் நாட்டுக் கோஷ்டி எங்களுக்குக் கடுமையான எதிர்ப்பைக் கொடுத்தது. அவர்கள் ஆட்டம் ஜோர்!"

ஹாக்கியில் 'பழம் புள்ளி' வெங்கடபதி கூறுகிறார்: "'பெனல்டி ஷாட்'களை ஒலிம்பிக் கோஷ்டி பல கோணங்களில் அடித்து, அவற்றை நிச்சய கோலாக்க வேண்டும். ஒரே மாதிரி 'ஷாட்'கள் பலன் அளிக்காது!"

மானேஜர் கேசவ் தத்: "ஒலிம்பிக் கோஷ்டிக்கு உற்சாக வார்த்தைகள் வேணும். கடுமையான 'கிரிடிஸிஸம்' ஒலிம்பிக் செல்லும்போது தருவது உசிதமா?"

ஒலிம்பிக் ஹாக்கி கோஷ்டியில் அநேகமாக எல்லோரும் பிரம்மச்சாரிகள்; இளவட்டங்கள். இள ரத்தம் சோடை போன இல்லை என்பதை மேற்கிந்தியத் தீவு, இங்கிலாந்து கிரிக்கெட் வெற்றிகளின் போது கண்டோம். ஹாக்கி வீரும் மியூனிக்கில் தங்கத்தை மீட்டு வர வேணும் என்று பிரார்த்தனை.

– குண்டுமணி




ஹர்பீந்தர் சிங்



மோனப்பா

மெட்ராஸ் டு மியூனிக்!



उड़िसा सिमेंट लिमिटेड
ORISSA CEMENT LIMITED
4, SCINDIA HOUSE, NEW DELHI-1
POST BOX : 364
NEW DELHI-1
எழுத்து மூலமே உத்தரவாதம் அளிக்கிறோம்
உங்களது உலைக் கற்கள் தேவைகளுக்கு ஒரிஸ்ஸா சிமெண்ட் ஸ்தாபனத்திற்கு ஆர்டர் கொடுத்தீர்களானால்; உங்கள் உற்பத்தி தடைப்படாது. அவை குறித்த காலத்தில் உங்களுக்குக் கிடைக்கும்; காலதாமதமே ஏற்படாது என்று நிச்சயமாக நீங்கள் இருக்கலாம்.
உலைக் கற்களுக்கு "டால்மியா" என்பது இவற்றை உபயோகப்படுத்துபவர்களுக்கு நன்கு தெரியும். நீண்டகால ஒப்பந்தத்தில் ஆர்டர்களையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம்.
Yours faithfully,
for ORISSA CEMENT LIMITED
Registered Office : RAJGANGPUR (Ori
DALMIA
REFRACTORIES

GOVAN/OCL/71



ஏழாவது அத்தியாயம்

கைகலப்பையோ அடிதடி சண்டையையோ, எதிர்பார்த்துத்தான் பாண்டியனை மீட்கச் சென்ற போது லாரியில் சிலம்பக் கழிகள் சிலவற்றையும் தூக்கிப் போட்டிருந்தார் அண்ணாச்சி. நீலமலை ஏலக்காய்த் தோட்டத்துக்குள்தான் பாண்டியனை அவர்கள் கொண்டு போய் வைத்திருக்க வேண்டும் என்பதை அவர் மிக எளிதாகவே அனுமானித்துக் கொள்ள முடிந்திருந்தது. மல்லிகைப் பந்தல் நகரையும், சுற்றுப்புறத்து மலை ஊர்களையும் மனிதர்களையும் பற்றி அண்ணாச்சி தம்முடைய பல ஆண்டு கால அனுபவத்தில் நன்றாகக் கணித்து வைத்திருந்தார். மனிதர்களையும் அவர்களுடைய சமூக அரசியல் சார்புகளையும் அண்ணாச்சிக்குத் தெளிவாக அடையாளம் தெரியும். அரசியல் இருப்பங்களால் இப்போது திடீரென்று பல வீடுகள், பல எஸ்டேட்டுகள், பல கார்கள், பஸ் ரூட்டுகள் என்று சேர்த்துப் புதிய முதலாளிகள் ஆகி இருந்த சிலரைச் சமீபத்து ஆண்டுகளில் அவர் கண்டிருந்தார். மக்கள் சந்தேகமும், பிரமிப்பும் அடையத் தக்க விதத்தில் திடீரென்று பணக்காரரான ஒருவருடைய எஸ்டேட்தான் அது. அரசாங்க அதிகாரிகள், போலீஸ் ஆகிய எல்லோருமே தமக்குப் பயப்படும்படி ஆக்கி வைத்திருந்தார் இந்தத் திடீர்க் குபேரர். ஆளும் கட்சியைச் சேர்ந்த எல்லாக் காரியங்களுக்கும் இவருடைய பணம், பலம், அடியாட்கள் அனைவரும் பயன்படுத்தப்படுவது வழக்கம்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்தைந்து அறுபத்தாறும் ஆண்டுகளில்



இதே மனிதர் மல்லிகைப் பந்தல் நகரசபைக்குச் சொந்தமான மீன் மார்க்கெட்டில் ஒரு கசாப்புக் கடை மட்டும் தான் வைத்திருந்தார். அப்போது இவர் பெயர் இராவணசாமி. பெற்றோர் சூட்டிய இராமசாமி என்ற பெயரை ஒரு பெரிய தலைவரின் ஆசியோடு இராவணசாமி என்று மாற்றி வைத்துக் கொண்டார் இவர். அறுபத்தேழில் இந்த மனிதர் எம். எல். ஏ. ஆனார். அதன் விளைவாக இவர் கௌரவமும், உடம்பும் இரண்டு சற்றுப் பருத்தன. பெயரும், சிறிது மாற்றம் அடைந்தது. 'மல்லிகைப் பந்தல்' என்ற அழகிய பெயரைத் தாமாகவே மல்லை என்று சுருக்கினார் இவர். மல்லை. இராவணசாமி, எம். எல். ஏ. (எக்ஸ் எம். சி.) என்று இவர் வீட்டு முகப்பில் இரு வர்ணப் பலகை அலங்கரித்தது. இவருக்குத் தெரிந்த விஷய ஞானமுள்ள நண்பர் ஒருவர்,

''ராவூ! எம். எல். ஏ. ஆனப்புறம் முன்னாள் முனிசிபல் கவுன்ஸிலருன்னு பிராக்கெட்டிலே போடறது நல்லா இல்லே. அதெ வுட்டுடு'' என்று எடுத்துச் சொல்லிய பின்பே இவர் (எக்ஸ் எம். சி.) என்ற அந்த எழுத்துக்களை அழித்தார்.

'புதுவை, உறந்தை என்பதுபோல் பழைய காலத்திலிருந்தே மருவி வழங்கும் பெயர்களைத் தவிர புதிதாக மல்லிகைப் பந்தலை 'மல்லை' என்று சுருக்குவது அறியாமை' என்பதாக உள்ளூர் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் ஒருவர் இது பற்றி ஒரு கூட்டத்தில் குறை சொல்லியபோது மறு நாளே பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் பொழில் வளவனார் இராவணசாமியை ஆதரித்தும் 'மல்லை' என்பது சரியே என்றும் ஓர் அறிக்கை விட்டார். அதற்கு அடுத்த வாரமே டாக்டர் பொழில் வளவனாரின் ஐம்பதாவது பிறந்த தினத்தை வெகு விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடு செய்தார் இராவணசாமி. 'மல்லை இராவணசாமி நடத்தும்' என்கிற பூதாகாரமான எழுத்துக்களும், 'பொழில் வளவனாரின் ஐம்பதாவது பிறந்த நாள் விழா' என்ற கடுகு போன்ற எழுத்துக்களுமாக ஒரு சுவரொட்டி அடித்து மல்லிகைப்பந்தல் நகரெங்கும் ஒட்டப்பட்டது. பொழில் வளவனாருக்குப் பொன்னாடையும் போர்த்தப்பட்டது.

சட்டமன்ற உறுப்பினராகும் வரை தம்முடைய பிறந்த தினம் எந்த மாதத்தில் எந்த நாளில் வருகிறதென்று கூட ஞாபகம் இல்லாமலிருந்தார் இராவணசாமி. சட்டமன்ற உறுப்பினரானவுடன் வந்த அவருடைய முதல் பிறந்த நாளைக் கட்சிக்காரர்களும், தம்பிமார்களும் நினைவூட்டினார்கள். பிறந்தநாளன்று வட்ட வடிவமான மர மேஜையில் — அந்த மேஜை அகலத்துக்குப் பெரிய கேக் ஒன்றை வைத்து அவரை வெட்டச் சொன்னார்கள் தம்பிமார்கள். கேக் வெட்டும்போது பழைய கசாப்புக் கடை ஞாபகத்தில் ஓங்கி ஒரு வெட்டு வெட்டவே பல பேர் முன்னிலையில் இராவணசாமி மேஜையையே துண்டு துண்டாக்கிவிட்டார். அதைக் கண்டு பலர் பயந்துவிட்டார்கள். சிலருக்கு அடக்க முடியாமல் சிரிப்பு வந்துவிட்டது.

''அண்ணன் கோபத்திலே வெட்டிப்பிட்டாரு! பரவாயில்லே. இன்னொரு 'கேக்' கொண்டாந்து வை'' என்று சொல்லி வேறொரு கேக் வரவழைத்து அதை முழுமையாக அண்ணனை நம்பி வெட்டச் சொல்லாமல் கத்தியை மட்டும் அண்ணன் கையால் தொட்டுக் கொள்ளச் சொல்லித் தாமே பொதுவாகக் கேக்கை அறுத்தார் ஊழியர்களில் ஒருவர். கேக் பிழைத்தது. மேஜையும் சேதம் ஆகாமல் தப்பியது. இராவணசாமியைப் பற்றி இந்தச் சுவாரசியமான விஷயங்களையெல்லாம் அண்ணாச்சி சொல்லிக் கேட்க வேண்டும். மிகவும் இரசமாகவும் உள்ளடங்கிய அங்கதத்துடனும், நகைச்சுவையுடனும் இராவணசாமியின் லீலா விநோதங்களை விவரிப்பார் அண்ணாச்சி. தென்மணி லாரி சர்வீஸ் என்ற கம்பெனியும், 'ப்ளூஹில் கார்டமம் எஸ்டேட்' என்ற ஏலக்காய்த் தோட்டமும் இந்த மல்லை. இராவணசாமியின் உடைமைகள்தாம்.

பாண்டியன் பல்கலைக் கழக விடுதியிலிருந்து கடத்தப்பட்ட பின்னிரவில் பல்கலைக் கழக மேற்கு வாயிலருகே இந்தத் தென்மணி லாரியை அதிகாலை மூன்றே முக்கால் மணிக்குப் பார்த்ததாக ஒருவன் கூறியதையும், மலைக்குப் போகிற வழியிலிருக்கும் செக்போஸ்டு ஆள் இதே லாரியை நான்கு மணிக்கு அன்பரசன் முதலிய சில பல்கலைக் கழக

மாணவர்களோடு பார்த்ததாகக் கூறியதையும் இணைத்து நினைத்து ஊகித்த பின்புதான் அங்கே தேடிப் போயிருந்தார் அண்ணாச்சி. கோட்டச் செயலாளருக்கும், கட்சிச் சார்பு பெற்ற அன்பரசன் முதலிய மாணவர்களுக்கும் மல்லை. இராவணசாமி இந்த உதவிகளைச் செய்ய முடியும் என்பதும் அண்ணாச்சிக்குத் தெரியும். அதனால்தான் அந்த மழைக்கோப்பான முன்னிரவில் குறிப்பாக அந்த ஏலக்காய்த் தோட்டத்தைத் தேடிச் சென்றிருந்தார் அவர். உள்ளூற ஒரு நம்பிக்கை இருந்தது அவருக்கு.

தாங்கள் சென்ற லாரியைப் பிரதான சாலையில் நிறுத்திவிட்டு முதலில் அவர் மட்டும் மழையோடு மழையாகத் தோட்டத்துக்குள் சென்றபோது அங்கே எந்த விவரமும் தெரியவில்லை. எஸ்டேட் அலுவலகக் கட்டிடங்கள் ஆளரவமின்றி இருந்தன. ஏலக்காய் உலர்த்திக் குவிக்கும் தகர ஷெட்டுகள் இருந்த பகுதிக்குப் போகுமுன் தற்காப்பைக் கருதிக் கீழே லாரியிலிருந்த மற்றவர்களையும் மேலே வரச் சொல்லி 'டார்ச்' மூலம் சமிக்ஞை காண்பித்திருந்தார் அவர். மற்றவர்களும் கூட்டமாக வந்து சேர்ந்தபின் ஒவ்வொரு பகுதியாகச் சுற்றினார்கள். மலை உச்சியில் பின்புறப் பள்ளத்தாக்கில் பேரோசையுடன் ஒரு காட்டாறு ஓடும் இடத்தருகே மேட்டில் அமைந்திருந்த தகரக் கொட்டகை வாசலில் மட்டும் கம்பளிக் கோட் அணிந்து பீடி புகைத்தபடி ஒரு தடித்த ஆள் உட்கார்ந்திருந்தான். அண்ணாச்சி அவன் முகத்தில் டார்ச் ஒளியைப் பாய்ச்சிப் பார்த்துவிட்டு அவன் சந்தேகப்பட்டுக் கூப்பாடு போட்டோ, விசில் ஊதியோ எஸ்டேட்டின் வேறு பகுதிகளிலிருந்து ஆட்களைக் கூப்பிட்டுவிடாமல் இருக்கட்டும் என்று, ''யாரது? மருதமுத்துத் தம்பிதானே?'' என்று தமக்குத் தெரிந்த அவன் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டும் வைத்தார். டார்ச் லைட்டுகளோடு கம்பும் கழியுமாக மழை இருளில் பலரைப் பார்த்து மிரளத் தொடங்கியிருந்த அவன் அண்ணாச்சியின் குரலைக் கேட்டதும் தெம்படைந்தான்.



''அடேடே! அண்ணாச்சிங்களா? ஏது இந்நேரத்துக்கு இந்தப் பக்கம்?'' என்று விசாரித்தபடி எழுந்து வந்தான் அந்த எஸ்டேட் வாட்ச்மேன். அண்ணாச்சி மேலும் தொடர்ந்து அவனைக் கனிவாக விசாரித்தார்.

''எல்லாம் உன்னைப் பார்த்துட்டுப் போகலாம்னுதான் தம்பீ! வீட்டிலே சம்சாரம் நல்லா இருக்கா? வீடு எங்கே....? எஸ்டேட் 'லேன்'லே தானே?''

''ஆமாம். அங்ஙனேதான் ஒரு புறாக் கூடு விட்டிருக்காங்க.... வாங்க வீட்டுக்குப் போயி ஒரு டீ குடிக்கலாம்.''

''வேண்டாம் தம்பி! உங்க புது முதலாளி அரசியல்லே நமக்கு ஆகாத வரு. 'லேன்'லே மத்தவங்க காணுறப்பலே நான் உன் வீட்டுக்கு வந்தா அது உனக்குக் கெடுதலா முடியும்....''

''ஒரு கெடுதலுமில்லே.... நீங்க சும்மா வாங்க அண்ணாச்சி! 'லேன்'லே இப்போ ஈ காக்கா இருக்காது. எல்லாம் குளிருக்கு அடக்கமாக் கம்பளிலே பூந்துக்கிட்டு உள்ளே முடங்கியிருக்கும்.''

அவன் வற்புறுத்தவே உடன் வந்திருந்த மணவாளன் முதலிய மாணவர்களை அங்கேயே இருக்கச் சொல்லி விட்டு அவனோடு அண்ணாச்சி எஸ்டேட் லேனுக்குப் போனார். போகும்போதே அவனிடம் தாம் வந்த காரியத்தைச் சொல்லி மெல்ல விசாரிக்கத் தொடங்கி விட்டார் அவர்.

''உங்ககூட இருந்த ஸ்டுடன்ஸைப் பார்த்ததுமே நீங்க இதுக்காவத்தான் வந்திருக்கணும்னு புரிஞ்சுக்கிட்டேன். நீங்க தேடி வந்த ஆள் இங்கேதான் இருக்கு...ஆபத்து எதுவுமில்லே. இன்னிக்குக் காலையிலே மட்டும் கொஞ்சம் சித்திரவதை பண்றப்பல சிரமப் படுத்தி அந்தப் பையன்கிட்ட ஒரு லெட்டர் எழுதி வாங்கினாங்க... அப்புறம் ஒண்ணுமில்லே. இப்ப நீங்க என்னைப் பார்த்தீங்களே, அந்தத் தகரக் கொட்டகையிலேதான் அடைச்சுப் போட்டிருக்காங்க...'' என்று விசுவாசம் காரணமாக எதையும் ஒளிக்காமல் அண்ணாச்சியிடம் சொல்லி விட்டான் மருதமுத்து.

பேசிக் கொண்டே எஸ்டேட் லேனில் அவன் வீட்டருகே வந்திருந்தார்கள் அவர்கள். மருதமுத்து சொன்னது போலவே லேனில் பேச்சரவம், ஊரரவம் அடங்கி விட்டிருந்தன.

அரிக்கேன் லாந்தர் ஒளியில் கட்டான உடலமைப்புள்ள இளம் பெண் ஒருத்தி அமர்ந்து பச்சைப் பசும் கதிரில் இருந்து ஏலக்காய் உதிர்த்துக் கொண்டிருந்தாள்.

''அண்ணாச்சி வந்திருக்காங்க பாரு'' என்று கணவன் குரல் கொடுத்ததும் மரியாதையாக எழுந்து, ''வாங்கண்ணே!'' என்று கைகூப்பினாள் அவள். அண்ணாச்சியும் அவளைக் கனிவாக நலம் விசாரித்தார். பத்து நிமிஷங்களில் கடக்கடக் தேநீர் வந்தது. தேநீரில் ஏலக்காய் வாசனையும் இருக்கவே, ''இது என்ன புது மாதிரி டீ?'' என்று விசாரித்தார் அண்ணாச்சி.

''இது ஒரு புதுப் பக்குவம்!.... அது தான் கண்டுபிடிச்சது.... ரொம்ப நல்லா இருக்குமே?'' என்றான் மருதமுத்து. ''நல்லா இருக்கக் கொண்டு தானே விசாரிக்கிறேன். இல்லாட்டி விசாரிப்பேனா?'' என்று அவன் மனைவியைப் பார்த்துப் புகழ் தொனிக்கக் கூறி விட்டு, ''தம்பீ! எனக்கு நேரமாகுது! நீ சீக்கிரமா என்னை அனுப்பி வைக்கணும். உன்னை நம்பித்தான் தேடி வந்திருக்கேன்'' என்று அண்ணாச்சி மருதமுத்துவிடம் துரிதப்படுத்தினார். இருவருமாகப் புறப்பட்டார்கள். வாசல் வரை வந்த மருதமுத்து திரும்பவும் உள்ளே சென்று தன் மனைவியிடம் ஏதோ சொல்லிவிட்டு வந்தான்.

''வேறொண்ணுமில்லே. நீங்க இங்கே வந்து போனது யாருக்கும் தெரிய வாணாம்னு அதுங்கிட்டச் சொல்லிட்டு வந்தேன்'' என்று வெளியே வந்து அண்ணாச்சியிடமும் அதைக் கூறினான் அவன்.

எஸ்டேட் லேனிலிருந்து திரும்பும் போது 'பாண்டியனைத் தன்னோடு அனுப்பிவிட வேண்டும்' என்று அவனிடம் வெளிப்படையாகவே கூறி உதவியை நாடினார் அண்ணாச்சி.

''உங்களுக்கு நான் கடமைப்பட்டிருக்கேன், அண்ணாச்சி! ஆனா நீங்க ஒண்ணு செய்யணும். கதவைத் திறந்து பையனை உங்ககிட்டே ஒப்படைச்சப்புறம் என்னோட கையைக் காலைக் கட்டி என்னைத் தூக்கி அதே தகரக் கொட்டகைக்குள்ளாறப் போட்டுக் கதவை வெளிப் பக்கமா அடைச்சுட்டுப் போயிடுங்க..... காலையிலே அவங்க ஆளுக தேடி வந்தா, 'இருட்டிலே யாரோ முகந் தெரியாத ஆளுங்க வந்து என்னை அடிச்சுப் போட்டப்புறம் பையனைக் கூட்டிட்டுப் போயிட்டாங்க'ன்னு நானே ஒரு டிராமா ஆடிக் கொள்ளச் சுலபமாயிருக்கும்'' என்றான் மருதமுத்து.

ஆனால் என்ன ஆச்சரியம்? இவர்கள் தகரக் கொட்டகை அருகே போவதற்குள்ளேயே மாணவர்கள் 'பாட்லாக்கை' உடைத்துக் கதவைத் திறந்து பாண்டியனை விடுவித்து அவனோடு அண்ணாச்சியின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்

மைக்ரோஃபைன்ட்

ஆஸ்ப்ரோ

அதிவேகமாகக் கரைந்து, அதிவேகமாகக் கிரகிக்கப் படுகிறது. அதனுல்தான் அது அதிவேகமாக வலியைப் போக்கி விடுகிறது—

சாதாரண வலிநிவாரண மாத்திரைகளைவிட இருமடங்கு அதிக வேகத்துடன் வலியைப் போக்கி விடுகிறது.







சாதாரண மாத்திரைகளைப் போலன்றி, ஆஸ்ப்ரோவின் நுண்ணிய அணுக்கூறுகள் அதிவேகமாகக் கிரகிக்கப் படுகின்றன. வலியின் இருப்பிடத்தை அதிவேகமாக அடைகின்றன. உங்களுக்கு அதிவேக நிவாரணம் அளிக்கின்றன.

கீழ்க்கண்டவைகளுக்கு மைக்ரோஃபைன்ட் ஆஸ்ப்ரோ சாப்பிடுங்கள்: தலைவலி • உடல் வலி • ஜலதோஷம் • ஃப்ளூ • மூட்டுவலி • தொண்டை அழற்சி • பல்வலி

சாப்பிடும் அளவு: வயது வந்தவர்கள்: இரண்டு மாத்திரைகள். தேவைப் பட்டால் மீண்டும் சாப்பிடவும். குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டர் சொற்படி

ஆஸ்ப்ரோ மட்டுமே மைக்ரோஃபைன் செய்யப் படுகிறது, அதிவேகமாக வலியை வெளியே இழுப்பதற்காக.

நிகோலஸ் தயாரிப்பு

A.G.57 TM

தார்கள். அண்ணாச்சி விரைந்து முன் சென்று பாண்டியனைக் கட்டித் தழுவிக் கொண்டார்.

''பார்த்தியா தம்பி! நம்ப புலிக் குட்டிங்க நீ வந்து கதவைத் திறக்கற வரை விடலே. அவங்களே திறந்து விடுவிச்சுட்டாங்க.... இப்ப உன்னைக் கட்டிப் போட வேண்டியதுதான் பாக்கி.... உள்ளே வா... அதைச் செய்யலாம்...'' என்று அண்ணாச்சி மருதமுத்துவைக் கூப்பிட்டார்.

''இராவணசாமி மேலேயும் உங்க எதிரிங்க மேலேயும் இருக்கிற கோபத்திலே என்னைக் கட்டிப் போடறப்போ ரொம்பப் பலமாக் கட்டிப் போட்டுடாதீங்க அண்ணாச்சி....''

''பயப்படாமே வா, தம்பி! குளிருக்கு அடக்கமாப் பார்த்துக் கட்டிப் போட்டு வைக்கிறேன்.''

விஷயம் புரியாமல் விழித்த பாண்டியனுக்கும் மற்ற மாணவர்களுக்கும் அண்ணாச்சி செய்யவேண்டியதை விளக்கினார்.

மருதமுத்துவை அவனே கொடுத்த கயிறுகளால் கட்டிப் போட்டுவிட்டு, ''பெரிய அடிபிடி சண்டையெல்லாம் போட்டுத்தான் நம்ம பையனை விடுவிக்க முடியும்னு இளவைக் கம்பெல்லாம் கொண்டாந்தோம். நீ இருந்ததுனாலே காரியம் சுளுவா முடிஞ்சுட்டுது.....'' என்றார் அண்ணாச்சி.

''இளவைக் கம்பு கொண்டாந்ததுக்கு வீணாகாமே இருக்கணும்னு நினைச்சா நீங்க என்னையே ரெண்டு போடு போடறதைத் தவிர வேறு வழியில்லே, அண்ணாச்சி...''

''சே சே! உன்னையா...? கூடாது. நீ செய்திருக்கிற உபகாரம் பெரிசு தம்பீ.....!'' என்று சிரித்தபடியே சொல்லிவிட்டு மற்ற மாணவர்களோடும் பாண்டியனோடும் புறப்பட்டார் அவர். திரும்பும்போது மழை இல்லை. இறக்கத்தில் லாரி வேகமாகச் செல்ல முடிந்தது.

இரவு பத்தரை மணிக்கு லாரி லேக் வியூ ஹோட்டல் முகப்பை அடைந்ததும் எல்லோரும் இறங்கிக் கொண்டு லாரியைத் திருப்பி அனுப்பி விட்டார்கள். மணவாளனும் அண்ணாச்சியும் பாண்டியனை அறைக்கு அழைத்துச் சென்றார்கள். மற்ற மாணவர்கள் அது அகாலமானாலும் பரவாயில்லை என்று பேராசிரியர் பூதலிங்கத்தைப் பார்த்து விவரங்களைக் கூறுவதற்குச் சென்றார்கள். லேக் வியூ ஹோட்டலில் ஒன்பதரை மணிக்கே எல்லாம் தீர்ந்திருந்தது. அண்ணாச்சி எங்கோ வெளியே சென்று கடச்சுட இட்டிலி வாங்கி வந்தார். சாப்பிட்டு முடிந்ததும் நடந்ததையெல்லாம் விவரமாக அவர்களுக்குச் சொன்னான் பாண்டியன்.

''நிர்ப்பந்தம் பொறுக்க முடியாமல்தான் என் அபேட்சை மனுவைத் திரும்பப் பெறுவதுபோல் நான் அந்தக் கடிதத்தை எழுதினேன். அபேட்சை மனுவில் கையெழுத்துப் போட்டிருந்தது போல் போடாமல் ஓர் எழுத்து வித்தியாசமாகக் கையெழுத்துப் போட்டால் கூட விலகல் மனு செல்லாது என்பது எனக்குத் தெரியும். அந்த நம்பிக்கையில்தான் துணிந்து விலகல் மனுவை அனுப்பி வைத்தேன். இல்லையானால் இராவணசாமியின் ஆட்கள் என் எலும்பை நொறுக்கியிருப்பார்கள்...''

''இதோடு எதுவும் முடிந்துவிடவில்லை, பாண்டியன்! எலும்பை நொறுக்குவது இனியும் நேரலாம். அவர்கள் உன்னை ஏமாற்றுவதாக நினைத்துக் கடத்திக் கொண்டு போயிருக்கிறார்கள். நீயோ அவர்களோடு போய் அவர்களிடமே சிக்கியிருந்தும் தந்திரமாக அவர்களையே ஏமாற்றிவிட்டு வந்திருக்கிறாய். நாளைக் காலையில் முடிவான வேட்பாளர் பட்டியலிலே உன் பெயரையும்பார்த்துத் திருடனுக்குத் தேள் கொட்டினதுபோல் விழிக்கப் போகிறார்கள் அவர்கள். அப்புறம்தான் உன் மேல் அவர்கள் கோபம் இரண்டு மடங்காகும்'' என்றார் மணவாளன்.



அண்ணாச்சியும் அவனை எச்சரித்து ஒரு யோசனை சொன்னார்: ''தம்பீ! தேர்தல் நல்லபடியா முடிஞ்சு ஜெயிக்கிறவரை நீங்க மணவாளன் அண்ணனோடு இங்கே இந்த ஹோட்டல் 'ரூமி'லேயே தங்கிடறதுதான் பாதுகாப்பு.''

''பாதுகாப்பாக இருக்கலாம்! ஆனால் என் எதிரிகள் நான் பயத்தினால் யூனிவர்ஸிடி எல்லையிலிருந்து ஹாஸ்டலைவிட்டே ஓடிப் போய் வெளியே ஒளிந்துகொண்டு ஜெயிக்கப் பார்க்கிறேன் என்று இதையே குதர்க்கமாக வியாக்கியானம்

செய்வார்கள். நான் நாளைக்கு விடிந்ததுமே ஹாஸ்டலுக்குப் போய்விடுவதுதான் நல்லது. ஹாஸ்டலில் இருப்பதுதான் பாதுகாப்புங்கூட'' என்றான் பாண்டியன். மணவாளனும் இதையே ஆதரித்தார்.

''இதில் அவன் சொல்வதுதான் சரி, அண்ணாச்சி. அவன் ஹாஸ்டலிலேயே இருக்கட்டும்! பக்கத்து அறைகளிலும் மற்ற மாணவர்களிடமும் சொல்லி எச்சரிக்கையாகவும், பாதுகாப்பாகவும் இருக்க ஏற்பாடு செய்துகொள்ளலாம்.''

மறு நாள் காலை வேட்பாளர்களின் பெயர்கள் அடங்கிய இறுதிப் பட்டியல் ஒட்டப்பட்டபின் பாண்டியன் விடுதி அறைக்குப் போவது என்று முடிவாயிற்று. ''நிர்ப்பந்தமாக விலகல் கடிதம் எழுதி வாங்கி உறையின் முகவரி முதற்கொண்டு என் கையாலேயே எழுதுவித்து அதைக் கொண்டு போய்க் காலை எட்டு மணிக்குள் மல்லிகைப் பந்தல் தபால் நிலையத்திலேயே சேர்த்தார்கள் என்று சொன்னேன் இல்லையா? அதற்கு முன்னால் வேறொரு முயற்சியும் செய்தார்கள். எனக்கு இரண்டாயிரம் ரூபாய் பணம் தருவதாகவும், வெற்றி பெற்றபின் நான் அவர்கள் கட்சியைச் சேர்ந்துவிட்டதாக ஓர் அறிக்கை எழுதித் தந்தால் போதும் என்றும் கெஞ்சினார்கள். எனக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. அதை என்னிடம் கேட்கும்போது இராவணசாமி, கோட்டச் செயலாளர் எல்லாருமே இருந்தார்கள். கத்தியும் சைக்கிள் செயின், பழைய இரும்புக் குழாய், கடப்பாரை என்று கிடைத்ததைக் கையில் வைத்துக் கொண்டு அவர்கள் ஆட்களும் நின்று கொண்டிருந்தார்கள்.

''நீங்கள் பிறந்த நாள் விழாக் கொண்டாடிப் பொன்னாடை போர்த்திப் பொழில் வளவனை விலைக்கு வாங்கி விடலாம். அதற்கும் மேல், வி.சி.யைக்கூட வாங்கிவிடலாம். ஆனால் என் போன்ற தேசபக்த இளைஞர்களை விலைக்கு வாங்கவோ, விலை பேசவோ முடியாது. தேவைக்குத்தான் ஆசை, விலை எல்லாம் உண்டு. தேவையின்மைக்கு ஆசை, விலை எதுவுமே கிடையாது. கொன்றாலும் இதற்கு நான் சம்மதிக்கமாட்டேன் என்றேன்'' என்று அங்கு நடந்தவற்றை எல்லாம் சொன்னான் பாண்டியன்.

''நீ ஏன் அப்படிச் செய்தாய் பாண்டியன்? பணத்தை வாங்கிக் கொள்வது போல் அப்போதைக்கு நடித்துத் தப்பி வந்ததும் ஊரறிய அவர்கள் குட்டை உடைத்திருக்கலாமே?'' என்று கேட்டார் மணவாளன்.

''இதுமாதிரி விஷயங்களில் என்னால் நடிக்கக்கூட முடியாது. நல்லவேளையாக அந்த ஆட்களே, 'பணம் வாங்கிக் கொண்டு வென்றதும் எங்கள் பக்கம் வர உனக்குச் சம்மதம் இல்லை என்றால் இப்போதே உன் அபேட்சை மனுவைத் திரும்பப் பெற்று விலகிக் கொள்வதாக எழுதிக் கொடுத்துவிடு' என்ற இன்னொரு வழியையும் சொல்லி மிரட்டினார்கள். அந்த வழியில் நானும் என் அபேட்சை மனுவும் சேர்ந்தே தப்புவதற்கு இடமிருந்ததனால் அதற்கு ஒப்புக் கொள்வது போல் ஒப்புக் கொண்டு அவர்களை ஏமாற்ற முடிந்தது.''

அன்று அந்தப் பரபரப்பான இரவில் லேக் வியூ ஹோட்டலின் அறையில் அமர்ந்து அவர்கள் இவ்வாறு பேசிக் கொண்டிருந்தபோது முற்றிலும் எதிர்பாராத விதமாக மோகன்தாஸ், பொன்னையா முதலிய மாணவர்கள் பின்தொடரப் பேராசிரியர் பூதலிங்கமே அங்கு வந்து சேர்ந்தார்.

''பிரதம தேர்தல் அதிகாரி என்ற முறையில் இப்போது நான் இங்கே வரவில்லை பாண்டியன்! உன் மேல் அன்பும் அநுதாபமும் கொண்ட ஆசிரியன் என்ற முறையில்தான் வந்திருக்கிறேன். பயப்படாதே! இவ்வாறான செயல்களின் மூலம் உன் புகழையும், பெருமையையும் அவர்கள் அதிகமாக்குகிறார்கள். எதிரிகள் உன்னை ஒடுக்க ஒடுக்க நீ மாணவர்களிடையே தலைவனாக்கப்படுகிறாய்.''

''இந்த வேளையில் நீங்கள் எதற்கு இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டு இங்கே வந்தீர்கள்? சொல்லி அனுப்பியிருந்தால் நானே வந்திருப்பேனே?'' என்று எழுந்து நின்று அவரை வரவேற்றான் பாண்டியன். அருகே வந்து பாண்டியனின் முதுகில் அன்போடு தட்டிக் கொடுத்தார் பேராசிரியர். மணவாளனையும், அண்ணாச்சியையும்கூட அன்போடு விசாரித்தார் அவர்.

''நாட்டின் அரசியல் நிலைகளும், போக்குகளும் பல்கலைக் கழகத் தேர்தலிலும் மாணவர்களிடமும் பிரதிபலிக்கின்றன. அது தவறில்லை. ஆனால் எங்கும் எதிலும், எப்போதும் தாங்களே முன்நின்று அதிகாரம் செய்ய வேண்டும் என்று இராவணசாமியும் அவர் வகை ஆட்களும் ஏன் இப்படி அதிகார வெறி பிடித்து அலைகிறார்கள் என்பதுதான் புரியவில்லை. ஜனநாயகத்தில் மக்களுக்குத் தொண்டு செய்பவர்களுக்குத்தான் இடம் உண்டு. மக்களை அதிகாரம்

செய்பவர்களுக்கு இடமில்லை. இவர்களுடைய அதிகார வெறியோ எல்லை மீறிப் போய்க் கொண்டிருக்கிறது. இவர்களிடம் சிலர் தாட்சிண்யம் காரணமாகப் பயப்படுகிறார்கள். வேறு சிலர் பயம் காரணமாகத் தாட்சிண்யப்படுகிறார்கள். இன்று மாலை பேராசிரியர் பொழில் வளவனும், — மல்லை. இராவணசாமியும் கோட்டச் செயலாளரும் என் வீட்டுக்குத் தேடி வந்தார்கள். அவர்கள் என் வீட்டுக்குத் தேடி வந்ததே எனக்குப் பிடிக்கவில்லை. தமிழ்த் துறைத் தலைவர் பொழில்வளவனார் வேறு அவர்களோடு சேர்ந்து வந்த விதமும் பேசிய விதமும் வெறுப்பூட்டுவதாயிருந்தது. சிரமப்பட்டுப் பொறுத்துக் கொண்டேன்.

"'நம்ம பல்கலைக் கழக மாணவர் பேரவைத் தேர்தல் தொடர்பா இவங்க உங்ககிட்டே ஏதோ பேசணுமாம். உங்களை அறிமுகப்படுத்தச்சொல்லி என்னைக் கூப்பிட்டாங்க. அதுதான் இப்படிப் பார்த்து அறிமுகப்படுத்திவிட்டுப் போகலாம் என்று வந்தேன்' என்று ஆரம்பித்தார் பொழில் வளவனார். எனக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. மாணவர் பேரவைத் தேர்தல் பற்றி மாணவர்கள் அல்லாத இராவணசாமியும், கோட்டச் செயலாளரும் என்னிடம் வந்து பேச என்ன இருக்கும் என்பது எனக்குப் புரியவில்லை. இந்த மாதிரி விஷயங்களில் நான் எப்போதுமே 'ஸ்ட்ரெயிட் ஃபார்வர்டு' என்பது தெரிந்தும் பொழில் வளவனார் என்னிடம் யார் யாரையோ கூட்டிக் கொண்டு வந்து நிறுத்தியது எனக்கு எரிச்சலூட்டியது. பத்து வருஷங்களுக்கு முன் பொழில்வளவனார் பி.எச்.டிக்கு தீஸிஸ் ஸப்மிட் செய்த போது 'சங்க இலக்கியத்தில் காக்கை' என்ற தலைப்பைத் தேர்ந்தெடுத்து எழுதியதாகச் சொல்வார்கள். வர வர அவர் போகிற போக்கைப் பார்க்கும் போது 'சங்க இலக்கியத்தில் காக்கை' என்ற தலைப்புக்குப் பதில் 'சங்க இலக்கியத்தில் காக்கை பிடித்தல்' என்ற தலைப்புத்தான் அவருடைய ஆராய்ச்சிக்குரியதாக இருந்திருக்குமோ என்று எனக்கே சந்தேகமாக இருக்கிறது.

"'மாணவர்கள் பேரவைத் தேர்தல் பற்றி உங்களிடம் பேச எதுவும் இல்லை. நீங்கள் போகலாம்' என்று உட்காரவும் சொல்லாமல் அவர்களைத் துரத்த முயன்றேன் நான். 'இல்லிங்க...வந்து அந்தத் தம்பி பாண்டியன் தன்னுடை வேட்பு மனுவை வாபஸ் வாங்கிட்டதாகக் கேள்விப்படறோம்' என்று அவர்களே விஷயத்துக்கு வந்தார்கள்.



அப்படிச் சொன்னவர் இப்படி இருந்தார்!

■ ஸ்ரீமதி பில்லி ஜீன் கிங்கும் ரோஸ் மேரி காஸல்ஸும் அமெரிக்காவின் தலைசிறந்த டென்னிஸ் சாம்பியன்கள். இறுதி ஆட்டத்தில் இருவருமே மைதானத்தை விட்டு வெளியேறினார்கள். லைன்ஸ்மேன் பல தவறான முடிவுகளைக் கூறி அவர்களை உணர்ச்சிவசப்பட வைத்துவிட்டார். ஆட்டத்தைப் பாதியில் நிறுத்திவிட்டுச் சென்றதற்காக அவ்விரு சாம்பியன்களும் தங்களுக்குத் தாங்களே ஆயிரம் டாலர் அபராதம் விதித்துக் கொண்டார்களாம்!

■ பில்லி ஜீன் கிங் ஆடி நாட்களில் முதலில் [illegible] போடப்பட்ட டென்னிஸ் மட்டைக்கும் பதிலாக நைலான் பின்னிய மட்டையைப் பயன்படுத்திக் கொண்டிருந்தார். இதற்கு நேர் காரணம் கேட்கவே, ''எனக்குக் 'கட்' வாங்கிப் போடும் அளவுக்கும் பொருளாதார நிலை உயரவில்லை'' என்று கூறினாராம் பில்லி ஜீன் கிங். ஆயின் பின்நாட்களிலோ....

■ .... ஒரே வருஷத்தில் டென்னிஸில் 1,000,000 டாலர்கள் சம்பாதித்த முதல் விளையாட்டுப் பெண்மணியாக ஸ்ரீமதி பில்லி ஜீன் கிங் திகழ்ந்தார்!

- பீ. எஸ். எஸ்.

"'யாரிடம் எப்போது எப்படி அதைக் கேள்விப்பட்டீர்கள்?' என்று மெல்ல வளைத்து மடக்கினேன் நான்.

"'இல்லே... தகவல் தெரியவந்தது... அதான் வெற்றிச் செல்வன் முழுமனத்தோடு போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டதாக நாளைக்கு அறிவிப்பீங்களான்னு தெரிஞ்சுக்கிட்டுப் போக வந்தோம்' என்றார்கள் அவர்கள்.

"'நம்ம சி.எம்., கல்வி மந்திரி, வி.சி. எல்லாருமே வெற்றிச் செல்வன் தான் வரணும்னு விரும்பறாங்க' என்று பொழில் வளவனார் நடுவில் குறுக்கிட்டார்.

"'அப்பிடியா? அவங்கள்ளாம் உங்ககிட்டே வந்து சொன்னாங்களா அதை?' என்று நான் கேட்டதும்தான் அவர் வாயடைத்தது. 'எல்லாம் நடக்க வேண்டிய முறைப்படி, சட்டப்படி நடக்கும்! நீங்க போய் வாங்க'ன்னு சொல்லி அவர்களை அனுப்பி வைத்தேன். அங்கே உன்னை மிரட்டி ஒரு கடிதத்தை வாங்கித் தபாலில் அனுப்பிவிட்டுப் பின்னாலேயே என்னைத் தேடி வந்து இங்கே நான் என்ன செய்யப் போகிறேன் என்று நோட்டம் பார்க்கிற அளவுக்கு இதே வேலையாக ஒரு கும்பலைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள்.''

ஓர் அரை மணி நேரம் அவர்களோடு பேசிக் கொண்டிருந்துவிட்டுப் புறப்பட்டுச் சென்றார் பொருளாதாரப் பேராசிரி

தங்கமான

பள்ளி!



கோலார் தங்கவயலில் உள்ள ஓர் அரசுப் பள்ளிக் கூடத்தில் தொடர்ந்து இரண்டாவது முறையாக எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் ஒரு மாணவராவது தேறவில்லை! - டெக்கான் ஹெரால்டு - ''பாலி''

யர் பூதலிங்கம். அன்றிரவு விடுதி அறைக்குப் போகாமல் மணவாளனோடு ஹோட்டலிலேயே தங்கினான், பாண்டியன். தூக்கம் வரும் வரையில் பொருளாதாரப் பேராசிரியரின் நேர்மையைப் பற்றியும், அஞ்சாமையைப் பற்றியும் அண்ணாச்சியைப் பற்றியும் வியந்து பேசிக் கொண்டிருந்தார்கள் அவர்கள்.

''அண்ணாச்சியும்தான் நமக்காக உதவுகிறார். பாடுபடுகிறார். ஆனால் ஒரு நாளாவது அவர் தம் எல்லை கடந்து வந்ததே கிடையாது. வெளியே இருந்து உதவிகள் செய்வதைத் தவிர பல்கலைக் கழகத்துக்கு உள்ளே வந்து மாணவர்களை மிரட்டினார், ஆசிரியர்களை மிரட்டினார் என்று பேச்சே கிடையாது. ஆனால் இராவணசாமி வகை ஆட்கள் எதைச் செய்யவும் கூசுவதில்லை பார்த்தாயா பாண்டியன்?'' என்றார் மணவாளன்.

''இப்படி ஒப்பிடறதுகூடத் தப்பு! அண்ணாச்சி பதினெட்டாவது வயதிலிருந்து இந்த நாட்டின் பெரிய பெரிய தேசபக்தர்களோடெல்லாம் ஜெயிலுக்குப் போனவர். ஓர் உயரிய இலட்சியத்துக்காகக் குடும்ப வாழ்வுக்கே முழுக்குப் போட்டுவிட்டுத் தேசசேவையில் இறங்கியவர். தேசப் போராட்டத்துக்காக வீடு வாசல்களை இழந்தவர். இன்றைக்கு வீடு வாசல்கள் சொத்துச் சுகங்களை அடைவதற்காகவே பொது வாழ்வுக்கு வருகிறவர்களையும் அண்ணாச்சியையும் ஒப்பிடுவதே எனக்குப் பிடிக்கவில்லை'' என்றான் பாண்டியன். பேராசிரியர் பூதலிங்கம் புறப்பட்டுப் போகும்போதே அண்ணாச்சியும் கடைக்குப் போயிருந்ததால் இவர்கள் இங்கே அவரை வியந்து பேசிக் கொள்ள முடிந்தது.

மறு நாள் விடிந்ததுமே அண்ணாச்சி செய்தித் தாள்களுடனும், கண்ணுக்கினியாளுடனும் ஹோட்டலுக்கு வந்தார். ''இந்தா, தங்கச்சி! நல்லாப் பார்த்துக்க.... நீயே ஹோட்டல் பையன்கிட்டச் சொல்லிக் காப்பி வரவழைச்சு உன் கையாலேயே கொடு. 'நாளைக் காலையிலே தம்பி நம்மோட காப்பி குடிக்க இங்கே இருக்கும்'னு நேற்றுச் சொன்னேன். சொன்னபடி தேடிக் கொண்டாந்தாச்சு...'' என்றார் அண்ணாச்சி. பாண்டியனைப் பார்த்த மகிழ்ச்சி இருந்தாலும் அவள் உள்ளே வேறு ஏதோ ஒரு கவலை கரந்திருப்பது அவளுடைய முகத்தில் தெரிந்தது. அந்த வசீகரமான முகத்தில் வழக்கமான ஒளி இல்லை.

''நீங்கள் எல்லாம் இருந்துமா இப்படி நடந்தது?'' என்று மணவாளனைக் கேட்டாள் அவள்.

''நான் எவ்வளவோ எச்சரித்திருந்தும் பாண்டியன் ஏமாந்துவிட்டான்.... என்ன செய்வது? இனிமேல் ஜாக்கிரதையாக இருப்பான் என்று நினைக்கிறேன்'' என்றார் மணவாளன். பேசிக் கொண்டே இருந்தவள் திடீரென்று நாலாக மடிக்கப்பட்ட ஒரு துண்டுத் தாளை எடுத்துப் பாண்டியனிடம் நீட்டி, ''நான் நீங்கள் வெற்றி பெறப் பாடுபடுகிறேனாம். அதனால் என்னையும் உங்களையும் பற்றி இப்படியெல்லாம் தாறுமாறாக நோட்டீஸ் அடித்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்'' என்று கூறும் போதே அவள் குரல் கரகரத்துத் தொண்டை கம்மியது. கண்கள் கலங்கி விட்டன.

சிறிதும் பதறாமல் பாண்டியன் அந்த நோட்டீஸை வாங்கிப் படித்தான். குறிப்பறிந்து அண்ணாச்சியிடம் ஏதோ தனியே பேச வெளியேறுவது போல் மணவாளன் அறையிலிருந்து வராந்தாவின் பக்கமாக வெளியேறிச் சென்றார். அந்த நோட்டீஸைப் பாண்டியன் பார்த்தால் தன் மேல் அவனுக்கு இருக்கும் பிரியமே போய் விடுமோ என்றுதான் பயந்தாள் கண்ணுக்கினியாள். ஆனால் பாண்டியனோ அதைப் படித்துவிட்டுச் சிரித்தான். பின்பு சொன்னான்:

''இப்படி ஆயிரம் நோட்டீஸ் அடித்துக் கொடுத்தாலும் என் மனத்தில் உன் மேலுள்ள அன்பு போகாது! தெரிந்தோ தெரியாமலோ இதை எழுதியவன் உன்னையும் என்னையும் மிக நெருக்கமாகச் சம்பந்தப்படுத்தித்தான் எழுதியிருக்கிறான். நம்முடைய காதலின் அந்தரங்கத்தை ஒப்புக் கொண்டு அச்சடித்து அங்கீகரித்த ஒரு காரணத்துக்காக அவனுக்கு நன்றி கூறுவதை விட்டு விட்டு நீ ஏன் இதற்காகக் கண் கலங்குகிறாய்?'' என்று பாண்டியன் கேட்ட பின்புதான் அவள் முகத்தின் இருள் மாறிச் சுபாவமான சிரிப்பு மலர்ந்தது.

(தொடரும்)



ஆந்திர கேசரி

ஆகஸ்டு 23ம் தேதி பிரகாசம் அவர்களின் நூற்றாண்டு விழா.

மூன்று நாட்கள் விடாமல் ஆந்திர கேசரி பேசினார். 'ஹிந்து' பத்திரிகையில் மட்டும் இவர் பேச்சு மொத்தம் முப்பத்தெட்டுப் பத்திகளில் பிரசுரிக்கப்பட்டன. சுதந்திரம் கிடைத்து இரண்டு ஆண்டுகளில் சென்னை சட்டசபையில் பிரகாசம் பேசிய பேச்சு இது.

வாழ்வு முழுவதுமே போராட்டமாக அவர் பாடுபட்டார். பிரகாசம் கலந்துகொள்ளாத விடுதலைப் போராட்டம் எதுவுமே இல்லை. இவரை மனத்தில் கொண்டுதான் "உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை, அச்சமென்பதில்லையே" என்று பாரதியார் பாடியிருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது.

குண்டூரில் பிறந்த இவர் சிறு வயதில் கிராமத்தில் செய்த அட்டகாசம் இவ்வளவு என்று சொல்ல முடியாதாம். மிக விஷமம். படிப்பதில் அக்கறை காட்டாததால் மெட்ரிக் பரீட்சை தேறவில்லை. பின்னர் புத்தி வந்து பாடுபட்டுப் படித்து லண்டன் சென்று பாரிஸ்டர் ஆனார். பள்ளிக் காலத்தில் இவர் அரிச்சந்திர நாடகத்தில் சந்திரமதியாக நடித்திருக்கிறார்.

கேசரி என்றால் சிங்கம். பார்வைக்கும் சிங்கம்; செயலிலும் சிங்கம். வக்கீல் தொழிலிலேயே இவர் சிம்மமாக விளங்கினார். ஆஷ் துரை கொலை வழக்கில் இரண்டாவது எதிரி சங்கரகிருஷ்ணய்யருக்காக ஆஜராகிப் போலீஸ் தரப்பு வாதங்களைத் தகர்த்தெறிந்தார்.

இவருடைய 'சுயராஜ்யா' தினசரிப் பத்திரிகை விடுதலைப் போரில் செய்த சேவை மகத்தானது. இதை நடத்தியதில் அவர் வீடு வாசல் எல்லாம் போய்விட்டன. கிருபாநிதி, கே. ராமராவ், காசா சுப்பாராவ் போன்ற பத்திரிகை ஜாம்பவான்கள் உருவாகியது இங்கேதான். தமிழ் சுயராஜ்யாவுக்கு எம். எஸ். சுப்பிரமணிய அய்யர் ஆசிரியராக இருந்தார்.


சைமன் கமிஷன் பகிஷ்காரம் சென்னை நகரில் பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. போலீஸ் அதிகாரி ஒருவர் துப்பாக்கியைக் காட்டி, "உடனே கலைந்து போகாவிட்டால் சுடுவேன்" என்று மிரட்டினார். ஆந்திர கேசரி அஞ்சவில்லை. "அப்படியா! சுடுங்கள் பார்க்கலாம்" என்று தம் சட்டையைக் கிழித்து மார்பைத் திறந்து காட்டினார். அதிகாரியின் கையிலிருந்த துப்பாக்கி அவரையும் அறியாமல் கீழே விழுந்தது. இந்தச் சம்பவம் நடைபெற்ற இடத்தில்தான் இப்போது அவருக்குச் சிலை வைக்கப்பட்டுள்ளது.

1937ல் ராஜாஜி சென்னையில் மந்திரிசபை அமைத்தபோது இவர் ரெவின்யூ மந்திரியாகப் பொறுப்பேற்றார். ஜமீன் ஒழிப்பு இவர் மேற்கொண்ட முக்கியமான பணியாகும்.

இந்தியா சுதந்திரம் அடையு முன் இவர் தலைமையில் மந்திரிசபை ஏற்பட்டது. பிர்க்கா அபிவிருத்தி, கதர் அபிவிருத்தி முதலிய அரும் திட்டங்களை இவர் செயல்படுத்தினார். என்றாலும் எதிர்ப்பு காரணமாக இவர் தொடர்ந்து பதவியில் இருக்க முடியவில்லை. இவர் மீது என்னதான் குறை கூறப்பட்டாலும் மிகப் பெரிய காரியங்களை அபாரத் துணிவுடன் செய்தார் என்பதில் இருவித அபிப்பிராயங்களுக்கு இடமில்லை.

ஆந்திர ராஜ்யம் தனியாகப் பிரிந்த பின்பும் பிரகாசமே முதன் மந்திரியானார். அவர் பின்னர் பிரஜா சோஷலிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். எக்கட்சியில் அவர் இருந்தபோதிலும் ஆந்திர மக்கள் அவரை ஈடு இணையற்ற தலைவராகவே மதித்து வந்தனர். — ரஜன்

அசதி யாருக்கு?



இஸ்ரேல் நாட்டின் பிரதம மந்திரியான ஸ்ரீமதி கோல்டாமீருக்கு 74 வயது ஆகிறது. இருந்தும் அவரைப் போலக் கடுமையாக உழைப்பவர்களைப் பார்க்க முடியாது. ஒரு சமயம், அவருடைய அந்தரங்கக் காரியதரிசி அவரைப் பார்த்து, "நீங்கள் பத்து நாட்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளக் கூடாதா?" என்று கேட்டார்.

"ஏன், என்னைப் பார்த்தால் அசதியாக இருப்பதாகத் தோன்றுகிறதா?" என்று கேட்டார் கோல்டா மீர்.

"இல்லை, எனக்குத்தான் அசதியாக இருக்கிறது" என்றார் காரியதரிசி.

"அப்படியானால் நீங்கள் பத்து நாட்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்" என்று சிரித்துக்கொண்டே சொன்னார் ஸ்ரீமதி கோல்டா மீர். உதவி: நாமோடி.

ராஜாஜியின் ஜெயில் டைரி



1921 டிசம்பர், 22உ

நேற்று இரவு ஏற்பட்ட உணர்ச்சி மாறி முற்றிலும் வேறுவிதமான உணர்ச்சி உதிக்கலாயிற்று.

ஓடிப் போகாமல் இருப்பதற்காகப் பூட்டி வைக்கவேண்டிய அளவுக்கு நான் சுதந்திரம் அடைந்துவிட்டேனு என்று எண்ணினேன்.

என் வாழ்நாளில் அன்றுதான் பிரிட்டிஷ் அடிமைத் தளையை அறுத்துவிட்டுச் சுதந்திரம் அடைந்துவிட்டதாக உணர்ச்சி உண்டாயிற்று. மாலையிலே அடைத்துப் பூட்டியதைப் பற்றியும், படிக்கவோ, எழுதவோ விளக்குத் தராததைப் பற்றியும், இடம் புதிதாக இருந்ததைப் பற்றியும் எண்ணிக் கொண்டிருந்தபடியால் இரவு வெகு நேரம் வரையில் உறக்கம் வரவில்லை. வெளி உலக விவகாரங்களும் வீட்டிலுள்ளவர்களின் நினைப்பும் வருவதை வேண்டாம் என்று தடுத்தேன். வேலூர் நகரிலிருந்து வந்திருந்த நண்பர்கள் பக்கத்து அறைகளில் பாடிக் கொண்டிருந்தார்கள். அது சிறிது நேரம் இன்பகரமா யிருந்தது. அதன் பிறகு காவலாளிகள் அடிக்கடி ''எல்லாம் சரி'' என்று கூவிக் கொண்டிருந்தது நான் தூங்கும் வரை என் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது. அதன்பின் நான் உறங்கி விட்டேன். சிறைக்கு வருமுன் ஒரு வார காலம் என்னை வாட்டி எடுத்த ஆஸ்துமா நோய் அன்று முதல் தடவையாகத் தலைகாட்டாமல் போய்விட்டது.

நெல்லூரிலிருந்து வந்திருந்த காங்கிரஸ் ஊழியர்கள் லட்சுமி நரசிம்மராவும், வெங்கடசுப்பய்யாவும் ஆவர். அவர்கள் நன்னடத்தை ஜாமீன் கொடுக்க மறுத்து ஒரு வருஷச் சிறைத் தண்டனை பெற்றிருந்தார்கள். லட்சுமி நரஸிம்மராவ் வைத்திய மாணவரா யிருந்தவர், அதை விட்டு விட்டுக் காங்கிரஸ் சேவையில் இறங்கியிருந்தார். நல்ல அறிவு நிட்சண்யமுள்ள, கள்ளங் கபடமற்ற வாலிபர். அவருக்குச் சிறை உடை கொஞ்சங்கூடப் பொருத்தமாகத் தோன்றவில்லை. வெங்கடசுப்பய்யா, 'ஸ்கூல் பைனல்' படித்துக் கொண்டிருந்தவர். சேஷ ரெட்டியும் நன்னடத்தை ஜாமீன் கொடுக்க மறுத்துத் தான் சிறைக்கு வந்திருந்தார். எனக்கு அதிகமாக உள்ள சாதத்தை அவருக்குக் கொடுப்பேன். அந்தப் பீமசேனர் சந்தோஷமாக ஏற்றுக் கொள்வார். எனக்கு அதிகமேயன்றி அவருக்கு அது அற்பமேயாகும். நான் அறையைச் சுத்தம் செய்ய ஒரு துடைப்பம் கொண்டு வரும்படி சொன்னேன். அவ்வளவுதான், ஓடிப் போய் என்னுடைய அறையை ஓர் இடம் விடாமல் பரிசுத்தமாகப் பெருக்கிவிட்டார். சிறந்த பெண்கள்கூட இவ்வளவு கவனமாகச் செய்யமாட்டார்கள்.

லட்சுமி நரசிம்மராவ் என் தட்டையும் குவளையையும் எடுத்துச் சுத்தம் செய்தார். கூஜாவில் ஜலம் நிறைத்து வைத்தார்.

ஒத்துழையாமைக்காரர்கள் ஒவ்வொருவரும் சிறைக்குச் செல்லுமுன் சில நல்ல பாட்டுக்களைப் பாடக் கற்றுக் கொள்வது நல்லது.

லட்சுமி நரசிம்மராவை நான் சிறைக்கு வந்த மறுநாள் என் அறையிருந்த பகுதியிலிருந்து வேறு இடத்துக்கு மாற்றிவிட்டார்கள்.

காலையில் நான் காவலாளி ஒருவருடன் கிணற்றுக்குப் போய்த் துணிகளைத் துவைக்கவும், குளிர்ந்த நீரில் குளிக்கவும் செய்தேன். துணிகளைத் துவைக்க என்னிடம் வாளியுமில்லை, சோப்புமில்லை. குளிப்பதற்கு மட்டும் ஒரு நல்ல சோப்பு வைத்திருந்தேன். துணி துவைப்பது போன்ற வேலைகளைச் செய்து இந்த வாழ்வைப் பரிபூரண

மாக அனுபவிப்பதற்கு என்னிடம் அதிக பலமில்லாமலிருக்கிறதே என்று எண்ணி வருந்தினேன்.

சுப்பிரமணிய சாஸ்திரியார் ஸ்நானம் செய்து முடியவில்லை. நானும் ரங்கம் செட்டியும் எங்கள் அறைக்கு வந்தோம். எங்களுடன் வருவதற்காக வார்டர் ஓர் ''ஓவர்ஸியரை''க் கூப்பிட்டார். ஓவர்ஸியர் என்பவர் யார் என்று விசாரித்தேன். எங்களைக் கண்காணிப்பதற்காக எங்களுடன் வந்த ஓவர்ஸியர் என்பவர் கொள்ளையிட்டதற்காகத் தண்டிக்கப்பட்ட ஒரு கைதியே! அவர் வந்து இரண்டு வருஷங்கள் ஆயிற்று. இன்னும் மூன்று வருஷங்கள் கழித்து விடுதலை பெறுவார். அவருக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் சம்பளமாம். அதை அதிகாரிகள் வைத்திருந்து இறுதியில் தருவார்களாம்.





நாங்கள் காலை 11 மணிக்குக் காலை ஆகாரத்தை உண்டோம். என்னிடம் இருந்த உணவைத் திருட்டுச் சொத்தை வைத்திருந்ததற்காகத் தண்டனை பெற்ற நாராயணசாமிக்குக் கொடுத்தேன். மாலையில் மிருதியைத் திருட்டுக் குற்றத்துக்காக வந்திருந்த ஒரு குறவருக்குக் கொடுப்பதாகக் கூறினேன். இவர்கள் அபாரமான பசியுடையவர்கள்.


மோர் நல்ல ஆரோக்கியமான உணவு. விலையும் அதிகமில்லை. ஆனாலும் அதை அரசாங்கத்தார் கைதிகளுக்குக் கொடுக்காத காரணம் யாதோ, என்னால் அறிய முடியவில்லை.

எங்கள் வார்டர் பெருமாள், மெஸப்பட்டோமியாவில் யுத்த சேவை செய்து விலகிய சிப்பாய். சுதந்திரப் போர் எப்போது முடிவடையும் என்று அவர் என்னைக் கேட்டார். ''சீக்கிரமாக முடிவடையும். எல்லோரும் அதிகக் கஷ்டப்பட்டுப் போராடினால் இன்னும் சீக்கிரமாகவே முடிவடைந்து விடும்'' என்று நான் பதில் கூறினேன்.

அரசாங்கத்தார் எங்கள் எல்லோரையும் சகல விதத்திலும் சாதாரணக் கைதிகளைப் போலவே நடத்தத் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. அப்படி யில்லையானால் அவர்கள் அரசியல் கைதிகளைப் பற்றி அலட்சியமா யிருக்கிறார்கள் என்று தான் கூற வேண்டும். சாதாரணக் கைதிகளுக்குக் கொடுக்கும் உணவையே எங்களுக்கும் தருகிறார்கள். அவர்களை அடைத்துத் திறக்கும் நேரத்திலேயே எங்களையும் அடைத்துத் திறக்கிறார்கள். அவர்களைப் போலவே நாங்களும் அசுத்தமான தரை மீது நின்று கொண்டோ அல்லது உட்கார்ந்து கொண்டோதான், உணவைப் பிச்சைக்காரர்கள் மாதிரி அவசரமாக அள்ளி அள்ளிச் சாப்பிட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஆனால் இந்த மாதிரி நடத்துவதைக் கொண்டு அவர்கள் நம்மைப் பணிய வைத்துவிட முடியாது. இது நம் மனத்தை மேலும் திடப்படுத்தவும் அதிகத் தியாகம் செய்யும்படி தூண்டவுமே செய்யும் என்பது அரசாங்கத்தாருக்குத் தெரியாது. சிறையில் விசேஷமான சௌகரியங்கள் கிடைக்குமானால் அவை நம்மை அறியாமலே நம்முடைய ஆற்றலுக்கு உலை வைத்துவிடும்.




*
இன்க்ரிமின் பெறுவீர்..
உண்ணும் மிகையான உணவை
ஓங்கிய வளர்ச்சியாக மாற்றும்
*
சேருவீர் இன்க்ரிமின் இராத்தோடு...
வளர்ச்சிக்கான பசியைப் பெறுவீர் வளமுடனே!
பசியைப் பெருக்குவதோடு மட்டுமின்றி, உண்ணும் மிகையான உணவை ஓங்கிய வளர்ச்சியாக மாற்றுகிறது இன்க்ரிமின் டானிக். காரணம், உங்கள் குழந்தை சாப்பிடும் புரத சத்துகளை மேம்படப் பயன்படுத்திக்கொள்ளும் அதிமுக்கியமான அமினோ அமிலம் அதில் அடங்கியுள்ளது.
பெரிய குழந்தைகளுக்கு இரும்புச்சத்து அடங்கிய இன்க்ரிமின் ஸிரப் — 175 மிலி & 57 மிலி. இளங் குழந்தைகளுக்கு இன்க்ரிமின் டிராப்ஸ் — 10 மிலி.
* இன்க்ரிமின்
டானிக்
* அமெரிக்கன் ஸயானமிட் கம்பெனியின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.
Incremin syrup
Lederle
எல்லா மருந்து
கடைகளிலும் கிடைக்கின்
-INC. 21-1

ஸ்ரீ அரவிந்தர்


பேராசிரியர் கே.ஆர். சீனிவாச அய்யங்கார்

ஸ்ரீ அரவிந்தர் தமது எண்பது ஆண்டு வாழ்க்கையில் பல துறைகளில் புதுமையைத் தோற்றுவித்ததுடன், புதிய பாதையே அமைத்துப் பிரகாசிக்கச் செய்தார். அரசியல் புரட்சி, தேசியக் கல்வி, வேத உட்கருத்து விவரணங்கள், மந்திரக் கவிதை, ஆன்மீகத் தத்துவங்கள், யோக சமுச்சயம் — இப்படிப் பல துறைகளில் ஒளி வீசியது அவருடைய வாழ்வுப் பணி. ஸ்ரீ அரவிந்தர் கிரேக்க மொழியிலும் லத்தீன் பாஷையிலும் அதே போல் ஆங்கிலத்திலும் பிரெஞ்சு மொழியிலும் விசேஷப் புலமை பெற்றவர். சம்ஸ்கிருதமும் நன்கு அறிந்தவர். வங்காளம் அவருக்குத் தாய்மொழி. இவற்றைத் தவிர இதர பல ஐரோப்பிய மொழிகளிலும் இந்திய மொழிகளிலும் அவருக்கு நல்ல பரிச்சயம் உண்டு.

அவருடைய தந்தை ஸ்ரீ கிருஷ்ணதான் கோஷ் முழுக்க முழுக்க ஆங்கிலேயப் பண்பாட்டிலேயே ஊறித் திளைத்தவர். அப் பண்பாட்டிலேயே தமது புதல்வனும் வளர வேண்டும் என்று விரும்பினார். இந்திய பழக்க வழக்கங்களிலிருந்து ஒதுக்கி வைத்து அவற்றின் வாடையே வீசாது புதல்வனை வளர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஏழாவது வயதிலேயே அரவிந்தரை இங்கிலாந்துக்குப் படிக்க அனுப்பி வைத்தார். ஆனால் மனித ஆற்றலுக்கும் செயல்களுக்கும் மேலான சக்தியின் சங்கற்பமோ வேறு விதமாக இருந்தது. கல்வி முடிந்து இந்தியா திரும்பிய அரவிந்தர் தீவிர தேசாபிமானியாக, கனல் தெறிக்கும் புரட்சிக்காரராகத்தான் வந்தார். ஆங்கிலேய ஆட்சி நிர்வாகத்தின் அச்சுப்போல் அமைந்த ஐ.ஸி.எஸ். பரீட்சையில் சிறப்பாகத் தேறி அந்த ஆட்சிக்குத் தூண்போல விளங்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அரவிந்தர். எனினும், அதிலிருந்து சாதுரியமாகத் தம்மை விடுவித்துக்கொண்டு பரோடா சுதேச மன்னரின் சமஸ்தானத்தில் பணியாற்றச் சென்றார். அங்கே அவர் பணிபுரிந்த பன்னிரண்டாண்டு காலம் பிற்காலத்தில் அவர் மேற்கொண்ட புரட்சிகளுக்குத் தீவிரமான ஆயத்தங்களைச் செய்யவும் ரகசியத் திட்டங்களை வகுக்கவும் உபயோகப்பட்டன.

வங்கப் பிரிவினையை எதிர்த்துத் தேசிய இயக்கம் தோன்றியபோது பகிரங்கமாக அரவிந்தர் அரசியலில் நுழைந்தார். கல்கத்தா மாநகரிலிருந்து வெளிவந்த **வந்தே மாதரம்** என்ற பத்திரிகைக்கு ஆசிரியராகப் பணியேற்றார். விரைவிலேயே தேசியப் புரட்சிக் கட்சிக்குத் தாமே கேந்திர ஸ்தானம், இயக்குனர், செயலகம், தத்துவ போதகர் ஆகிய எல்லாமும் என்ற நிலைமைக்கு உயர்ந்து விட்டார். ரகசியப் புரட்சி ஜ்வாலையைக் கொழுந்து விட்டு எரியச் செய்தார். 1907-ம் ஆண்டு டிசம்பரில் சூரத் நகரில் நடந்த காங்கிரஸ் மகாநாட்டில் பிளவை ஏற்படுத்தி அதை இரண்டாகச் செய்வதில் முக்கிய பங்கு கொண்டிருந்தார் அரவிந்தர். மாணிக்தலா வெடிகுண்டு சதிக் குற்ற வழக்குச் சம்பந்தமாக ஓராண்டு காலம் (1908 மே முதல் 1909 மே வரை

1894ம் ஆண்டிலிருந்து பதின்மூன்று வருஷங்களுக்கு ஸ்ரீ அரவிந்தர் வசித்த இல்லம். பரோடா, டண்டியா பஜாரிலுள்ள இந்த இல்லத்தைக் குஜராத் மாநிலம் அரவிந்தர் சொஸைட்டிக்கு வழங்கியது.



யில்) அலிப்பூர் ஜெயிலில் சிறைவாசம் அனுபவித்தார். சிறையில் இருந்தபோது தான் அரவிந்தருக்கு ஜெகத்தை எல்லாம் இயக்கிக் கொண்டு அந்தர்யாமியாக விளங்கும் பரம புருஷனின் சர்வ வியாபகமான தரிசன ஆனந்த அனுபவம் ஏற்பட்டது. பிரபல தேசபக்த வழக்கறிஞர் சி. ஆர். தாஸ் அவர்களால் வெகு திறமையாக வாதாடப்பட்டுச் சதி வழக்கில் அரவிந்தர் குற்றவாளி அல்லவென்று நீதி மன்றத்தில் தீர்மானிக்கப்பட்டது. அரவிந்தர் புது அனுபவத்துடன் சிறையிலிருந்து வெளி வந்தார். உடனே ஆங்கிலத்தில் கர்ம யோகின், வங்காளத்தில் தர்மம் என்ற இரு சஞ்சிகைகளைத் தொடங்கினார். தேசிய அரசியலுக்கு இப்பத்திரிகைகள் மூலமாக ஒரு புதுத் திருப்பத்தையே அரவிந்தர் உண்டாக்கித் தந்தார். ஆனால் இதெல்லாம் கொஞ்ச காலத்துக்குத் தான். சில நாட்களுக்கெல்லாம், தமக்குள் ஏற்பட்ட ஆதர்ச ஆன்மிகத்தின் உயர் கட்டளைக்கு கீழ்ப்படிந்து அரசியல் துறையிலிருந்து விலகிக் கொண்டார். சிறிது காலம் சந்திர நாகூரில் தங்கியிருந்து, பின்னர் புதுச்சேரிக்கு வந்து விட்டார். ஒரு தபஸ்வி தமது குகைக்குத் தவத்துக்காகச் செல்வதுபோல் அரவிந்தர் புதுவைக்கு வந்தார். தமது இறுதி நாள் வரையில் இந்தக் குகையிலேயே இருந்தார்.

புதுவையில் ஆரம்ப நாட்களில் தமிழக தேசபக்தர்களான சுப்பிரமணிய பாரதி, வ. வே. சு. அய்யர், மண்டயம் சீனிவாசாச்சாரியார் ஆகியோர் அரவிந்தருடன் அடிக்கடி கூடிப் பேசி அளவளாவி மகிழ்வர். சம்பாஷணைகள் எவ்விதக் கட்டுப்பாடோ தடங்கலோ இல்லாமல் மனம் விட்டுப்பேசும் வகையில்தான் நிகழ்ந்தன. பரலோக வாழ்க்கை முதல் அதிகார வர்க்கத்தின் அடக்குமுறை வரையில் சோகம், கண்ணீர், நம்பிக்கை, ஹாஸ்யம் இப்படிப் பல துடிப்புகள் கலந்துள்ள மானிட சிந்தனைகள் முழுவதும் அவர்களுடைய பேச்சுக்களில் இடம் பெற்றன.

1914, ஆகஸ்டு 15ல் ஆன்மிகத் துறையில் அசாதாரண முன்னேற்றம் அடைந்திருந்த பிரெஞ்சு மாது மிர்ரா (இப்போது ஆசிரமத்தின் அன்னை என்று பரிவுடன் எல்லோராலும் அழைக்கப்படுபவர்) அவர்களின் கூட்டு முயற்சியுடன் ஆர்யா என்ற மாத சஞ்சிகையைத் தொடங்கினார் அரவிந்தர். இது முற்றிலும் தத்துவ விஷயங்கள் கொண்டது. ஆறரை ஆண்டு காலம் இச்சஞ்சிகை நடைபெற்றது. இதில் வெளிவந்த கட்டுரைகள் ஆன்மிகத் துறையில் விலைமதிப்பில்லாப் பொக்கிஷமாகும். கட்டுரைகளும், வேத, கீதா உபநிஷத்துக்களின் விரிவுரைகளும் ஏராளமாக எழுதப்பட்டன. பின்னால் புத்தக வடிவில் வெளிவந்துள்ள இவை மனத்துக்கு எட்டாத பண்டைக் காலத்திலிருந்து ஆரம்பித்து, வருங்காலத்துக்கு ஊடுருவிச் சென்று பயணிக்கும் ஞானக் கனி மொட்டுக்கள் போன்று அமைந்திருக்கின்றன.

காலம் செல்லச் செல்ல, இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் சிஷ்யர்கள் அவரைச் சூழ்ந்து வசிக்க ஆரம்பித்தபோது ஓர் ஆசிரமம் புதுவையில் உருவெடுத்தது. 1926 நவம்பர் 24ம் தேதியன்று அரவிந்தர் வெளி விவகாரங்களிலிருந்து முற்றிலும் விலகி, தனிமையிலேயே இருந்து விட்டார். ஆசிரமத்தை நிர்வகிக்கும் பொறுப்பை அன்னை ஏற்றுக் கொண்டார். அன்று முதல் ஆசிரமத்தை அரவிந்தரின் கருத்துக்கிசைந்த தேவ சங்கமாக ஆக்கிக் கொண்டு வருகிறார் அன்னையார். அரவிந்தர் தனிமையிலேயே இருந்தாலும் சிஷ்ய கோடிகளுடன் நெருங்கிய தொடர்பை அறவே துண்டித்துக்கொள்ளவில்லை. ஏன், வெளி உலக விவகாரங்கள்கூட அவர் சிந்தனையில் இடம் பெற்றன. 1942ல் ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் குழுவினரின் திட்டத்தை இந்தியா ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆலோசனை கூறினார். பின்னர் கொரியாப் போர் ஆரம்பித்தபோது தென்–கிழக்கு ஆசியா பகுதியில் கம்யூனிஸ்ட் சீனத்துக்குள்ள உள் நோக்கங்கள் அபாயகரமானவை என்று எச்சரிக்கை விடுத்தார். அவருடைய இறுதி ஆண்டுகளை மகத்தான இதிஹாஸமான 'ஸாவித்ரி'யை எழுதி முடிப்பதிலே செலவிட்டார். இது ஓர் அற்புதக் காவியம். இதில் மகாபாரதத்தில் உள்ள ஸாவித்ரியின் கதை புது முறையில் சொல்லப்பட்டுள்ளது. அன்பே மரணத்தை வெல்லும் என்ற தத்துவத்தை விளக்கும் விதமாக அவருடைய காவியம் அமைந்துள்ளது.

அரவிந்தரின் மறைவுக்குப் பின் அவரால் ஸ்தாபிக்கப்பட்ட ஆசிரமம் மிகப் பெரிதாக விரிவடைந்து விட்டது. ஆரோவில்—சர்வதேச உதய நகரம் — அரவிந்த ஆசிரமத்தின் விரிவான தோற்றமே. புதுவைக்கு அருகில் இது சமீபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அரவிந்தருடைய சமூக, அரசியல் ஆன்மீக சிந்தனைகளும் கருத்துக்களும் உலக நாடுகள் பலவற்றில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. 1947 ஆகஸ்ட் 15ந் தேதி அவர் கூறிய தீர்க்கதரிசன வாக்கு பங்களா தேஷ் பொறுத்தமட்டில் பலித்து விட்டிருக்கிறது. சட்டப்படி இணைப்பு ஏற்படுவதை விட இரு மக்களிடையே இதய இணைப்பு ஏற்படுவது தான் அதிக பலன் தரக் கூடியது என்று அவர் சொன்னார். இதே இணைப்பு இந்தியா—மேற்கு பாகிஸ்தான் மக்களிடையேயும் உண்டாகக்கூடும்.

''உலக வரலாற்றிலேயே அரவிந்தருக்குள்ள ஸ்தானம் அவர் புகட்டிய அறிவுக்காக மட்டும் அல்ல, யோக தரிசன விளக்கமாக அவர் திகழ்ந்ததும் அல்ல, அவற்றுக்கெல்லாம் மேலாகப் பரம்பொருளின் தெளிவான கிரியா (செயல்) சக்தியாக அவர் விளங்கியதுதான். இலக்கியகர்த்தர், தீர்க்கதரிசி, அறிவாளி, இவை அனைத்தையும் தாம் யோகி என்பதால் மிஞ்சி விட்டார் அரவிந்தர். அரவிந்தரது யோகத்தின் கிரியா விசேஷம் இன்னமும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மானிட வர்க்கத்தின் யாத்திரையில் இந்திய மக்களின் ஒற்றுமைக்கும் உலக மக்களின் ஒற்றுமைக்கும் சாதகமான சூழ்நிலையை உண்டாக்கிக் கொண்டே இந்த யோக சக்தி இயங்கிக் கொண்டிருக்கிறது.'' — இது அன்னையின் வாக்கு.

தமிழாக்கம்: எம். எஸ். செல்வஸாமி


உறுதிக்கும்,
நீடித்த
உழைப்பிற்கும்
உத்திரவாதமானது
செட்டிநாடு
சிமெண்ட்
விரைவில் படிந்து, நன்றாக இறுகி கட்டுமானங்கள் உறுதியாக அமைய உதவுவதால், குறைந்த அளவு செட்டிநாடு சிமெண்டே உபயோகத்திற்கு போதுமானதாக இருக்கிறது.
வீடுகள், சாலைகள், பாலங்கள், அணைகள் கட்ட ஏற்றது-செட்டிநாடு சிமெண்ட். செட்டிநாடு சிமெண்டால் கட்டப்படும் கட்டுமானங்கள் நீண்ட நெடுங்காலம் நீடித்து நிற்கின்றன.
செட்டிநாடு சிமெண்ட்
கார்ப்பொரேஷன் லிமிடெட்,
6, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1.
போன்: 25356. தந்தி: "BESTCEMENT"
போன்: 144 தந்தி: "CEMENT"
போன்: 71715
CHETTINAD
BRAND
EP.CC.17.

உங்கள் பணத்தை சுலபமாகப் பெருக்க கார்பொரேஷன் பாங்கின் சீரிய திட்டங்கள்!

எங்களது மாதவருவாய்த் திட்டங்களில் சேர்ந்திருக்கிறீர்களா!

நிரந்தர டெபாசிட்டுகள், தொடர் டெபாசிட்டுகள் மற்றும் ஜனதா டெபாசிட்டுகளுக்கும் கார்பொரேஷன் பாங்க் கூடுதலாகவே வட்டி கொடுக்கிறது. குறிப்பிட்ட காலத்திற்குப் பின் உங்களை மகிழ்ச்சியிலாழ்த்தும் வகையில் பணம் சேர்ந்திருக்கும். இன்றே உங்கள் அருகாமையிலுள்ள கார்பொரேஷன் பாங்க் அதிகாரிகளை அணுகுங்கள்.

சில சமயம் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே உங்களுக்குப் பணம் தேவைப்பட்டால் இந்த டெபாசிட்டுகளிலிருந்து வட்டியுடன் பணத்தைப் பெற யாதொரு தடையும் இருக்காது. ஆனால் பணமுடையிருக்கும் காலங்களிலும் கூட எடுக்காமல் பேணி காத்து வந்தால் குறிப்பிட்ட காலத்தில் முழுமையான பலனை அடைவீர்கள்.

—சினேக மனப்பான்மையுடன் விளங்கும் வங்கி


கார்பொரேஷன் பாங்க் லிமிடெட்

(கனரா பாங்கிங் கார்பொரேஷன் லிமிடெட் என்று முன்னாளில் அழைக்கப்பட்டது)

ESTD. 1906

பதிவு அலுவலகம் : உடுப்பி நிர்வாக அலுவலகம் : மங்களூர்

maa/CBL/246 Tam





சைக்கோ ஸாரநாதன்



கி.ராஜேந்திரன்

௨௯. செண்பகனூர்

"இரண்டாவது தடவையாகச் சந்திராவை அழைச்சுக்கிட்டு வந்ததும் அவனுக்கு வெலவெலத்துப் போயிடுச்சு. உண்மையைக் கக்கிட்டா'' என்றார் நடராஜன்.

''நேரமாகிவிட்டது. என்.வி.வி. காம்ப்புக்குத் திரும்பணும்னு போனவள் புருச்சைக் காணோம் என்று உணர்ந்ததும் அதைத் தேடிண்டு மறுபடியும் ஏரிக்கரை பக்கம் வந்திருக்கிறாள் இல்லையா?'' என்று அம்புஜம் கேட்டாள். ''இருட்டிக்கொண்டு வரும் நேரமானாலும் ஒரு தடவை தேடிப் பார்த்துடலாம்னு தோணறது இயற்கைதானே! பத்தா பதினைஞ்சா, இரண்டாயிரம் ரூபாய் ஆச்சே!''

''நிசம்தான். படகிலிருந்து கரைக்குப் பாய்ந்தபோது கீழே விழுந்திருக்கலாம்னு அனுமானிச்சு வந்தாளாம். அதற்குள் குருசாமி பரமசிவத்திடம் விடைபெற்றுக்கிட்டுப் போயிட்டான். பெரியவர் மட்டும் தனியே இருந்திருக்கார். 'என்ன தாத்தா! லாட்ஜுக்குத் திரும்பலையா?' என்று கேட்ட சந்திராவிடம், 'இந்தத் தொப்பியைத் தேடித்தானே வந்தே'ன்னு பதில் கேள்வி போட்டாராம். படகில் தாம் கண்டெடுத்த அவள் தொப்பியைக் கொடுக்கப் போனாராம். அதைத் தேடிக்கிட்டு அவள் வருவாள் என்று எதிர்பார்த்தே அவர் குருசாமியை அனுப்பி விட்டுக் காத்திருந்திருக்கலாம்.

'''ஓகோ! அவசரத்தில் இதையும் மறந்து விட்டுட்டுப் போயிருக்கேன்'னு கூறி இவள் தொப்பியைத் திரும்பப் பெறக் கையை நீட்டினாளாம்.....''

'' அப்புறம்?''

''அப்புறம் நடந்ததை மீனு எதிரே விவரிக்க எனக்குக் கஷ்டமாயிருக்குது'' என்றார் நடராஜன். ''அனுவுடைய கவனமும் நான் சொல்கிற கதையில்தான் இருக்குது. அதனாலே அந்த வேலையை நான் எழுத்தாளர் ஸாரிடம் விட்டுடறேன். அவர் நாளுக்காகக் கூறுவார். இங்கு பஸ்ஸில்

வரும்போதே அவர்கிட்டே சகலத்தையும் தெரியப்படுத்திட்டேன் நான்.'' அச்சம்பவத்தைத் தமது மக்களுக்கு எடுத்துரைக்கும் பொறுப்பை அந்தக் குடும்பத்தின் தலைவர் மீதே சுமத்திவிட்டுக் கண்யமாக ஒதுங்கிக் கொண்டார் நடராஜன்.

பத்மநாபன் தொண்டையைக் கனைத்துக் கொண்டார், முக்கியத்துவம் பெற்றவராக.

'' 'தாங்க்யூ பட்டி (buddy) என்று அவருக்குச் சொல்லிவிட்டு ரன்னிங் காமெண்டரியை நீங்க தொடரலாம்'' என்றாள் மீனு.

'' வாய்விட்டுச் சொல்லும்படியான விஷயம் இல்லைங்கறதால்தானே தயங்கறார் நடராஜன். நீ ரன்னிங் காமெண்டரி கேட்கிறே, போக்கிரி!'' என்றார் பத்மநாபன். எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.

பத்மநாபன் சிறிது யோசித்துவிட்டுச் சுருக்கமாகக் கூறினார்: ''பரமசிவத்துக்கு ரொம்ப அல்ட்ரா மாடர்ன் பெண்களைக் கண்டால் வெறுப்பாம். இதைக் குருசாமி பிற்பாடு சொல்லியிருக்கிறான், இவரிடம்....'' பத்மநாபன் நடராஜனைச் சுட்டிக்காட்டிவிட்டுத் தொடர்ந்தார்: ''நமது பண்பாட்டைக் குலைக்க வந்தவர்கள் என்று நவநாகரிகமாகச் சிங்காரித்துக் கொள்கிறவர்களைப் பற்றிப் பரமசிவம் நினைத்து நினைத்து, அந்த வெறுப்பிலேயே உழன்று, சதா அவர்களைப் பற்றியே சிந்தித்து மனத்தையே விகாரப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். அதனால் ரொம்ப ஸோஷியலாகத் தொட்டுப் பேசிப் பழகிய சந்திராவிடம் தமது கோபத்தை, யாரும் எதிர்பார்க்க முடியாத நூதனமான விதத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார். அதாவது பண்பாட்டிலிருந்து அவள் ஒரு சாண் சறுக்கினால் தாம் ஒரு முழம் சறுக்கிக் காட்ட வேண்டும்; அப்போதுதான் அவளும் அவளைப் போன்றவர்களும் படிப்பினை பெறுவார்கள் என்று நினைத்துச் செயல்பட்டிருக்கிறார். மனித மனம் எவ்வளவு விசித்திரமானது பாருங்கள்! ரொம்பக் கண்ணியமானவர் என்று பெயரெடுத்த பரமசிவம் சந்திராவிடம் கேவலமாக நடந்துகொண்டதற்கு இதுதான் காரணமாக இருக்க வேண்டும் என்று நடராஜன் ஊகிக்கிறார். அதில் தவறு இருப்பதாகவும் எனக்குத் தோன்றவில்லை. தனிமையும் இருளும் சேரவே அவருக்குத் தைரியம் அதிகரித்து அல்ட்ரா மாடர்ன் அழகிகள் சமூகத்தைப் பழிவாங்கும் படலத்தைத் தொடங்கியிருக்கிறார். புல் தரையில் தள்ளப்பட்டு மல்லாந்து கிடக்கையில் சந்திரா தன் கற்பைக் காத்துக் கொள்வது எப்படி என்று புரியாமல் தவித்தபோது நீண்ட அவள் கரத்தில் ஏதோ ஒரு கழி தட்டுப்பட்டிருக்கிறது. படகைக் கொக்கி போட்டாற்போல் கரைக்கு இழுக்க உதவும் ஆயுதம் அது. அதைப் பயன்படுத்திப் பெரும் பாரமாகத் தன் மீதிருந்த பரமசிவத்தைத் தலையில் தாக்கியிருக்கிறாள். அவர் இறந்துவிட்டார். சந்திரா அவரைப் புரட்டிக் கரையோரமாக நீரில் தள்ளிவிட்டு எழுந்து தன்னைச் சுதாரித்துக் கொண்டு



என். ஸி. ஸி. காம்ப்புக்குத் திரும்பிச் சென்று விட்டாள்.

''போலீஸார் கூப்பிட்டு விசாரித்த போது தான் இரண்டாவது தடவை யாக ஏரிக் கரைப் பக்கம் வந்ததை அவள் கூறவேயில்லே. புருச் காணமல் போனதையும் வெளியிடவில்லை.''

'' பாவம், அந்தப் பெண்ணுக்கு என்ன தண்டனை கொடுக்கப்போறேன்?'' என்று கேட்டாள் அம்புஜம்.


''அதைத் தீர்மானிக்க வேண்டியது நீதிபதிதான். நான் என்ன சொல்ல? ஆனால் அவள் தன் மானத்தைக் காத்துக் கொள்ளத்தான் இப்படிச் செய்தாள் என்பதால் தண்டனை இலேசான தாகத்தான் இருக்கும்.''

''குருசாமி? அவருக்கு ஒன்றும் தண்டனை கிடையாதா?'' என்று வினவினுள் மீனு. ''அத்தனை தகிடுதத்தம் பண்ணியிருக்காரே !''

''கிடைக்கும். தங்கள் தகப்பனரை ஏமாற்றி மோசடி செய்ததாகப் பரமசிவத்தின் வாரிசுகள் வழக்குத் தொடுப்பாங்க. கம்பெனி லா சட்டப்படி அரசாங்கமே நடவடிக்கை எடுக்கலாம்.''

'' ஆனாலும் ரொம்ப அழுத்தம் ஸார் நீங்க! கேஸைக் கச்சிதமா முடிச்சுட்டு அடக்கமா உட்கார்ந்திருக்கேள், பால் பொங்கினதும் பாத்திரத்தை இறக்கி வைச்சுட்ட மாதிரி.''

''ஆடம்பரமா நெஞ்சை நிமிர்த்திக் கிட்டுப் போக ராஷ்டிரபதி தங்கப் பதக்கத்தையா வைச்சுக்கிட்டுக் காத்திருக்கார் எனக்காக? ஏதோ நம்ம கடமை



யைச் செய்யறேம். சில சமயம் சுலபமா முடியுது. சில சமயம் இழுக்கடிக்குது.''

''உங்களை நீங்களே ஏன் குறைச்சுப் பேசிக்கறேள்? சாமர்த்தியமாகத்தானே விடுவிச்சிருக்கேள் இந்தப் புதிரை?''

''நியாயமான பெருமையை ஏற்றுக்கிட நான் தயங்கலே, அம்மா! அந்தப் புருச்சுக்கும், இந்தக் கொலைகேஸுக்கும் சம்பந்தம் இருக்கலாம்னு ஊகிச்சேன் பாருங்க. அப்படி இணைச்சுப் பார்த்ததுதான் என் கெட்டிக்காரத்தனம். அந்த அளவுக்குச் சக்தி இருக்கிறதாலேதான் நான் டி. ஐ. ஜி.யாகப் பதவி உயர்வும் படிப்படியாகப் பெற்றிருக்கேன். ஆனால் அம்பலவாணன் செட்டியார் பணத்தாசைக்கு அடிமையாகி நகையைப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு வராமலே இருந்திருந்தால் நான் என்னத்தைச் சாதித்திருக்க முடியும்? நம் திறமையோடே கடவுள் அருளும் வேண்டும். அது அம்பலவாணன் மூலம் செயல்பட்டது.''

'' இதே மாதிரி மற்ற ரெண்டு கொலைகளுக்கும் மர்ம முடிச்சுக்களைப் பாந்தமா அவிழ்த்துடுங்கோ.''

''அவிழ்க்க முடியலேன்னா கத்திரிச்சுப் புடுவோம்!'' என்று கூறியபடியே நடராஜன் எழுந்தார். ''எங்கே நம்ம நண்பர் அமிர்தலிங்கத்தைக் காணோம்?'' என்று கேட்டபடியே சுற்றுமுற்றும் பார்த்தார். எங்குமே அவன் தென்படவில்லை. நடராஜன் சிரித்தார். ''பார்த்தீங்களா, பத்மநாபன்! ஃபேரிஃபால்ஸிலும் பேரிஜம்மிலும் புதிர்களை விடுவிக்க முடியவில்லை என்று நான் சொல்லிக்கிட்டிருந்த போது எத்தனை ஆர்வமாகக் கேட்டான்? என் தோல்விகளை அறிந்து ரசித்தவனுக்கு என் வெற்றிகளை ஏற்றுக்கிட முடியவில்லை. தன் பாட்டுக்குக் கிளம்பிச் சென்றுவிட்டான்'' என்றார்.

எல்லாரும் பஸ்ஸில் ஏறிக் கொண்டார்கள். அமிர்தலிங்கத்துக்காகக் காத்திருக்க வேண்டாம் என்று பிரயாணிகள் எல்லாருமே ஏகமனதாகத் தீர்மானித்தார்கள். டிரைவர் மட்டும் ஐந்து நிமிஷங்கள் தாமதித்து, ''பாம், பம்பாம்'' என்று பல்ப் ஹாரனை நிமிஷத்துக்கு ஒரு தடவை வீதம் அழுத்தி எச்சரித்த பிறகுதான் புறப்பட்டார். ''அப்புறம் என் மேலே தப்பு சொல்லப்படாது பாருங்க'' என்று விளக்கமும் கொடுத்தார்.

செண்பகனூர் தபால் நிலையத்தினருகே பஸ் நின்றது. இந்தியாவிலேயே மிகச் சுத்தமான தபால் நிலையம் என்று பெயர் பெற்றிருக்கிறது இது. பக்கத்திலிருந்த ஸேக்ரட் ஹார்ட் காலேஜைச் சேர்ந்த ஒரு பாதிரி இதனை நிர்வகித்து வந்தார். சிறிய தபால் நிலையம்தான். ஆனால் அந்த இலாகாவுக்கே பெருமை தரக்கூடிய வகையில் திறம்பட நடத்தியதுடன் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருந்தார்.

கல்லூரி, கிறிஸ்துவப் பாதிரிமார்களாக விளங்கப் பயிற்சி அளிப்பதாகும். பி. ஏ. பட்டத்துக்கு இணையான எஸ். ஜே. (ஸொஸைட்டி ஆஃப் ஜீஸஸ்) என்ற பட்டத்தைப் பெறுகிறார்கள் இதில் தங்கிப் படிப்பவர்கள்.

'' இந்தக் கல்லூரிக்குள் பெண்கள் நுழைய அனுமதி கிடையாது'' என்றார் நடராஜன். ''உள்ளே பழங்காலத்திய அபூர்வமான நூல்கள் பல இருக்கின்றன. பத்திரிகையாளர் பத்மநாபன் அவற்றைப் பார்க்க விரும்பலாம். போய் வரட்டும். நாம் தோட்டத்தில் உலாத்திக்கிட்டு இருப்போம்'' என்றார்.

'' ஐயோ! பழங்காலப் புத்தகங்கள் என்றாலே எனக்கு அலர்ஜி'' என்றார் பத்மநாபன். '' பக்கங்கள் தொட்டால் பொடியாகிப் பொலபொலவென்று உதிரும். தூசி நெடி மூக்கில் ஏறித் தும்மல் வரவழைக்கும். அப்புறம் ஜலதோஷம், தலைவலி என்று ஒரு வாரம் அவஸ்தைதான்!''


'' அன்னம் பத்திரிகை துணை ஆசிரியர், இப்படிச் சொன்னீங்கன்னு தெரிஞ்சாலே பாதிரிமார்கள் வருத்தப்படுவாங்க. பார்த்துவிட்டு வந்து அருமையான கட்டுரை எழுத வேண்டாமா?''

''நான் லீவிலே வந்திருக்கேன், சுவாமி! ஆளை விடுங்க.''

''நான்கூட லீவிலேதான் வந்தேன்'' என்று தமக்குத் தாமே பரிதாபப்பட்டுக் கொண்டு பெருமூச்செறிந்தார் நடராஜன். பின்னர் மீனாவிடம் சொன்னார்: ''இந்தத் தோட்டத்திலே இரண்டு விசேஷம். சிலர் பல தேசத்து ஸ்டாம்புகளைச் சேகரிப்பாங்க, வேறு சில பேர் பல நாட்டு நாணயங்களைச் சேகரிப்பாங்க. அது மாதிரி இங்கே விதம் விதமான ஃபர்ன் செடிகளையும் தினுசு தினுசான ஆர்கிட் செடிகளையும் வரவழைத்து வளர்க்கிறாங்க.''

தபால் நிலையத்துக்குப் பக்கத்தில் ஒரு சிறு மியூஸியமும் உருவாக்கியிருந்தார்கள் பாதிரிமார்கள். அங்கு, சுற்றுவட்டாரத்தில் அந்த மலைப் பிராந்தியங்களில் கிடைக்கும் மிருகங்கள் உயிருள்ளன போலவே தத்ரூபமாய்க் காட்சியளித்தன. ஒவ்வொன்றுக்கும் ஏற்ற சூழ்நிலையையும் அழகாகச் செயற்கை முறையில் சிருஷ்டித்திருந்தார்கள்.

மீனாவும் அனசூயாவும் மியூஸியத்தை விட்டு வரமாட்டேனென்றார்கள். அவர்



CriterionCO 2757 TMB



களைப் பத்மநாபன் பொறுப்பில் விட்டு விட்டு நடராஜன், மீனுவையும், ரங்களையும் அழைத்துக் கொண்டு ஸேக்ரட் ஹார்ட் கல்லூரி தோட்டத்தைப் பார்த்து வரப் புறப்பட்டார்.

''நானும் மீனுவோடே போயிட்டு வரேன்'' என்று கணவரிடம் சொல்லிக் கொண்டு அம்புஜமும் கிளம்பினாள். மீனுவைத் தனியே அவர்களுடன் அனுப்ப அவள் தயங்குவதைப் பத்மநாபன் புரிந்துகொண்டு தலையாட்டினார்.

ஃபர்ன், ஆர்க்கிட்ஸ் ஆகிய செடிகள் இருந்த இடத்துக்கு நிழல் தரும் மரங்கள் கூரை விரித்திருந்தன. தண்ணென்றிருந்தது சூழல். கீழே எல்லாம் காய்ந்த இலைச் சருகுகள். சரசர என்று ஒலி எழுப்பியபடி அவற்றின்மீது நடப்பதே ஒரு சுகானுபவமாக இருந்தது. ''ஆர்கிட் மலர்களுக்கு இப்போது ஸீஸன் இல்லை போலிருக்கிறது. ஒன்றிரண்டு புஷ்பங்கள்தான் இருக்கின்றன'' என்று சுட்டிக்காட்டினார் நடராஜன்.

''போதும்! போதும்! இதற்கு மேல் இருந்தால் தாங்க முடியாது. இந்த ஒன்றிரண்டு பூக்களே இத்தனை அழகாக இருக்கே!''. என்றாள் மீனு.

தொட்டிகளில் விதம் விதமான ஃபர்ன் செடிகளைச் சேகரித்து வைத்திருந்த இடத்துக்கு வந்தார்கள். ''இந்தச் செடிகளைப் பற்றி நீ படித்திருப்பாயே மீனு!'' என்று ஆரம்பித்தார் நடராஜன். ''பாசி வகைகளுக்கும் விதையோடுகூடிய மரம் செடி கொடிகளுக்கும் இடைப்பட்ட ஒரு நிலை இந்த ஃபர்ன் — நீர் வாழ்வனவற்றுக்கும், நிலத்தில் வாழ்வனவற்றுக்கும் இடைப்பட்ட நிலையில் தவளை இருப்பதாகச் சொல்கிறோமே, அந்த மாதிரி!''

''இதைவிட ஒரு நல்ல உதாரணம் வேணும்னு நான் சொல்றேன் மீனு!'' என்றான் ரங்கன். ''கட்டைப் பிரம்மச்சாரிகளுக்கும் கல்யாணமான கிருகஸ்தர்களுக்கும் இடையில் காதலித்துக் கஷ்டப்படுகிற இனம்னு ஒண்ணு இருப்பதில்லையா? அப்படி ஓர் இரண்டுங்கெட்டான் நிலையில் உள்ளவை இந்த ஃபர்ன் செடிகள்!''

மீனு தலை குனிந்து கொண்டாள். நடராஜன் திடுக்கிட்டவராகச் சரேலென்று அம்புஜத்தை நோக்கினார், 'உங்களுக்கு ஏதாவது புரிகிறதா?' என்று வினவும் தோரணையில்.

அம்புஜம் கலவரத்துடன் அவரைப் பார்த்து இலேசாகத் தலையசைத்தாள். 'இது கூடாது. முடியாது' என்று உணர்த்துகிற பாவம் அவள் முகத்தில் தெரிந்தது. ஆனால் அதே சமயம் அவள் கண்கள் இலேசாகக் கலங்குவதையும் கவனித்துவிட்டான் ரங்கன்.

'மாமி கொஞ்சம் கொஞ்சமாக வழிக்கு வருகிறாள்' என்று எண்ணிக் கொண்டான் அவன்.



30. அடிபட்ட புலி

அன்றிரவு டி. ஐ. ஜி. நடராஜனும் அவர் மகனும் ரொம்ப முக்கியமான ஒரு காரியத்தில் ஈடுபட்டிருந்தார்கள். ''அப்பா எனக்கு ஏதோ வேலை வைச்சிருக்காராம், நான் செஸ் ஆட உங்கள் அறைக்கு இப்போ வர்றதுக்கில்லை'' என்று சாப்பாட்டின்போது ரங்கன் மீனுவிடம் சொல்லிவிட்டு வந்திருந்தான். மாலையில் ஸ்டுடியோவிலிருந்து என்லார்ஜ்மெண்டுக்குக் கொடுத்திருந்த நெகடிவ்களையும் புகைப்படங்களையும் பெற்று வந்திருந்தான் அவன். அவற்றைத் தகப்பனும் பிள்ளையும் இப்போது ஆராய்ந்தார்கள். எல்லாமே ஹிப்பி அமிர்தலிங்கத்தின் படங்கள். பல கோணங்களில் எடுக்கப்பட்டவை. ''ப்ரையண்ட் பார்க்கில் நீ இவற்றை எடுத்தது அவனுக்கு நிச்சயமாகத் தெரியாதில்லையா?'' என்று கேட்டார் நடராஜன். ''அம்புஜமோ மீனுவோ சொல்லியிருக்க மாட்டாங்களே?''

''நிச்சயமா சொல்லி யிருக்க மாட்டாங்க. திடீரென்று இந்தப் படங்களை அவனிடம் காட்டி அவனை ஆச்சரியத்தில் ஆழ்த்தப் போவதாய் அவங்களை நம்ப வைச்சிருக்கேன். அனுவுடைய காமிராவை அவன் உடைத்ததால் அவங்களுக்கும் தாபம்தான். ஆகவே, என் பேச்சைத் தட்ட மாட்டாங்க.''

''சரி, இந்த இரண்டு படங்களையும் செலக்ட் பண்ணியிருக்கேன். ஒன்னை நீ டச் — அப் பண்ணு. இன்னொன்றை நான் கவனிச்சுக்கறேன்.''

ஓவியர்களுக்குத் தேவையான பிரஷ், வர்ணங்கள் முதலானவற்றை எடுத்து மேஜையின் மேல் பரப்பினான் ரங்கன். ஸ்டுடியோவில் என்லார்ஜ்மெண்ட்களைப் பெற்ற பிறகு, ஸி. எல். எஸ். புக் ஷாப்புக்குள் நுழைந்து ஓவியர்களுக்கான சில உபகரணங்களையும் பெற்று வந்திருந்தான். கறுப்பு நிறத்தில் வெள்ளை கலந்து சாம்பல் நிறமாக்கிப் பிரஷ்களை அதில் தோய்த்தெடுத்துப் புகைப்படங்களில் தங்கள் திறமைகளைக் காட்டத் தொடங்கினர் இருவரும். அவர்கள் எதிரே ஸைக்கோ ஸாரநாதவின் புகைப்படம் அச்சான பழைய தினசரி ஒன்று இருந்தது.

காரியத்தில் கருத்தாக இருந்து கொண்டே கேட்டான் மகன்: ''இவன் ஸைக்கோ ஸாரநாதனை இருக்கலாம் என்று எதனால் தீர்மானிச்சீங்க அப்பா?''

''நான் ஒரு முடிவுக்கும் வரவில்லை. ஊகம்தான். போலிகளைப் பார்த்துப் பார்த்துப் பழகிய என் கண்களுக்கு இவன் தோற்றமே நிம்மதி அளிப்பதாய் இல்லை.''

''தாடியைப் பிடிச்சு ஓர் இழுப்பு இழுத்தால் புரிஞ்சு போகுது.''

''அதாவது சினிமாவிலும் நாடகத்திலும் போலீஸ் அதிகாரிகளா நடிக்கிறாங்களே அந்த மாதிரி என்னையும் நடந்துக்கச் சொல்றே இல்லையா?'' என்று கேட்டு நடராஜன் சிரித்தார். ''அது நிஜத் தாடியாக இருந்து தொலைத்து, இவன் என் மேலே மான நஷ்ட வழக்குத் தொடுத்தால் என் கதி என்ன? பணக்கார வீட்டுப் பிள்ளை மாதிரி பணம் அவன் கையில் புரளுது. பத்மநாபனுக்குக்கூட அவனிடம் அதனால்தான் மதிப்பு.''

''வழக்குத் தொடுத்தானானால் பதவி பறி போயிடுமா?''

''அதோடு அவமானம் வேறே சூழும். அதனால்தான் இந்தக் காரியத்தில் இறங்கியிருக்கேன்.''

''அவன் தோற்றம் மட்டும்தான் உங்கள் சந்தேகத்துக்குக் காரணமா அப்பா? அனுயாவின் காமிராவை அவன் உடைத்தது....?''

''அதுவும் விநோதமாத்தான் இருந்துச்சு. சாதாரணமா புகைப்படம் என்றதும் புன்னகையுடன் போஸ் கொடுக்கிறவங்களைத்தான் நாம் கண்டிருக்கிறோம். இவன் ஏன் தன்னை யாரும் படமெடுப்பதை விரும்பலே? அத்தனை தூரம் ஆத்திரம் அடைவானேன்?''

''சிறையிலே அடைச்சப்போ படமெடுத்தாங்களே அந்த நினைவு வந்துடுச்சோ என்னமோ?'' என்று ரங்கன் கூறினான், தினசரியில் அச்சாயிருந்த புகைப்படத்தை பிரஷ்ஷின் அடிவாரத்தால் தட்டிக் காட்டி.

''மூன்றாவதாக ஒரு காரணமும் இருக்கிறது, ரங்கா! கொலை செய்தவர்கள் யார் என்று என்னால் கண்டு பிடிக்க முடியாத போது அவன் என் கையாலாகாத்தனத்தைப் பார்த்து ரசித்துச் சிரித்தான். ஆனால் இன்றைக்குப் பரமசிவம் கொலை வழக்கை நான் 'ஸால்வ்' பண்ணிட்டேன் என்றதும் அந்த விவரத்தைத் தெரிந்து கொள்ள இஷ்டமில்லாமல் போய்விட்டான்.''

''அதாவது.....?''

'' 'ஸைக்கோவின் காரியம் இந்தக் கொலைகள்' என்று மக்கள் எண்ணுவதை இவன் விரும்பி வரவேற்கிறான். ஸைக்கோ செய்த கொலைகள் அல்ல என்ற உண்மை பரவுவதை வெறுக்கிறான்.''

''அதனால்.....?''

''நான் ஸைக்கோவாக இருந்தால் என் மனம் என்ன எண்ணும் என்று நினைப்பது அசட்டுத்தனம். ஆனாலும் சில சமயங்களில் அசட்டுத்தனமான யோசனைகள் மாபெரும் சாதனைகளுக்கு வழிவகுத்திருப்பதைச் சரித்திரமும் விஞ்ஞானமும் நமக்கு எடுத்துச் சொல்கின்றன.......''

''சுற்றி வளைக்காதீங்க அப்பா. 'தி ஆர்ட் ஆஃப் டிடக்ஷன்' என்பது பற்றிச் சொற்பொழிவா நிகழ்த்தறீங்க? யூ ஆர் டாக்கிங் டு யுவர் ஸன்!''

இலேசாகச் சிரித்து ஒதுக்கிவிட்டுத் தொடர்ந்தார் நடராஜன்: ''ஊரிலே எல்லாரும் இவை ஸைக்கோ செய்த கொலைகள் என்ற நினைப்பில் நடுங்கிக் கொண்டிருந்தால் அதிலே இவனுக்கு ஒரு மன நிம்மதி, திருப்தி நிலவலாம். அந்தத் திருப்தி நீடிக்கும் வரையில் இவனுக்குத் தானே கொலைகள் செய்ய வேண்டும் என்ற பரபரப்பு ஏற்படாதிருக்கலாம்.''

''உங்க ரீஸனிங் கரெக்ட் அப்பா. ஆனால் இப்போ நீங்க ஒரு சிக்கலை நீக்கிட்டீங்க. பாக்கி இரண்டு முடிச்சுக்களையும் அவிழ்த்துக் கொலை செய்தவங்களை உள்ளே தள்ளிடறீங்கன்னு வைச்சுப்போம். அப்போ இந்த ஸைக்கோ மீண்டும் கொலை செய்யணும் என்கிற மன உளைச்சலுக்கு உள்ளாவானே!''

''அது மட்டுமில்லே, ரங்கா. முன்னை விட உக்கிரமாகச் செயல்படுவான்! அடிபட்ட புலியா மாறிடுவான்! இது வரை அடங்கிக் கிடந்த கொலை வெறி சீறிப் பாயும்! ஆனால் ஒன்று.... இவன்

ஸைக்கோவாக இருந்தால்தானே அப்படி நடந்து கொள்ளப் போகிறான்...?''

''இனி அந்தச் சந்தேகத்துக்கே இடமில்லை அப்பா! இதோ பாருங்க!'' என்று ரங்கன் அதுவரையில் தான் சாம்பல் நிற வர்ணத்தைக் குழைத்துப் பிரஷ்ஷினால் டச் — அப் செய்து கொண்டிருந்த புகைப்படத்தை அவர் எதிரே மேஜையின் மேல் போட்டான்.

தாம் செய்திருந்த வேலையையும் அவனுடைய காரியத்தையும் ஒப்பிட்டு நோக்கிய நடராஜன் சொன்னார்: ''என்னைவிட நீ சிறந்த ஆர்டிஸ்ட் தான்!''

பத்திரிகையிலிருந்த ஸைக்கோ ஸாரநாதனின் உருவத்துக்கும் புகைப்படத்தில் இருந்த அமிர்தலிங்கத்தின் உருவத்துக்கும் இடையில் இப்போது அதிக வித்தியாசம் இல்லை. ஏறத்தாழ ஒரே மாதிரிதான் இருந்தன. அமிர்தலிங்கத்தின் தாடி மீசை, அடர்ந்த தலைமயிர், மூக்குக் கண்ணாடி, மணிமாலை எல்லாம் மறைந்துவிட அவன் இப்போது சிறைச் சாலை உடை தரித்து, கிட்டத்தட்ட ஸைக்கோ ஸாரநாதன் மாதிரியே வழுக்கைத் தலையுடன் காட்சி தந்தான்.

அதைப் பார்த்தபடியே, ''உம்.... உம்.....'' என்று மூகவாயைத் தடவியபடி அமர்ந்திருந்தார் நடராஜன்.

''இன்னும் என்ன யோசனை அப்பா? பிடித்துத் தள்ளுங்க உள்ளே!'' என்றான் ரங்கன்.


''உணர்ச்சிகள், ஊகங்கள் இவற்றின் அடிப்படையில் போலீஸ் இலாக்கா செயல்படக் கூடுமானால் எங்கள் வேலை எவ்வளவோ எளிதாகிவிடும், ரங்கா! ஆனால் சட்டம் உணர்ச்சிகளைக் கவனி, ஊகங்களைச் சோதித்துப் பார் என்றுதான் சொல்கிறது. சாட்சியங்களின் அடிப்படையில்தான் நடவடிக்கை எடுக்க அனுமதிக்கிறது. இதனால் குற்றவாளிகள் சிறிது காலம் கும்மாளி போடலாம். ஆனால் போலீசுக்கு இந்தக் கட்டுப்பாடு இல்லாது போனால் அராஜகத்துக்கு இடமளித்ததாகிவிடும். மக்கள் போலீஸாரிடமிருந்து பாதுகாப்பு பெறுவதற்குப் பதில் பயப்படும்படியான நிலை உருவாகிவிடும்.

''சரி, இப்போ என்ன செய்யப் போறீங்க?''

''அடிபட்ட புலின்னு சொன்னேன் இல்லையா? அதைச் சீண்டிவிட்டுத்தான் வேடிக்கை பார்க்கணும்!''

''வேடிக்கையா இது? வினை!''

''இங்கே வலையும் விரித்திருப்போம் ரங்கா!'' என்றார் டி.ஐ.ஜி., ஸி.ஐ.டி. நடராஜன். (தொடரும்)



வீசினார் அண்டர்வுட், அடித்தார் இன்வரேரிடி, பிடித்தார் இல்லிங்வொர்த்!

அடேயப்பா! இத்தனை பேரும் கைதூக்கினால் சந்தேகமில்லாமல் அவுட்டாகத்தான் இருக்க வேண்டும். அம்பயர் மட்டும் இன்னும் யோசிப்பானேன்!

அண்மையில் இங்கிலாந்து ஆஸ்திரேலியாவை வென்று 'ஆஷஸ்'ஸைத் தன்னிடமே இருத்திக் கொண்டது.

நான்காவது டெஸ்ட்டில் அண்டர்வுட் சுழற்பந்து வீச்சில் ஆஸ்திரேலிய விக்கெட்டுக்களைச் சுருட்டிக் கொண்டு போனார். (82 ரன்களுக்கு 10 விக்கெட்டுகள்) காப்டன் இல்லிங்வொர்த் அண்டர்வுட்டுக்குப் பக்க பலமாக நின்று அபாரமாகப் பந்து வீசினார்.

இதுவும் ஒரு போராட்டம்தான்!

தராஜா



3–7–72

மதிப்புக்குரிய அப்பா அவர்களுக்கு,

பொருள்: பாக்கெட் மணி

நீங்கள் இப்போது மாதந்தோறும் எனக்கு ஐம்பது ரூபாய் பாக்கெட் மணி கொடுத்து வருவது தெரிந்ததே. அடுத்த மாதத்திலிருந்து என் பாக்கெட் மணி தொகையை நூறு ரூபாயாக உயர்த்தி உதவ வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

— ராஜாராமன்

★

10–7–72

அன்புள்ள ராஜாராமனுக்கு,

பாக்கெட் மணி

உன்னுடைய மூன்றாம் தேதி கடிதத்தை – இடையில் பல்வேறு அலுவல்கள் குறுக்கிட்டு விட்டதனால் – இன்று தான் பார்க்க முடிந்தது.

உனக்குத் தற்சமயம் கொடுத்து வரும் பாக்கெட் மணியை அதிகரிப்பதற்கில்லை என்பதை இதன் மூலம் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

— அப்பா.

★

13–7–72

மதிப்புக்குரிய அப்பாவுக்கு,

அதிர்ச்சி தரும் தங்களது கடிதம் கண்டேன். அளவிலாத ஏமாற்றம் கொண்டேன்.

தாங்கள் கொடுத்து வரும் பாக்கெட் மணி போதாமல் நான் திண்டாட நேர்ந்திருப்பதால்தான் உயர்வு கோரிக் கடிதம் எழுதினேன். நாளுக்கு நாள் பெருகி வரும் நண்பர்களின் எண்ணிக்கை, அதிகரித்து வரும் செலவினங்கள், 'ரிலீஸ்' ஆகும் திரைப்படங்களின் எண்ணிக்கை – இவற்றை அடிப்படையாக வைத்தே, பாக்கெட் மணியை அதிகரிக்க வேண்டுமெனக் கேட்டேன்.

தாங்கள் மறுமுறை எனது வேண்டுகோளைப் பரிசீலனை செய்து எனக்கு உடனடியாக உதவ முன்வருவீர்கள் என்று நம்புகிறேன். — ராஜாராமன்

★

20–7–72

அன்புள்ள ராஜாராமனுக்கு,

திரும்பவும் அதிக பாக்கெட் மணி கேட்டு நீ எழுதிய கடிதம் கிடைக்கப் பெற்றேன்.

நம்முடைய வட்டாரத்திலேயே நான்தான் அதிகமாகப் பாக்கெட் மணி கொடுத்து வருகிறேன் என்ற உண்மையை உனக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். உன்னைப் போலொத்த இளைஞர்கள் சிலருக்கு அவர்களது தந்தையரால் கொடுக்கப்படும் பாக்கெட் மணி எவ்வளவு என்பதைக் கீழே உள்ள அட்டவணை விளக்கும் :

பெயர் :	மாதாந்திரப் பாக்கெட் மணி
ரங்கநாதன்	30 ரூபாய்
சேகர்	25 ரூபாய்
சந்திரன்	15 ரூபாய்
வாசுதேவன்	40 ரூபாய்
பத்ரிநாத்	20 ரூபாய்

இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து நான் உன் விஷயத்தில் எவ்வளவு தாராள மனப்பான்மையுடன் நடந்து வருகிறேன் என்பது உனக்கு விளங்கும். எனவே, இனியும் நீ இந்தப் பாக்கெட் மணி பிரச்சினையை எழுப்ப மாட்டாய் என்று நம்புகிறேன். —அப்பா

★

22–7–72

அன்புள்ள அப்பாவுக்கு,

புள்ளி விவரத்துடன் கூடிய உங்கள் கடிதம் கண்டேன்.



நீங்கள் குறிப்பிட்டிருக்கும் அத்தனை பேர்களுக்கும் என் அளவு நண்பர்களும் கிடையாது: செலவினங்களும் கிடையாது. எனவே, அவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்படும் பாக்கெட் மணி குறித்து ஆட்சேபம் எதுவும் எழுப்பாமல் இருப்பதில் ஆச்சரியமில்லை.

ஆனால் என் விஷயமே வேறு. நீங்கள் எனக்கு உதவ முன்



வராவிட்டால் நான் கடனாளியாகி விடுவேன் என்பது நிச்சயம். இதனால் தங்களுக்குத் தானே அநாவசியமாகக் கெட்ட பெயர் ஏற்படும்?

நாம் இருவரும் நேரில் சந்தித்துப் பேசினோமானால் இந்தப் பிரச்னைக்கு ஒரு தீர்வு காண முடியும் என்று நம்புகிறேன். எப்போது சந்திக்கலாம் என்பது குறித்துத் தயவுசெய்து பதில் போடவும். — ராஜாராமன்

அவசரம்

29—7—72

அன்புள்ள அப்பா,

எனது 22ந் தேதி கடிதத்துக்கு இன்றுவரையில் பதில் வரவில்லை. தலைக்கு மேலே போய், என் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே வருகிறது. பெட்டிக்கடை அப்பு நாயருக்கே நான் நிறையப் பாக்கி வைத்திருக்கிறேன். அவன் எந்த நிமிடம் என் கழுத்தில் துண்டைப் போட்டு முறுக்குவானோ, தெரியாது. அப்படி ஏதாவது நேர்ந்தால் அவமானம் உங்களுக்குத்தானே ?

நாம் உடனடியாகச் சந்திக்க வேண்டியது அவசியம் மட்டுமல்ல, அவசரமுங்கூட.

எப்போது சந்திக்கலாம் என்று தெரியப்படுத்துங்கள். - ராஜாராமன்

★

மூன்று நாட்கள் கழித்து ராஜாராமனின் தாயார் தன் கணவரைக் கேட்டாள்:

"என்னங்க, பாக்கெட் மணி பற்றிப் பேசி ஒரு முடிவு எடுத்துட்டீங்களா ?"

"அதுக்குத்தான் நான் காத்துக்கிட்டிருக்கேன்..... ஆனால் அவன் பேச்சுவார்த்தைக்கு வரவே இல்லியே !"

"நீங்க எங்கே அவனைக் கூப்பிட்டீங்க ?"

"ஏன் கூப்பிடாமல் ?.... உன்கிட்டே நேத்து, முந்தா நாள், அதுக்கு முந்தின நாள் நான் சொல்லல்லியா, ராஜாராமனைப் பார்க்கணும்னு ?"

"அவன் வெளியிலே போயிருக்கிற சமயமாகப் பார்த்து 'அவனைக் கூப்பிடு'ன்னு எப்படிங்க?.... அவன் ராத்திரி திரும்பி வர்றப்ப நீங்க வீட்டிலே இருக்கிறதில்லே !"

"அதுக்கு நான் என்ன பண்றது?..... எனக்கு இது ஒண்ணுதான் பிரச்னையா ?.... ஆயிரம் பிரச்னைங்க....! அவனுக்கு இந்தப் பேச்சுவார்த்தையிலே நம்பிக்கை இல்லே, போலிருக்கு......"

"அதெல்லாம் ஒண்ணும் இல்லீங்க..... நீங்கதான் ரொம்பப் பிடிவாதமா இருக்கீங்க. நீங்க கொஞ்சம் விட்டுக் கொடுத்தீங்கன்னு நல்லா இருக்கும்...."

"விட்டுக் கொடுக்கிறதா? எதுக்காக?.... மத்தவங்க வீட்டிலே எல்லாம் பிள்ளைங்களுக்கு எவ்வளவு பாக்கெட் மணி கொடுக்கறாங்கன்னு உனக்குத் தெரியுமா? அங்கே எல்லாம் போய் இவன் இதுமாதிரி போராட்டம் நடத்தட்டுமே,பார்க்கலாம்.....!"

"பாவங்க,' அவனுக்குத்தான் செலவு நிறைய இருக்கு. சமாளிக்க முடியல்லேன்னு சொல்றானே!... அவன் வயித்திலே அடிப்பானேன்...!"

"ஓகோ ! நீயும் அவன் பக்கம் சேர்ந்துட்டியா?.... இதோ, சொல்றேன் கேளு: இது பணமில்லாதவன் போராட்டம் இல்லே; பணக்காரன் போராட்டம்! 'உனக்கு எதுக்கு ரெண்டு டிரான்சிஸ்டர் ரேடியோ'ன்னு நம்ம பையன்கிட்டே பிடுங்கி ஒரு ரேடியோவை நான் எடுத்துக்கிட்டேன் இல்லே, அந்த ஆத்திரத்திலேதான் அவன் இப்படியெல்லாம் பண்ணறான்னு நான் சொல்றேன்.....! அவனுக்குப் போய் நீ பரிஞ்சுக்கிட்டு வர்றியே?"

★

தன் முயற்சிகள் பலிக்காததைக் கண்ட ராஜாராமன் நேரடிப் போராட்டத்தில் இறங்கினான். அதாவது உண்ணாவிரதம்! அவனுக்கு ஆதரவாக, அவனது தம்பி, தங்கைகளும் 'அனுதாப உண்ணாவிரதம்' இருந்தார்கள். ஆனால் ராஜாராமனின் தந்தை அவர்களை மிரட்டிச் சாப்பிட வைத்தார்.

மறு நாள் தகப்பனார் அலுவலகத்துக்குப் புறப்படுமுன் ராஜாராமன் அறை வாசலில் வந்து நின்று மறியல் செய்தான். 'பாக்கெட் மணியை உயர்த்துங்கள்! பிள்ளையின் வயிற்றில் அடிக்காதீர்கள்' என்று கோஷங்கள் எழுப்பினான். அவனுடைய தந்தை அவசரம் அவசரமாக வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்தாராதலால், ராஜாராமனின் குறுக்கீடு காரணமாக அவருக்கு ஆத்திரம் வந்தது. வளர்ந்த பிள்ளை என்றுகூடப் பாராமல் கன்னத்தில் அறைந்துவிட்டுப் போய்விட்டார். அன்றும் ராஜாராமன் பட்டினி !

அதற்கு அடுத்த நாள் ராஜாராமனின் தந்தை தாமாகவே முன் வந்து ராஜாராமனுடன் பேச்சுவார்த்தையைத் துவக்கினார். ராஜாராமனின் தாயின் முன்னிலையில் தந்தையும் தனயனும் பேசி ஒரு முடிவுக்கு வந்தார்கள். அதாவது:

1. ராஜாராமனுக்குக் கொடுக்கப்படும் பாக்கெட் மணி ஐம்பது ரூபாயிலிருந்து அறுபது ரூபாயாக உயர்த்தப்படும்.
2. இனி ஒரு வருட காலத்துக்கு ராஜாராமன் பாக்கெட் மணி பற்றிப் பேச்செடுக்கக் கூடாது.
3. தந்தை தன்னைக் கை நீட்டி அடித்ததை ராஜாராமன் பெரிதுபடுத்தக் கூடாது.

அன்று மாலை நண்பர்களைச் சந்தித்தபோது இந்த ஒப்பந்தம் பற்றிச் சொன்னான் ராஜாராமன். "பூ! இந்தப் பத்து ரூபாய்க்கா இவ்வளவு பாடுபட்டாய்?" என்று உதட்டைப் பிதுக்கினார்கள் நண்பர்கள்.

"என்ன பண்ணுவது ? யாராகப் பிறந்தாலும் பிறக்கலாம். அமைச்சரின் பிள்ளையாக மட்டும் பிறக்கவே கூடாது. அரசியலில் எப்படி நடந்து கொள்கிறாரோ, அதே போலத்தான் வீட்டிலும் நடந்து கொள்கிறார்! எல்லாம் என் தலையெழுத்து !" என்றான் ராஜாராமன் அங்கலாய்ப்புடன்.



"இனி இது என் வேலை!"

தி.சா.ராஜு

வீட்டுக்குள் நுழையும் போது அதிக ஒலி எழுப்பாமல் வெளி முற்றத்தில் தம் சிறிய காரை நிறுத்தினார் சுகுமாரன். கதவைத் திறந்து வெளியில் இறங்கிச் சுற்றுமுற்றும் பார்த்தார். தோட்டத்தில் ஒருவர் மண்ணை அளைந்து கொண்டிருப்பதைக் கண்டு அவரை அணுகினார். சுகுமாரன் வந்ததைக் கவனியாமல் அவர் தமது வேலையில் ஆழ்ந்திருந்தார்.

ஒரு பங்கு களிமண், அதே அளவு சாம்பல், கொஞ்சம் எள்ளுப் பிண்ணாக்கு ஆகியவற்றை நன்றாகக் கலந்து அதோடு ஆட்டு எருவைச் சேர்க்க முயன்று கொண்டிருந்தார். புழுக்கைகள் சரியாகக் கலக்காததால் அவற்றைக் கல்லில் வைத்துப் பொடியாக்கிக் கொண்டிருந்தார். சுகுமாரன் தொண்டையைக் கனைத்துக் கொண்டதும், அவர் நிமிர்ந்து பார்த்து எழுந்தார். இடுப்பில் ஓர் அரை நிக்கர், மேலே காலர் வைத்த பனியன், காலில் செருப்புக்கூட அணியவில்லை.

"ஈசுவரன் வீட்டில் இருக்கிறாரா?"—சுகுமாரன் கேட்டார்.

"ஓ. இருக்கிறாரே!"

"அவரைப் பார்க்க முடியுமா?"

"அதுதான் பார்த்துக் கொண்டே யிருக்கிறீர்களே!" — சுகுமாரனின் முகத் தோற்றம் சட்டென்று மாறிற்று. தம் இரு கைகளையும் கூப்பி வணங்கினார். "என் பெயர் சுகுமாரன், பயனீர் மில்லின் டைரக்டர்."

"அடடா, வாருங்கள்!" அவருடைய கையைக் குலுக்கப் போனவர், பின்னுக்கு இழுத்துக் கொண்டார். "இதோ ஒரு நிமிஷம்" — அண்மையில் இருந்த தண்ணீர்க் குழாயில் கை கழுவிக் கொண்டு நிஜார்ப் பையிலிருந்த கைக்குட்டையை வெளியில் எடுத்தார். "வாரத்தில் ஒரு நாள்தான் ஓய்வு கிடைக்கிறது. அன்றைக்காவது பிறந்த மண்ணுடன் உறவு கொண்டாடலாமே என்றுதான் இந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறேன்." சிரித்துக் கொண்டே கூறினார் ஈசுவரன்.

குடை நிழல் கவிழ்த்துக் கொண்டிருந்த மரத்தின் கீழ் இருவரும் கூடை நாற்காலிகளில் அமர்ந்தனர். வேலையாள் ஒருவன் வந்து பணிவுடன் நின்றான்.

"மோர் கொண்டு வா" என்று அவனிடம் கூறினார் ஈசுவரன்.

அவரை ஏறிட்டுப் பார்த்தார் சுகுமாரன். "சென்ற வாரம்தான் மாண்ட்ரீலிலிருந்து திரும்பி வந்ததாகப் பத்திரிகையில் பார்த்தேன்."

"ஆமாம். தேங்காய் நாரின் புதிய உபயோகம் ஒன்று புலப்பட்டது. அதைப் பற்றி அவர்களுக்கு எழுதியிருந்தேன். நேரிலேயே வர வேண்டும் என்றார்கள். இந்தத் துறையில் வெற்றி கிட்டினால் ஓர் இருநூறு கோடி ரூபாய் வெளிநாட்டுச் செலாவணி மிஞ்சும்."

மோர் அருந்திய பிறகு இருவரும் தோட்டத்தைச் சுற்றிப் பார்த்தனர். ஈசுவரன் அவற்றைப் பல பகுதிகளாகப் பிரித்திருந்தார். நாட்டுக் காய்கறி, வெளி தேசத்துப் பயிர் வகை, பழ மரங்கள், மணமுள்ள மலர்ச் செடிகள், வண்ணப் பூச்செடிகள். மலர்த் தொகுதியைக் கண்டு பிரமித்தார் சுகுமாரன். "அடுத்தடுத்து இன்னின்ன வண்ணங்கள்

இருந்தால் மனத்தைக் கவரும் என்று உங்களுக்கு எப்படித் தெரிந்தது?'' — அவர் கேட்டார்.

''சூரியன் அஸ்தமிக்கும்போது நீங்கள் வானத்தைப் பார்த்ததுண்டா?'' ஈசுவரன் பதிலுக்கு வினவினார். சுகுமாரன் பக்கவாட்டில் தலையை ஆட்டினார்.

''அதற்கு நம்மிடம் நேரமில்லை. அதனால் இந்த நகல் நடவடிக்கைகளெல்லாம் நமக்குப் பிரமிப்பை ஊட்டுகின்றன.''

அவர்கள் மறுபடியும் நாற்காலிகளில் உட்கார்ந்து கொண்டனர். ''உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும் என்று வந்தேன்.'' சுகுமாரன் தொடங்கினார்.

''தொழில் விவகாரமாயிருந்தால் சரி. குடும்ப விஷயமானால் என் மனைவியையும் அழைக்கிறேன்.''

''வேண்டாம்; வேண்டாம். பின்னால் பார்த்துக் கொள்ளலாம்.'' சுகுமாரன் தடை செய்தார்.

சிறு சிறு சாம்பல் நிறக் குருவிகள் மண்ணில் அலகை நுழைத்துப் புழுக்களைத் தேடின. அவை கிடைத்ததும் மகிழ்ச்சிக் கூச்சலிட்டுக் கொண்டு அண்மையில் உள்ள மரக் கிளையை நோக்கிப் பறந்தன. ஈசுவரன் பறவைக் கூண்டை ஆவலுடன் கவனிப்பதை உற்று நோக்கினார் சுகுமாரன்.

''என்னைப் பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்கள். பூர்வீகச் சொத்தை விருத்தி செய்யும் நோக்கத்துடன் நகரத்தின் எல்லையில் ஆலையைத் தொடங்கினேன். கடவுளின் கருணையால் சிரமம் இல்லாமல் வாழ்கிறேன். எனக்குச் சொந்த ஊர் தாழையூத்து.''

''திருநெல்வேலி மாவட்டமல்லவா?''

''ஆமாம்.'' சுகுமாரன் விடையிறுத்தார்.

''உங்கள் ஊர்க்காரர்களுக்கே தாமிரபரணியிடம் தனிப் பிரேமை.''

''வாஸ்தவம். அந் நீருக்கு ஈடே இல்லையா, தாக்கும்... நான் கூற வந்த விஷயம் வேறு. எனக்கு ஒரே மகள். சுந்தா என்று பெயர். இருபது வயதாகிறது. கல்லூரிப் படிப்பை முடித்து விட்டாள். நுண்கலைகளில் ஆர்வம் அதிகம். நன்றாக வீணை வாசிப்பாள்.''

ஈசுவரன் புருவத்தைத் தேய்த்துக்கொண்டார். '''சிந்தனை' என்ற ஓவியம் அவள் வரைந்ததுதானே?''

''ஆமாம், ஆமாம். கண்காட்சியில் முதல் பரிசு பெற்றது அது. வங்கப் புயல் நிவாரணத்துக்காக அதை வரைந்தாள்.''

''என் மகன் சிவகுமாரன்தான் அதை அவ்வளவு விலை கொடுத்து வாங்கினான். அந்தப் படம் என்னுடைய வரவேற்பறையில் இருக்கிறது.''

''அப்போதுதான் அவர்களிடையே அறிமுகம் ஏற்பட்டிருக்க வேண்டும். மிஸ்டர் சிவகுமாரன் கலாரசனை உள்ளவர் என்று கேள்விப்படுகிறேன்... ஆமாம், உங்களுக்குத் தஞ்சாவூர்தான் சொந்த மாவட்டமா?''

ஈசுவரன் புன்னகை செய்தார். ''பொதுவாகவே திருநெல்வேலிக்காரர்களுக்குத் தஞ்சாவூராரைக் கண்டால் பயம். அவர்கள் அதி எத்தர்கள் என்று ஒரு தவறான நம்பிக்கை.''

''அதெல்லாம் பழைய காலம். இப்போது திருநெல்வேலிக்காரர்களும் மிகவும் கெட்டிக்காரர்களாகி விட்டார்களாக்கும்.''

ஈசுவரனின் முகத் தோற்றம் சிறிய மாறுதலைக் காட்டிற்று. ''எங்களுக்குப் பூர்வீகம் தஞ்சைதான். ஆனால் சிவகுமாரனுக்குச் சொந்த ஊர் எது என்று எனக்குத் தெரியாது. ஒருவேளை அவனுடைய வரலாறு சத்தியகாம ஜாபாலனுடையதைப் போலவும் இருக்கலாம் என்பது என் கருத்து.''

சுகுமாரன் திடுக்கிட்டார். எவ்வளவோ சிரமப்பட்டும் தமது உள்ளத்திலுள் நிகழும் போராட்டங்களை முக பாவனையினால் வெளிப்படுத்தாமல் இருக்க முடியவில்லை.

ஜன்பத் வழியே சென்று கொண்டிருந்த சுகுமாரனின் நெஞ்சில் ஈசுவரன் கூறிய செய்திகள் நிழலாடிக் கொண்டிருந்தன. அவைகளைத் தெரிந்து கொள்ளாமலே இருந்திருக்கலாமே என்றுகூட அவர் மனம் எண்ணமிட்டது....

...தீபாவளிக்கு இரண்டு நாட்கள் முன்பு. அந்த ஆண்டு குளிரும் மழையும் சற்று முன்னதாகவே வந்துவிட்டன டெல்லிக்கு. தோலைத் துளைத்துக் கொண்டு எலும்புக் குருத்தை உலுக்கி விடும் குளிர் காற்று. தரியாகஞ்சில் பலவித மிட்டாய்களை வாங்கிக் கூடையோடு பின் சீட்டில் வைத்து விட்டுக் காரை திலக் மார்க்கெட்டுக்கு ஓட்டுகிறார் ஓர் இளைஞர். சாந்தினி சௌக்கிலும் நசநசவென்று தூறுகிறது. காரைச் சதுக்கத்தில் நிறுத்திவிட்டுக் கடைத் தெருவுக்குள் நுழைகிறார் அவர். துணிமணிகளைப் பொறுக்கித் தேர்ந்தெடுத்து வாங்கி வருவதற்குள் இருட்டி விட்டது. டிக்கியைத் திறந்து அதனுள் சாமான்களை வைக்கச் சொல்லிவிட்டுக் காரைக் கிளப்புகிறார் இளைஞர் ஈசுவரன்.

'பூம், பூம்'... முக்தா ஓடி வந்து கதவைத் திறக்கிறான். கடுங் குளிரை எதிர்க்க முரட்டுக் கம்பளி போர்த்தியிருக்கிறான் அவன். காரேஜில் காரை நிறுத்திவிட்டுச் சாவியை அவனிடம் கொடுத்த பிறகு வீட்டுக்குள் துணி மாற்றிக் கொள்ளும் பொருட்டு நுழைகிறார் அவர். சற்று நேரத்துக்கெல்லாம் வெளியில் யாரோ சச்சரவிடும் ஒலி. முக்தா உரக்கக் கூவுகிறான். யாரையோ வைகிறான்.

டிரஸ்ஸிங் கவுனை அணிந்தவாறே ஈசுவரன் வெளியே வருகிறார். ''என்ன சத்தம் இங்கே?'' முக்தா காரேஜின் மூலையைக் காட்டுகிறான். கரிச் சாக்கு ஒன்றைப் போர்த்திய சிறுவன் குறுகிப் போய் நிற்கிறான்.

''யார் அது?''

''பின் பக்கத்துக் கதவைத் திறந்தால் அங்கே இவன் தெரிகிறான் சாஹிப். பெரிய திருட்டுப் பையன். ஏண்டா வந்தாய் என்றால் 'பஹுத் சர்தி, பூக்' (கடும் குளிர், பசி) என்கிறான்.''

பின் ஆசனத்தில் வைக்கப் பட்டிருக்கும் மிட்டாய்ப் பொட்டலங்களைப் பார்க்கிறான் முக்தா.

அட்டைப் படக் கதை



அவைகளில் எதுவும் கவலைபடவில்லை. சிறுவனை அணுகுகிறான். அவனிடமிருந்து அனல் அடிக்கிறது. நெற்றியைத் தொட்டு விட்டுக் கையைப் பின்னுக்கு இழுத்துக் கொள்ளுகிறான். "முக்தா! பையனை உள்ளே அழைத்துப் போ. ஹீட்டருக்குப் பக்கத்தில் உட்கார வை" என்கிறார் ஈசுவரன்.

கார் மறுபடியும் வெளியேறுகிறது. திரும்பும்போது அதனுள் மருத்துவர் ஒருவரும் உட்கார்ந்திருக்கிறார். படுத்திருக்கும் சிறுவனின் தோளில் ஊசி மூலம் மருந்து. "உன் பெயர் என்ன பையா?" டாக்டர் வினவுகிறார். "குமார்" கமறிய குரலில் பதிலிறுக்கிறான்.

"சிவ குமார்". — ஈசுவரன் அவனைத் திருத்துகிறார்.

இரவு முழுவதும் அவனுடைய படுக்கை அருகில் முறை வைத்து உட்கார்ந்திருக்கின்றனர் ஈசுவரனும் அவரது மனைவியும். சிறுவனுடைய உதடுகளைப் பிரித்துக் குளுகோஸ் நீரைச் செலுத்துகிறாள் மஞ்சுளா.

"பாபு, க்ரீம் பாலிஷ் தல் பைலே." — அந்தச் சிறுவன் ஜுர வேகத்தில் பிதற்றுகிறான். கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கிறார்கள். வறண்டு கிடக்கும் தலை முடியைக் கோதுகிறாள் மஞ்சுளா. சிறிய வட்டமான முகம். செவ்விற உதடுகள். கன்னங்களில் 'ரூஜ்' தடவிய சிவப்பு. எவ்வளவு கீழ் மட்டத்துக் குழந்தையானாலும் என்ன? இந்த ஊர்க் குழந்தைகள் அழகாகத்தான் இருக்கிறார்கள்.— ஈசுவரன் எண்ணமிடுகிறார்.

மறுநாள் காலையில் வந்த மருத்துவர் வெப்ப மானியைப் பார்த்துவிட்டுத் திருப்தி தொனிக்கப் பேசுகிறார். அந்த ஆண்டு தீபாவளிக்கு அவர்கள் வீட்டில் ஒரு புதிய உறுப்பினர். மூன்றே மாதங்களில் அந்தப் பையன் அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவனாகவே ஆகிவிட்டான்.

"முதன் முதலில் அவன் என்னைச் 'சாஹிப்' என்றும், என் மனைவியை 'பீபிஜி' என்றும் தான் அழைத்தான். அம்மா, அப்பா என்று அவனுடைய சொற்களை மாற்ற இரண்டு மாதங்கள் பிடித்தன. ஈசுவரன் சொன்னதை நினைவுகூர்ந்து சுகுமாரன் தலையைக் கோதி விட்டுக் கொண்டார். 'இறைவா, இது என்ன சோதனை?'

ஈசுவரனின் உரையாடல் திரும்பத் திரும்ப அவரது செவிகளில் ஒலித்தது. "விவரம் தெரிந்த பிறகு என்னிடம் வந்தவன் சிவகுமாரன். என்னிடம் சகல மரியாதையும் காட்டுகிறான். என்னுடைய எல்லா வேலைகளையும் தானே செய்தால்தான் அவனுக்குத் திருப்தி ஏற்படுகிறது. என்றாலும் ஒரு மகன் தந்தையிடம் பெற வேண்டிய அன்புரிமையை அவன் வலிய எடுத்துக் கொள்ளவில்லையே என்று என் மனைவியும் நானும் தனிமையில் கூறி வருத்தப்படுவது வழக்கம். அந்த நெருக்கத்தை இந்தப் பிறப்பில் ஏற்படுத்த முடியுமா என்றுகூட நான் சந்தேகப்படுகிறேன்."

"அவனுடைய பெற்றோர்கள் யார் என்று அறிய நீங்கள் முயற்சி எடுத்துக்கொள்ளவில்லையா?"


"மிகுந்த சிரமப்பட்டதன் பேரில் சில தகவல்கள் கிடைத்தன. அவனுடைய தாய் பாஞ்சாலத்திலிருந்து வந்த அகதிக் குடும்பத்தைச் சேர்ந்தவள். பாகிஸ்தானில் கயவர்களின் சிறுமைக்குள்ளாகி மீட்பு முகாம் ஒன்றிலிருந்து டெல்லிக்கு வந்தவள் — நாட்டுப் பிரிவினையால் ஏற்பட்ட காஷ்வல்டி. என்னுடைய காரில் ஏறிப் படுத்துக் கொண்டான் பாருங்கள், அதற்கு முந்தைய தினம்தான் அவனுடைய தாயார் சப்தர்ஜங் ஆஸ்பத்திரியில் காலமானாள்."

நான் அறிந்த விவரங்கள் எவற்றையும் தம் மனைவியிடமிருந்தும், மகளிடமிருந்தும் சுகுமாரன் மறைக்கவில்லை. எல்லாவற்றையும் கூறிவிட்டுத் தமது கருத்தையும் வெளிப்படுத்தினார்.

"இந்தப் பிறப்பில் நான் என்ன தொழில் செய்து கொண்டிருந்தாலும் என் தந்தையையும் பாட்டனாரையும் எனக்குத் தெரியும். அவர்கள் சிறந்த கல்விமான்கள். அறநெறியிலிருந்தும், சமய அனுஷ்டானங்களிலிருந்தும் வழுவாதவர்கள். என் முன்னோர்களில் ஒருவர் நாயக்க மன்னரின் அவையில் பதஞ்சலிப் பட்டம் பெற்றவர். அவருடைய புத்தி விசாலத்தை எண்ணி அவரை நாயக்க மன்னன் சிவிகையில் சுமந்து போவது போல் ஒரு சித்திரம்கூடத் திருமலை நாயக்கர் மகாலில் உள்ளது. ஆகவே என் மகள் தன் பிறப்பைக் குறித்து அறியாத ஒருவனுக்கு மனைவியாவதை நான் விரும்ப மாட்டேன். அதற்காக என் மகளின் சுதந்திர உணர்ச்சியையும் புண்படுத்த மாட்டேன். முடிவை உங்களிடமே விட்டு விடுகிறேன்."

பின்புறத்துத் தோட்டத்து மாமரத்தில் குயில் ஒன்று கூவித் தன் அவாவிலா ஏக்கத்தை வெளிப்படுத்திற்று. மாம் பூக்கள் இலைகளையே மறைத்தன. மனத்தை நிறைக்கும் மணம். இலைகளில் பிஞ்சுகள் அரும்பின. காற்றில் பல உதிர்ந்தும் போயின. பால் வடுக்கள் தோன்றின. காய், செங்காய், கனி, பழங்களின் மணத்தினால் தோட்டமே கிறக்கம் கொண்டது. பருவங்கள் மாறின. ஆனால் சுநீதா மாறவில்லை. அடுத்த முறை மறுபடியும் குயில்கள் கூவத் தொடங்கும் முன்பு சிவகுமாரனுக்கும் சுநீதாவுக்கும் திருமணம் நிறைவேறிற்று. ஈசுவரனின் இல்லமே புதுக் களையுடன் விளங்குவதைப் போல் தோன்றியது.

தனது தளிர்க் கரங்களினால் சிவகுமாரனின் கழுத்தைச் சுநீதா அணைத்திருக்கும் புலர் காலைப் பொழுதில் வாசலில் பால்காரன் குரல் கொடுப்பான். சிவகுமாரன் எழுந்திருந்து



Interpub/GSC/5/72R Tam

சுநீதாவின் இதழ்களை சரமாக்கி விட்டு ஓடுவான். மூலையில் வைத்திருக்கும் மஞ்சள் நிறக் கூடையைப் பகலுக்குக் கொண்டு போவான். அதில் காய்கறிக் கழிவுகள் நிறைந்திருக்கும். பாலை வாங்கி வைத்து விட்டு அவன் வரவேற்பு அறையைச் சுத்தம் செய்வான். தோட்டத்துக்குச் சென்று மலர் கொய்து வருவான். அடுத்து ஈசுவரனின் முகக்ஷவரத்துக்கு வெந்நீர். அதையடுத்த செய்கைதான் அவளுக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்காதது. பெரியவருடைய காலணிகளை ஒழுங்காகத் துடைத்து மெருகேற்றுவான். தூசு படாமல் அவற்றின் மேல் சல்லாத் துணியைப் போட்டு மூடுவான். காரை காரேஜிலிருந்து எடுத்து அதன் என்ஜினை ஒரு தரம் இயக்கி, ஹாரனை அழுத்திச் சரிபார்த்து...சொல்ல முடியாத மனச் சுமையுடன் சுநீதா படுக்கையை விட்டு எழுந்திருப்பாள்.

கணவனிடம் இதைக் குறித்துப் பூடகமாகச் சொல்லிப் பார்த்தாள். சில நாட்கள் பொறுத்து 'எங்கள் வீட்டில் இந்த வேலைகளையெல்லாம் செய்வதற்கு ஆள் வைத்துக் கொண்டிருக்கிறோம்' என்று வெளிப்படையாகவே கூறினாள். 'வேப்பமரத்துக்கு வெல்லப் பாகு ஊற்றினாலும் அதன் இலை என்னவோ கசக்கத்தானே செய்யும்' என்று இடித்தும் காட்டினாள். எல்லாவற்றையும் புரிந்து கொண்டு சிவகுமாரன் சிரிப்பால் மழுப்பி விடுவான். ஒரே ஆண்டுக்குள் அவர்களிடையே இடைவெளி அதிகமாயிற்று. மகப் பேற்றுக்காகத் தாய் வீட்டுக்குப் புறப்பட்ட சுநீதா ஓர் உறுதியுடன்தான் வெளிக் கிளம்பினாள். 'அப்பா சொல்லைத் தட்டியது பிசகு' என்று கூறித் தாயைக் கட்டிக் கொண்டு அவள் கேவியபோது அவளுடைய தாய்க்கும் துயரம் நெஞ்சை அடைத்தது.

ஆண் குழந்தை பிறந்த செய்தி கேட்டு ஈசுவரன், மஞ்சுளா இருவருமே வந்தனர். சில நாட்கள் கழித்துச் சிவகுமாரனும் வந்து குழந்தையைப் பார்த்து மகிழ்ந்தான். ஆனால் சுநீதாவின் மனம் இருண்டு விட்டது. அந்தக் குழந்தையையே வேற்றாளாக, ஏதோ தகாத உறவு முறையில் வந்த உறுப்பினனாக அவள் எண்ணத் தொடங்கினாள். ஆண்டொன்று உருண்டும் தன் கணவன் வீடு திரும்புவது குறித்து அவள் எண்ணவே இல்லை.

அப்போதுதான் குர்ஜீத் கௌர் அவளைக் காண வந்தாள். அவளும் சுநீதாவும் சக மாணவிகள். அவளுக்கு நைஜீரியாவில் விவாகமாகி யிருந்தது. கணவன் பெரிய செல்வந்தர் என்று அவள் கேள்விப்பட்டிருந்தாள். அமிர்தசரஸில் தொடங்கி நந்தேத் வரை யாத்திரை செல்ல வந்தவர்கள் டெல்லியில் தங்கினார்கள். அப்போதுதான் குர்ஜீத் சுநீதாவைச் சந்தித்தாள்.

''நாளை குருபரப். என்னோடு நீயும் குருத்வாராவுக்கு வர வேண்டும். என் குழந்தைகளுக்கு அமிருதம் வழங்கப் போகிறோம்'' குர்ஜீத் அவளை அழைத்தாள். அமிருதம் வழங்குவது என்பது (அம்ருத் ஷக்னு) சீக்கியர்களிடையே ஞான ஸ்நானத்தை ஒத்த ஒரு சடங்கு.

இத்தனை ஆண்டுகள் டெல்லியில் வாழ்ந்த போதிலும் ஒரு குருத்வாராவுக்குள் கூடச் சுநீதா சென்றது கிடையாது. சீஸ்கஞ்ச் ஆலயத்தின் வெளியில் பரவசத்துடன் நின்ற மக்கள் கூட்டத்தைக் கண்டு அவள் பிரமித்தாள்.

குர்ஜீத் அவளை ஒவ்வொரு பகுதியாகக் கொண்டு போய்க் காட்டினாள். யாத்திரிகர்களின் காலணிகளைப் பணிவுடன் பெற்று ஒரு மூலையில் . எடுத்துச் சென்று அவைகளைத் துடைத்து வைத்தார் ஒரு முதியவர். அவருடைய வெண் தாடி வயிற்றைத் தொட்டது. இடிந்த சுவரொன்றின் பகுதியைச் செப்பனிட்டுக் கொண்டிருந்தார்கள். கொத்தனுக்கு உதவியாகச் செங்கல்லும் மண்ணும் சுமந்து சென்ற மங்கையை நோக்கினாள் சுநீதா. அவள் மத்திய அரசாங்கத்துத் துணைக் காரியதரிசி ஒருவரின் மனைவி.

உணவு வட்டிக்கும் லங்கருக்கு அவளை அழைத்துச் சென்றாள் குர்ஜீத். எச்சில் தாலங்களையும் தம்ளர்களையும் சாம்பல் தடவிக் கழுவிக் கொண்டிருந்த பெண்களை வியப்புடன் நோக்கினாள் சுநீதா. ஜரிகை பளபளக்கும் மக்மல் துப்பட்டாவை அணிந்த அந்த மங்கையர் ஒவ்வொருவரும் ஐம்பது தோலா பொன்னகையாவது அணிந்திருந்தார்கள்.

சுநீதாவும் தலையில் முக்காடு அணிந்தாள். அவளைத் 'தர்பார் சாஹிப்'புக்கு அழைத்துச் சென்றாள் குர்ஜீத். அங்கே உரை நிகழ்த்திக் கொண்டிருந்தவர் ஒரு தென்னிந்தியர். சற்றுக் கூர்ந்து கவனித்தாள். சாகித்திய அகாதமிப்



''என்னங்க இது போர்டு! இயல்வது கரவேல்னு போட்டிருக்கு?''

''இயன்றவரைக்கும் கறக்காதே, கொடுத்ததை வாங்கிக்கோன்னு அர்த்தம்!''

பரிசு பெற்ற தெலுங்குக் கவிஞர் அவர். தெளிவான ஹிந்தியில் பேசிக் கொண்டிருந்தார். ''...உழைப்பின் பெருமையை உலகுக்குக் கூறிய பெரியவர் பாபா நானக். அதை வலியுறுத்த எழுந்தது அவர் வகுத்த சமுதாயம்... சம்ஸ்கிருதத்தில் கையைக் 'கரம்' என்று அழைப்பார்கள். எங்கள் தெலுங்கிலும் அதற்குச் 'செய்' என்றுதான் பெயர். கைகளைக் கடவுள் கொடுத்ததற்கே உழைக்க வேண்டும் என்ற எண்ணம்தான் அடிப்படை. வேதங்களில் 'ப்ரபோத: கர தர்சனம்' என்று சொல்லியிருக்கிறது. காலையில் எழுந்ததும் கைகளைப் பார். அதன் மூலம் எவ்வளவு நன்மை செய்ய முடியும் என்று எண்ணு... முன்னாட்களில் எந்தப் பொதுக் காரியங்கள் தொடங்கப்பட்டாலும் அதில் மன்னரும் பிரதானிகளும் கலந்து கொண்டு உடலுழைப்பைத் தருவார்கள். இந்தக் காலத்தைப் போல் நாடா மட்டும் வெட்டுவது வழக்கமில்லை. பிரான்ஸ் தேசத்தில் அதிகம் கல்வி அறிவில்லாத சகோதரர் லாரன்ஸ் என்ற ஞானி வாழ்ந்தார். மடாலயத்தில் குருமார்களின் எச்சில் தாலங்களை எடுத்துக் கழுவுவது அவரது பணி. மற்றவர்கள் அவரை எள்ளி நகையாடினார்கள். ஆனால் அன்னை மேரி அவருக்குத்தான் அருள் புரிந்தாள்...'' கவிஞரின் பேருரையைக் கேட்டவர்களின் நெஞ்சு விம்மிச் சிலிர்த்தது.

சுநீதா திரும்பும்போது நாற்சந்தியில் பெரும் கூட்டம் குழுமியிருந்தது. அங்கே காரை நிறுத்திக் கவனித்தாள். வங்காள அகதிகளுக்காகக் கல்லூரி மாணவர்கள் வழிப்போக்கர்களின் காலணிகளுக்கு மெருகிட்டுக் கொண்டிருந்தார்கள். அருகிலிருந்த உண்டியல்கள் நிரம்பி வழிந்தன.

திலகர் பாலத்தைக் கடந்து இடதுபுறம் திரும்பியபோது, ''வேண்டாம், மோதி காலனிக்குச் செல்லுங்கள்'' என்று காரோட்டியிடம் சுநீதா கூறினாள். கேள்விக்குறி விகசிக்க அவளை ஏறிட்டுப் பார்த்த குர்ஜீத்தைக் கேட்டாள் அவள்: ''நீ என் மாமனார், மாமியார், கணவர் அனைவரையும் பார்க்க வேண்டாமா?''

குர்ஜீத் தலையில் முக்காட்டைத் தரித்துக் கொண்டாள். உதடுகள் சுக்மணிப் பாடல்களை முணுமுணுத்தன.

ஈசுவரன் அவர்களைப் பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்றார். பேரனைக் கட்டிக் கொண்டு கண்ணீர் வடித்தாள் மஞ்சுளா. ''நேற்றுத் தான் சிவகுமார் மீரட்டுக்குப் போனான். கரும்பு பிழியும் இயந்திரத்தில் ஒரு புதிய மாற்றத்தைச் செய்திருக்கிறான் அவன். அதைப் பரிசோதிக்க ஜெர்மனியிலிருந்து சில நிபுணர்கள் வந்திருக்கிறார்கள். இன்றிரவு திரும்பி விடுவான்'' என்றார் ஈசுவரன்.

பெரு விருந்துக்குப் பின் குர்ஜீத் தம்பதி குழந்தைகளுடன் திரும்பினார்கள். வெளிவாசல் வரை சென்று அவர்களை வழி அனுப்பினாள் சுநீதா. சிவகுமாரன் அன்று இரவு திரும்பியபோது மணி ஒன்றாகி விட்டது. அவன் தன் தனி அறைக்குச் சென்று உறங்கியும் போய்விட்டான்.

இரவு எந்த வேளையில் உறங்கத் தொடங்கினாலும் அதிகாலையில் படுக்கையை விட்டு எழுந்து விடுவது சிவகுமாரனின் வழக்கம். அதேபோல் அன்று கண் விழித்து வரவேற்பறைக்குச் சென்றதும் அங்கே பித்தளைத் தாலத்தில் புது மலர்கள் பறித்து வைத்திருப்பதைப் பார்த்து வியந்தான். அலமாரி இருந்த மூலையில் விளக்கு எரிந்தது. அங்கேயிருந்த காலணிகளைத் துடைத்து மெருகிட்டுக் கொண்டிருந்தாள் சுநீதா. ஒரு கணம் வியப்புடன் அவளை ஏறிட்டு நோக்கினான் சிவகுமாரன். வாசலில் பசு மாட்டின் குரல் கேட்டது. 'பீபீஜீ...'

கூடத்து அறைக்குச் சென்று அந்த மஞ்சள் வண்ணக் கூடையைத் தூக்கிக் கொண்டு வந்தான் சிவகுமாரன். இடையே சுநீதா ஓடிவந்து கதவைத் திறந்தாள். அவனுடைய கையிலிருந்து கூடையை வாங்கிக்கொண்டு, ''இனி இது என் வேலை, நீங்களிருக்கட்டும்'' என்று கூறிவிட்டுப் பசுவினிடம் சென்றாள்.

பசுமாடு ஆவலுடன் அந்தக் காய்கறிக் கழிவுகளில் நாவைச் சுழற்றி விழுங்கிற்று. மடியை முட்டி முட்டி ஊட்டிய கன்றை உதைக்கப் பின்னங் காலைத் தூக்கி விட்டு மறுபடியும் கீழே வைத்தது. சொட சொடவென்று அது சிறுநீர் கழித்து முடியும்வரை காத்திருந்து விட்டு அதன் கால்களை அணைத்தான் பால்காரன். 'சொர், சொர்' என்ற சீரான ஒலி. பளபளக்கும் பித்தளைப் பாத்திரத்தில் வெண்ணுரை.

பத்திரிகைக்காரப் பையன் வாசலில் இருந்தபடியே நாளேட்டைக் குறி பார்த்து வீசினான். அது ஒழுங்காகப் பூந்தோட்டியின் பின்னால் சென்று செருகிக் கொண்டது.

தன் இரு கரங்களாலும் பசுவின் கழுத்தைச் சொறிந்து கொடுத்தாள் சுநீதா. அது தலையை உயர்த்தி வாலைத் தூக்கிற்று.

குழந்தைகளின் சிரிப்பில் குபேரப்பட்டணம்!

☐ தமிழிலே குழந்தைகளுக்கு எழுதுவோர் 370 பேர் இருக்கிறார்கள். தொண்ணூற்று நாலு வயது ராஜாஜியிலிருந்து இருபது வயதுக்காரர் வரையில் உள்ள இவர்களிலே கவிஞரும், கதாசிரியரும், நாடகாசிரியரும் பள்ளி ஆசிரியரும், கல்லூரி ஆசிரியரும் அரசாங்க அதிகாரிகளும் ஓவியரும், துணைவேந்தரும் உள்ளனர்! சந்தேகமிருந்தால் நாலாவது குழந்தை இலக்கிய மகாநாட்டில் துணைவேந்தர் சுந்தர வடிவேலு அவர்கள் வெளியிட்ட "குழந்தை எழுத்தாளர் யார் எவர்?" என்ற நூலை வாங்கிப் பாருங்கள்! *



இத்தனை பேரும் எதற்காக எழுதுகிறார்கள்? இன்று குழந்தைக்கு எழுதினால் வெளியிட அதிக வாய்ப்பும் இல்லை, வருமானமும் இல்லை. ஆயினும் எழுதுகிறார்கள். ஏன்?— இவர்கள் குழந்தைகளின் சிரிப்பில் குபேரப் பட்டணத்தையே காண்பதுதான் காரணம்!

குழந்தைக் குலத்திடம் உள்ள நம்பிக்கை காரணமாகத் தொண்டாற்றும் இவர்களைப் பாராட்டினார், தமிழக கவர்னர் கே. கே. ஷா அவர்கள்.

☐ ஐம்பதாண்டுகளாக ஆசிரியர் பணி புரிந்து, குழந்தை நூல்கள் படைத்து, குழந்தைக் குலத் தொண்டுக்காகவே தம் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டுள்ள 'வைத்தண்ணா' என்ற திரு சி. என். வைத்தீஸ்வரனுக்கு மாநாட்டில் பாராட்டுக் கேடயம் வழங்கினார் கவர்னர்.


இவ்வாறே, குழந்தைகளுக்கு என்றே 125 சிறந்த நூல்களை வெளியிட்டுள்ள பழனியப்பா பிரதர்ஸ் அதிபர் திரு செ. மெ. பழனியப்பாவுக்குப் பாராட்டுப் பதக்கம் வழங்கினார் கவர்னர்.

☐ இந்த மாநாடு வெளியீட்டு மயமாக இருந்தது! பாராட்டப் பெற்ற எழுத்தாளர் வைத்தண்ணா எழுதிய 'பகலும் பாலும்' என்ற புது நூலைப் பாராட்டுப் பெற்ற பதிப்பாளர் திரு பழனியப்பா வெளியிட்டார்!

திரு ஏ. வி. மெய்யப்பச் செட்டியார் தமிழ்க் குழந்தைகளுக்கான பாப்பாப் பாடல்களை இசைத்தட்டுக்களாக வெளியிடத் திட்ட

* வெளியிட்டோர்: குழந்தை எழுத்தாளர் சங்கம், சென்னை—17; விலை: ரூ. 2.00.







○ மத்திய அமைச்சரும் கன்னட எழுத்தாளருமான சரோஜினி மஹிஷி குழந்தைப் புத்தகக் காட்சியைத் திறந்து வைத்தார்.

○ மகாநாட்டைத் துவக்கி வைத்த தமிழக கவர்னர் கே.கே. ஷாவிடம் குழந்தைகளுக்கு எழுதப்பட்ட தமிழ் நூல்களில் நூதன அமைப்புள்ள ஒரு புத்தகத்தைப் பற்றிக் கூறுகிறார் குழந்தை எழுத்தாளர் சங்கத் தலைவர் அழ வள்ளியப்பா. துணைத் தலைவர் தம்பி சீனிவாசன் கவர்னருக்கு மறுபுறம் இருக்கிறார்.

○ குழந்தை எழுத்தாளர் யார் - எவர் நூலின் முதல் பிரதியை முதுபெரும் எழுத்தாளர் திரு தி. ஐ. ர. அவர்களிடம் வழங்கி வெளியிடுகிறார் துணைவேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு.

○ பாப்பாக்களுக்கென்றே ஏ. வி. எம். நிறுவனம் தயாரிக்கும் இசைத்தட்டுக்களை வெளியிட்டார் கவர்னர்.

யிட்டுள்ளார். அந்த வரிசையின் முதல் இசைத்தட்டை அன்று கவர்னர் வெளியிட்டு வைத்தார். 'தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு' என்ற கவிமணியின் பாடலும், பாரதியின் பாப்பாப் பாட்டும் அதில் பதிவாகியுள்ளன.

திரு சுந்தர வடிவேலுவோ "யார் எவர்?" நூலை வெளியிட்டு வைத்தார்.

மத்திய அமைச்சர் சரோஜினி மஹிஷி பல பயனுள்ள கருத்துக்களை வெளியிட்டார்!

□ குழந்தைப் புத்தகக் காட்சியைத் துவக்கி வைத்து, "குழந்தை இலக்கியம் — இன்றும் நாளையும்" என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்குக்குத் தலைமைவகித்த டாக்டர் சரோஜினிமஹிஷி அரசை அதிகம் எதிர்பாராமல், பெற்றோரும், பதிப்பாளரும், ஆசிரியரும் எழுத்தாளரும் குழந்தை இலக்கியத்தை வளர்க்க வேண்டும் என்றார். இரண்டு தலைமுறைகளில் சமூக, அரசியல், பொருளாதார மாறுதல்களால், குழந்தைகளுக்குச் சொல்ல வேண்டிய விஷயமும் பாணியும் எப்படி மாற வேண்டியிருக்கின்றன என்று விளக்கினார்.

□ குழந்தைகளுக்காக ஒரு பாடலரங்கம் கவிஞர் கண்ணதாசன் தலைமையில் நடைபெற்றது. 13 கவிஞர்கள் புதுப் பாடல்களை வெளியிட்டனர். அமெரிக்க மாமா பிடித்து வைத்துள்ள அம்புலி மாமா முதல் அதிசயப் பிறவி ஆக்டோபஸ் வரை பல பாடல்கள். அத்தனை பாடல்களையும் குழந்தைகளே பாடிக் காட்டினார்கள். கவிஞர்கள் வாயே திறக்கவில்லை! ஒரு புதுமையான, போரடிக்காத கச்சிதமான கவியரங்கமாக இருந்தது இந்த நிகழ்ச்சி.

□ மாலைச் சிறப்பு நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த நீதிபதி மகராஜன் கூறியது போல் குழந்தைகளின் எதிர்காலம் நல்ல எழுத்தாளர்களைப் பொறுத்திருக்கிறது.

இருபத்திரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து நற்பணியாற்றும் சங்கத்தையும் இதன் தலைவர் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவையும் பெற்றோரும் ஆசிரியரும் சக எழுத்தாளரும் பதிப்பாளரும் வாழ்த்தினார்கள்.

குழந்தைகள் கலைக் களஞ்சியத் தலைமைப் பதிப்பாசிரியர் திரு ம. ப. பெரியசாமித் தூரன் அவர்கள் தலைமையில் வரவேற்புக் குழு நன்கு செயல்பட்டதை மாநாட்டின் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் உணர முடிந்தது.

இந்த ஆண்டு புத்தகக் காட்சியில் 1,170 குழந்தைப் புத்தகங்களைத் தமிழில் ஒரே சேரத் திரட்டி அமைத்திருந்தார் திரு ரத்தினம். இந்த மகாநாட்டுச் சூழ்நிலை வரும் ஆண்டுகளில் இன்னும் பல நூல்கள் வெளியாகத் துணை புரியட்டும். — அ. ஆ.

படித்துப்பாருங்கள்

அம்புலிக்கு வயது இருபத்தைந்து!

என்ன சிரிக்கிறீர்கள்? வானத்திலுள்ள அம்புலியைக் குறிப்பிடவில்லை. உங்கள் வீட்டுக் குழந்தைகளின் உள்ளத்திலே கொலுவீற்றிருக்கும் 'அம்புலி மாமா' பத்திரிகையின் வயதுதான் இருபத்தைந்து ! ஒரு பத்திரிகை, அதுவும் குழந்தைகளுக்கான பத்திரிகை நடத்துவதென்பது சாதாரண விஷயமல்ல! எல்லா மதத்தினரும் மொழியினரும் பாராட்டும் வகையில் நடத்துவது அதைவிடப் பெரிய காரியம். பாரத ஒருமைப்பாட்டை வளர்க்கும் வகையில் பத்து மொழிகளில் ஒரே பத்திரிகை வெளி வருவதானால் அது எத்தனை பெரிய சாதனை! அந்தச் சாதனையை நிகழ்த்தி இருபத்தைந்து வருஷங்களாகக் குழந்தைகள் உலகில் தனக்கென ஒரு தனியான இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறது, அம்புலிமாமா குழந்தைகள் பத்திரிகை. சந்திரனைக் கண்டால் குழந்தைகளுக்கு எத்தனை குதூகலமோ அத்தனை ஆனந்தம் பாரத மொழிகள் பத்திலும் சந்திரனின் பெயர் தாங்கிவரும் இந்தத் தரமான பத்திரிகையைக் கண்டால். குழந்தைகளை வருங்கால நல்ல பிரஜைகளாக்க அவர்களிடம், அன்பு, தெய்வபக்தி, வீரம் ஆகிய குணங்களை ஊட்டத்தக்க முறையில் ஒரு பத்திரிகை நடத்த வேண்டும் என்று திரு சக்ரபாணி அவர்கள் கண்ட கனவை, எண்ணியதை ஏற்றத்துடன் செய்து முடிக்கும் ஆற்றல் கொண்ட திரு நாகிரெட்டி அவர்கள் நினைவாக்கித் தந்தார்கள்.

இந்த நல்ல பத்திரிகை நூறாண்டு விழாக் கொண்டாடிப் பாரதக் குழந்தைகளுக்குத் தொண்டு செய்ய வாழ்த்துகிறோம்.

இனிக்கும் நினைவுகள்

இந்த நவீனத்தில் வசந்தன் என்னும் வாலிபன் சீலியா என்னும் பெண்ணைக் காதலித்துக் குமுதி என்னும் பெண்ணை மணந்து கொள்ளுகிறான். இப்படிப் பார்க்கப் போனால் இது சாதாரண நவீனம்தான். ஆனால் இந்த நவீனத்தில் வரும் பெண் பாத்திரங்கள்..... ! இந்த நவீனத்துக்குப் புதுமையான வகையிலே மெருகு ஏற்றுகிறார்கள்.

இந்த நவீனத்தில் வசந்தனின் தாயார் செல்லம்மாளையும் சேர்த்து ஆறு பிரதான பெண் பாத்திரங்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதம். பெண்களுக்கு இயல்பான பொறுமை, பொறாமை, பாசம், தியாகம் முதலிய உணர்ச்சிகளைக் கன ஜோராக மோதவிட்டுக் கதையை நடத்திச் செல்லும் ஆசிரியை 'கோமகள்' ஆண் மனத்தையும் வெகு அழகாகச் சித்திரித்து வெற்றி கண்டிருக்கிறார். ஏற்கனவே 'கல்கி' நேயர்கள் இனித்துச் சுவைத்த நவீனம் புத்தக உருவம் பெற்று மீண்டும் மகிழ்விக்க வந்துள்ளது.

பிரசுரம்: பாரி புத்தகப் பண்ணை, 576, பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை—5; விலை: ரூ. 5—25.



பீதிப்படம் வேண்டுமா?

முதல்வர் பிறந்த நாளையொட்டி தஞ்சை மாவட்டம் திருவாரூரில் அமைக்கப்பெற்ற 'கண் அறுவைச் சிகிச்சை முகாம்'மினைத் தமிழக அரசு செய்தித் துறையினர் செய்திப் படமாக எடுத்துப் பல இடங்களில் திரையிட்டுள்ளனர். அதில் மருத்துவர்கள் சிறு குழந்தைகள் முதல் வயதான முதியோர்கள் வரை கண் சிகிச்சை செய்து கொள்பவர்களின் கண்களை இரு விரல்களினால் பிதுக்கி விழிகளை வெளியே பயங்கரமாக எடுப்பது, கண்களில் ஊசி போடுவது, நீர் ஊற்றுவது, மருந்திடுவது, கட்டுவது, இன்னும் இவை போன்ற பயத்தை ஏற்படுத்தும் செயல்களைப் படமாக்கி இருக்கின்றனர். இக்காட்சிகளைக் காணும் மக்களுக்கு அருவருப்பு ஏற்படுமாறும் மனம் நோகுமாறும், மருத்துவர்கள் நோய் உள்ளவர்களிடம் நடந்து கொள்ளும் முறையினைக் கண்டு வேதனை உண்டாகுமாறும் படம் பிடித்துள்ளனர். அரசு செய்யும் இலவசச் சிகிச்சையினைப் படமாக்கி மக்களுக்குக் காட்ட வேண்டியதுதான்; இல்லையென்று கூறவில்லை. அதற்கென்று மக்களுக்குப் 'பீதி' ஏற்படும் படியாகவா படமாக்குவது? சஸ்திர சிகிச்சை நுணுக்கங்களைப் படம் பிடிப்பது மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு மட்டுமே இருக்க வேண்டும்; பொதுமக்களுக்கு அல்ல.

திருச்செங்காட்டங்குடி
13—7—72 டி.எஸ்.வி. நாகராஜன்

வேலை வாய்ப்பு!

பதிவுசெய்து மூன்று ஆண்டுகளுக்குப் பின் இதுவரையில் மூன்று வாய்ப்புக்கள் வேலை வாய்ப்பகத்திலிருந்து வந்தன. ஆனால் முதலில் வந்த வாய்ப்பு குறித்த நாள் கழிந்த பின்பும், இரண்டாம் வாய்ப்பு குறித்த நேரம் கழிந்த பின்பும்தான் எனக்கு வந்தன. இக் குறைகளை அலுவலகத்தாரிடமே கேட்டேன். அதற்கு ஏதோ தவறுதலாகிவிட்டது என்று சமாதானம் கூறினர். மூன்றாவதான வாய்ப்பு 19—7—72 அன்று 11 மணிக்குக் கிடைத்தது. 18—7—72 அன்று அஞ்சல் செய்யப்பட்ட அக்கடிதத்தில், 19—7—72 அன்று காலை 8 மணிக்கே வருமாறு குறித்திருந்தனர். குற்றம் வேலைவாய்ப்பகத்தாருடையதுதான் என்பது தபாலாபீசாரின் முத்திரைகளிலிருந்து தெரிந்தது. வேலை வாய்ப்பகம் பணிபுரிவதே இப்படித்தானா?

தனியார் நிறுவனங்களிலும் ஆட்களைக் குறித்த சதவிகிதம் வேலை வாய்ப்பகத்திலிருந்தே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கூறிய அரசு, முதலில் வேலை வாய்ப்பகத்தில் இதுபோன்ற குறைகள் பலருக்கும் ஏற்படாவண்ணம் சீரமைக்க முற்பட்டால் நன்றாயிருக்குமே!

சென்னை — 11
21—7—72 ஆர்.எல். சந்திரசேகரன்

மிஸ் இந்தியா

தேசிய கீதத்தை அவமதித்ததற்காக பம்பாயில் அறுபத்தாறு பேரைப் போலீசார் கைது செய்து வழக்குத் தொடர்ந்தனர். ஆனால் இவ்வார 'இல்லஸ்ட்ரேட் வீக்லி'யில் (23—7—72) 'மிஸ் இந்தியா'வாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் மானம், மரியாதை, மதிப்பைத் தான் இழந்ததோடு, தன் உடலின் மேல் அரைகுறையாகத் தேசியக் கொடியைச் சுற்றிக் கொண்டு 'பிரிட்டன்' மக்கள் முன் அரை நிர்வாண கோலத்தில் நின்று காட்டியதன் மூலம் நம் நாட்டின் கௌரவத்தையும் பாழாக்கியுள்ளார். தேசியக் கொடியினை அவமானப்படுத்தியது நாட்டையே அவமானப்படுத்தியது ஆகும்.

தேசியக் கீதத்தை அவமதித்ததற்காகக் கைது செய்த அரசு, தேசியக் கொடியைத் துஷ்பிரயோகம் செய்தவர்களின் மேல் நடவடிக்கை எடுக்குமா?

சென்னை — 4
25—7—72 கருணைக்கதிரவன்

இடது கைப் பழக்கம்

சென்ற 30—7—72 இதழில் இடது கைப் பழக்கத்தைப் பற்றிய துணுக்கு வாசித்தேன். இதோ, இன்னும் சில தகவல்கள்: இடது கைப் பழக்கத்தை ஆங்கில மொழி வெறுக்க ஆரம்பித்துவிட்டது. (Left-handed compliment) என்றால் கேலி என்று பொருள்.

லத்தீனில் 'இடது' என்பதற்கு என்ன சொல் தெரியுமா? 'ஸினிஸ்டர்'! 'ஸினிஸ்டர்' (Sinister) என்றால் ஆங்கிலத்தில் 'தீய நோக்குடைய' என்று பொருள்.


இடது கைக்காரர்கள் சங்கங்கள் ஏற்படுத்தியிருக்கின்றனர். இடது கைக்காரர்களுக்கு ஏற்றபடி கடிகாரங்கள், மோட்டார் கார்க் கதவுக் கைப் பிடிகள் முதலியவையும் இப்போது தயாராகின்றன.

மகாத்மா காந்தி, 'நாம் நமது இடது கையைச் சரியாகப் பயன்படுத்துவதில்லை. அதையும் உபயோகிக்க வேண்டும்' என்று அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார். அதோடு நிற்காமல், தமது இடது கையால் நூல் நூற்றிருக்கிறார். மீராபெஹனுக்குக் கடிதங்கள் எழுதியிருக்கிறார், உணவுகூட உண்டிருக்கிறார். ஓர் அதிசயம், ஆனால் உண்மை: மா சே துங்கும் இப்படியே அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்! சீனாவில் போர் வீரர்களுக்கும், மாணவர்களுக்கும், அவர்களது இடது கையையும் உபயோகிக்கப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

திருவண்ணாமலை — 2
1—8—72 ஏ. சங்கரன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31.
Managing Editor: T. Sadasivam

ஆறே வாரங்களில் ரூ. 35 லட்சம் அன்னியச் செலாவணி செலவில் இளமை பொருந்திய எஞ்ஜினீயர்களும் தொழிலாளர்களும் கொண்ட ஒரு குழு என்ன செய்ய முடியும் தெரியுமா?



வருடந்தோறும் நம் தேசத்திற்கு ரூ. 2.5 கோடி அன்னியச் செலாவணி மிச்சப்படுத்த வழி செய்ய முடியும்.

ஆம், ரூ. 35 லட்சம் அன்னியச் செலாவணி செலவில் ஒரு ரிங் ரோலிங் மில் இணைக்கப்பட்டுள்ளது. அதன் பயனாக வருடந்தோறும் இறக்குமதித் தடுப்பின் மூலம் ரூ. 2.5 கோடி அன்னியச் செலாவணி தேசத்திற்கு மிச்சமாகும். முழுமையாகச் செயல்படும்போது இந்த மில்லில் 6 கிலோகிராம் வரை எடையும், 90 மி.மீ. முதல் 200 மி.மீ. வரை அளவும் கொண்ட 20 லட்சம் ரிங்குகள், தயார் செய்யப்படும். இவை ஆன்டி-ஃப்ரிக்ஷன் பேரிங்குகள், ஆட்டோமொபைல் மற்றும் இதர என்ஜினீயரிங் தொழில்களுக்கு இன்றியமையாதவை.

இந்தியாவில் முதல் முதலாக இணைக்கப்பட்டுள்ள இந்த தொழிற்சாலை, அதற்கான உபகரணங்கள் வந்து சேர்ந்த ஆறே வாரத்திற்குள், வெளிநாட்டு நிபுணர்களின் உதவி இன்றி, சராசரி 26 வயதே கொண்ட என்ஜினீயர்கள் குழுவின் உதவியால் நிறுவப்பட்டு, இயக்கப்பட்டிருக்கிறது.

எங்கள் பலம் உறுதிமிக்க எஃகில் மட்டுமல்ல,
திறமை மிக்க ஊழியர்களிலும் உள்ளது.

TH.2974

டாடா ஸ்டீல்

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)